# தமிழ்ப் பண்பாடு

பதிப்பாசிரியர்

முனைவர் க.த. திருநாவுக்கரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# தமிழ்ப் பண்பாடு

முனைவர் க.த. திருநாவுக்கரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamil̲ Paṉpāṭu |
| Author | : | Dr.K.D. Thirunavukarasu |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | A412 |
| Language | : | Tamil |
| Edition | : | First 2001, Second |
| Year of Publication | : | 2009 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Elegant |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 11 Point |
| No. of Pages | : | viii+112 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.40/- (Rupees Forty Only) |
| Printed by | : | Today Graphics<br>S.R. Complex<br>14/192, Bells Road<br>Triplicane<br>Chennai - 5 |

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

தமிழ்ப் பண்பாடு குறித்து முனைவர் க.த. திருநாவுக்கரசு அவர்கள் எழுதியுள்ள இந்நூல் மூன்றாம் பதிப்புநிலை பெறுவதிலிருந்து இந்நூலுக்கும் நூலாசிரியருக்கும் உள்ள சிறப்பு எண்ணிப் பார்க்கத் தக்கதாகும். பல்துறை அறிஞரான பேராசிரியர் அவர்கள் எமது நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் ஆவார்.

பிராகிருத மொழியில் **த்ரமிளம்** என்றும், **திரமிள தேச சங்காதம்** என்றும், கி.பி. 7-8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வடமொழி நூல்களில் **திரமிளர், தமிளர்** என்னும் சொல்லாட்சிகளிலும், **லலிதாவிஸ்தாரம்** என்னும் பௌத்த சமயநூல் **திராவிடி** என்னும் எழுத்து முறையைச் சுட்டுகிறது (பக். 3-4) என்றும் பல நூல்களை ஆதாரங்கள் காட்டித் தமிழின் தொன்மைச் சிறப்பினை விளக்குகிறார்.

வாழ்வியல், பழக்கவழக்கங்கள், அழகுக்கலைகள், ஆன்மிக நெறி, மெய்யறிவு எனப் பல தலைப்புகளில் தமிழ்ப் பண்பாடு குறித்த தேடலை முன்வைத்து இந்நூலை மக்களுக்குக் கூடுதலாகச் சிந்திக்கத் தந்துள்ளார் நூலாசிரியர்.

முல்லை சான்ற **கற்பு** என்பது முல்லை மலர் கற்பு நெறி மாறாக் காதல் வாழ்க்கைக்குரியதாகத் தமிழர் வாழ்ந்தனர் என்றும், **பூப்பலி** செய்து இறைவழிபாடு செய்யும் **பூசெய்** (பூசை) முறை சங்க காலத்திலேயே தோன்றிவிட்டது (ப. 40) என்றும் இயற்கையோடு இயைந்த தமிழர் வாழ்வியல் குறித்த அரிய தகவல்கள் நூலாசிரியரால் விளக்கப்பட்டுள்ளன.

இசைக்கலை, சிற்பக்கலை, கட்டடக்கலை போன்ற தனித் தன்மைகளைச் சுட்டி, **திராவிடக் கலைப்பாணி** எனத் தனித்த இடம் வரலாற்றில் இடம்பெற்றிருப்பதை எடுத்துக்காட்டுகளுடன் நினைவுபடுத்துகின்றார்.

**யாதும் ஊரே யாவரும் கேளிர்** (புறம். 192)

ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க்கு உதவுதல்
(கலி. 133:6)

நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் (புறம். 195)

எனும் தமிழ் அறநெறிகளை ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என நூலாசிரியர் பழந்தமிழ் நூல்களிலிருந்து ஆதாரங்கள் காட்டி, தமிழ்ப் பண்பாட்டின் பல கூறுகளைப் பல நிலைகளில் இந்நூலில் விளக்கியுள்ளார். தமிழர் பண்பாடு குறித்து அறியவுள்ளோருக்கு இந்நூல் வழிகாட்டியாக அமையும்.

தமிழ்ப் பண்பாடு பல நிலைகளில் வெளிப்படுத்தப்படுகிறது. சான்றாக:

> இல்வாழ்க்கையில் முதன்மை இடத்தைத் தலைமை இடத்தைப் பெண்ணே பெற்றாள். அவள் அடக்குமுறைக்கு ஆளாகி அல்லற்படவில்லை. தனி உரிமையோடு தற்சிந்தனை உடையவளாக இகவாழ்க்கையளவில் விளங்கினாள். குடும்ப வாழ்க்கையில் ஆண்களோடு ஒத்த உரிமை உடையவர்களாக மகளிர் விளங்கினர். இல்லத்தரசியரைக் குடும்ப வாழ்க்கையின் சுமையாக அக்காலத் தமிழர்கள் கருதவில்லை. இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதவராக ஆண்களுடைய உயிர்நாடியாக இல்வாழ்க்கையில் ஈடுபட்ட மகளிர் பாராட்டப்பட்டனர். சங்க காலத்தில் குடும்பப் பெண்கள் மதிப்பு வாய்ந்தவர்களாகவும் சிறப்புமிக்கவர்களாகவும் போற்றப்பட்டனர். (ப. 15)

என இல்வாழ்க்கை பற்றியும்

> திருமணத்திற்குரிய நல்ல நாளையும், நல்ல வேளையையும் பார்த்துத் திருமண நாளை நம் முன்னோர் உறுதி செய்தனர். பெரிதும் வளர் பிறையில் திங்களும் உரோகிணியும் ஒன்றாகச் சேர்ந்து விளங்கும் நன்னாளையே தேர்ந்து எடுத்தனர். விடியற்காலையில் திருமணத்தை நடத்தினர். திருமண நாளிற்கு முன்பு வீட்டின்

> முற்றத்தில் வெண்மணல் பரப்பி, பந்தல் அமைத்து, அழகிய தோரணங்கள் கட்டினர். முரசுகள் முழங்கின. திருவிளக்கு சுடருடன் ஒளிர்ந்தது. கடவுளைப் போற்றி வழிபட்டனர். சுற்றத்தார்க்கும் மற்றவர்க்கும் உணவு அளித்தனர். மணமகளை ஒப்பனை செய்து மணப்பந்தருக்கு அழைத்துவந்தனர். பூவும் நெல்லும் கலந்த நீர் நிறைந்த குடங்களைச் செம்மை நலமிக்க முதுபெண்டிர் தலைமீது சுமந்து வந்தனர். குழந்தைகளைப் பெற்ற வாழ்வரசிகள் நால்வர் திருமணப் பந்தருக்குள் நுழைந்தனர்; முறை முறையாகக் குடங்களைப் பெற்ற மணமகள்மீது பூவும் நெல்லும் விளங்குமாறு நீரையூற்றி முழுக்காட்டினர்; முழுக்காட்டும்போது "கணவனால் என்றும் விரும்பப்படும் மனைவியாக இருப்பாயாக" என்று வாழ்த்தினர். பெற்றோரும் உடன்பிறந்தோரும் "பெருமை மிகு வீட்டிற்குரிய தலைவியாய் வாழ்க" என்று வாழ்த்தித் தலைவனிடம் தலைவியை ஒப்படைத்து வாழ்த்தொலி எழுப்பினர். பிறகு அன்றிரவே மணமகனும் மணமகளும் மணவறையில் கூடி மகிழுமாறு தனியே விடப்பட்டனர்.
>
> (பக். 18-19)

எனத் திருமண முறை பற்றியும்

> வரலாற்றுக் காலம் நெடுக விருந்தோம்பும் பண்பு தமிழரிடையே தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருந்து வருகிறது......
>
> பண்டைத் தமிழர் விருந்தோம்பலைச் சிறந்ததோர் அறமாகப் போற்றினர். இதனை அவர்களுடைய அன்றாட வாழ்வின் நிகழ்ச்சிகளில் இருந்து தெளியலாம். (ப. 21)

என விருந்தோம்பலைப் பற்றியும் விளக்கியுள்ளார் நூலாசிரியர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இந்நூல் மறுபதிப்புப் பெறுகிறது. காலம் உணர்ந்து நூல்களைத் தமிழ்ச் சமூகத்திற்குத் தருவதில் மகிழ்கிறது. இந்நூல் மறுபதிப்புப் பெறுவதில் துணைநின்ற அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது நன்றிகள் என்றும் உண்டு.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்களுக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த லோகா ஆப்செட் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

## பொருளடக்கம்


| இயல் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | தொன்மைச் சிறப்பு | 1 |
| 2 | தமிழ்மொழி | 8 |
| 3 | வாழ்வியல் | 14 |
| 4 | சிறப்புமிகு பழக்க வழக்கங்கள் | 38 |
| 5 | அழகுக் கலைகள் | 49 |
| 6 | தமிழ் முனிவர் | 63 |
| 7 | ஆன்மீக நெறி | 72 |
| 8 | மெய்யறிவு | 80 |

# இயல் - 1

# தொன்மைச் சிறப்பு

இந்திய நாடு பழம்பெரும் நாடு. உலகம் வியந்து போற்றும் அருங்கலைகள் பலவற்றின் தாயகமாகவும், மெய்ப்பொருளை ஆராய்ந்தறிய முயலும் சமய நெறிகள் பலவற்றின் பிறப்பிடமாகவும் நம் தாயகம் சிறப்புற்று விளங்குகிறது. உலகில் இன்று வரை இருபத்து மூன்று நாகரிகங்கள் அரும்பி, மலர்ந்து, மணம் பரப்பியுள்ளன. அவற்றுள் இருபத்தொரு நாகரிகங்கள் காலத்தின் கொடுமையால் வாடி வதங்கி, உலர்ந்து உதிர்ந்துவிட்டன. இரண்டே இரண்டு நாகரிகங்கள் தொல் பழங்காலம் முதல் இன்று வரை அழிந்தொழியாது, நின்று நிலவி வருகின்றன. அவை இந்திய நாகரிகமும், சீன நாகரிகமுமாகும்.

## இந்திய நாகரிகத்தின் தமிழ்ப் பண்பாடு

வாழ்க்கையில் மனிதன் முழு நிறைவை அடைவதற்காக மேற்கொள்ளும் முயற்சியின் பயனாக அமைவது பண்பாடு. முழு நிறைவான வாழ்க்கை இனிமையும் ஒளியும் உடையதாக அமையும்[1].

பண்பாட்டின் வளர்ச்சியில் பல படிநிலைகள் உள்ளன. தனி மனிதனுடைய உணர்வுகளும் செயல்களும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியுறுதல் ஒரு நிலை. தனிமனிதர்கள் ஒன்றாகக் கூடி வாழ்வதால் உருவாகும் சமூகங்களின் பண்பட்ட முன்னேற்றம் மற்றொரு நிலை. சமூகங்கள் பல சேர்ந்து ஒரு சமுதாயமாகப் பின்னிப்பிணைந்து இயங்கும்பொழுது உருவாகும் வாழக்கை நெறி, பழக்க வழக்கங்கள், கலையுணர்வு, சிந்தனை முதிர்ச்சி ஆகிய அனைத்தும் இணைந்து ஒருவகைச் சமுதாயச் சிந்தனையாக வெளிப்படுவதே பண்பாடு என்பது மூன்றாவது நிலை[2]. இம்மூவகை நிலைகளிலும் முதன்மை இடம்பெறுவது மனிதனுடைய உள்ளத்து உணர்வுகள். அவை பண்பட்டு, பதப்பட்டு, செம்மை நலமுறுவதே பண்படாகும். எனவே, இதனை நம் முன்னோர் கண்ட நாகரிகத்தின் அகக்கூறாகக் கொள்ளலாம்.

வரலாற்றுக் கதிர்கள் சென்று ஒளி வீச முடியாதத் தொல் பழங்காலம் முதல் இந்திய நாகரிகம் வற்றாத பேரூற்றாய் உலகிற்கு நாகரிக ஒளியினை வழங்கி வருகிறது. அதே சமயத்தில் பிறர் அழிக்க முயன்றாலும் அழியாது. இன்னும் இளமைப் பொலிவுடன் அது இலங்குகிறது. இந்திய நாகரிகம் இன்று நிலைத்திருக்கும் உலக நாகரிகங்களுள் பழமையானது மட்டுமன்று; இதுவரை மனிதர் உருவாக்கியுள்ள நாகரிகங்களின் சிக்கலான கூறுகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டதுமாகும். பல்வேறு இனத்தவர்களும் வெவ்வேறு வரலாறு, பண்பாட்டுப் பின்னணியைக் கொண்ட மக்களும் இந்திய மண்ணில் சந்தித்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தனிப்பண்புகளை 'இந்தியப் பண்பாட்டுக் கொப்பரையில்' போட்டு உருகச் செய்துள்ளனர். பின்னர்அவர்கள் புதியதொரு 'கலவை நாகரிகத்தை' உருவாக்கியுள்ளனர். உலக நாகரிகங்கள் அனைத்தும் பல்வேறு பண்பாடுகளின் கலப்பு, இணைப்பு, பிணைப்பு ஆகியவற்றின விளைவாகத் தோன்றியுள்ளன. உலகிலேயே வளமானதும் பழமையானதுமான இந்திய நாகரிகம் இத்தகைய கலப்பையும் இணைப்பையும் புலப்படுத்தும் நயமிகு நாகரிகமாக விளங்குகிறது.

இந்திய நாகரிகம் 'திராவிட - ஆரிய சமூகப் பண்பாட்டு' இணைப்பின் பயனாக உருவானது. இருசாராரின் மொழிகளும் பழக்க வழக்கங்களும், வாழ்க்கை முறைகளும் நற்பண்புகளும் மறறும் திராவிடருக்கு முந்திய ஆரியக் கலப்பற்ற பழங்குடி மக்களின் பண்பாடும் கலந்ததன் விளைவாகத் தோன்றியதே இந்திய நாகரிகம் ஆகும்.

இரு பண்பாடுகளின் இணைப்பு வட இந்தியாவில்தான் நிகழ்ந்தது. வேத காலத்திலும் அதற்குப் பின்னரும் இரு இனத்தவரும் கலப்புற்றனர். வேத காலத்து சமஸ்கிருதத்திலும் கூட, திராவிட மொழியின் சாயல் நன்கு படிந்திருக்கிறது. ஆரிய மொழியின் வழக்கத்திலும், திராவிட மொழியின் இயல்புகள் கலந்துள்ளதை இன்றும் நாம் காணலாம். ஆரியரது சமயம், வழிபாட்டு முறைகள், சிந்தனை, புராணக் கதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள் முதலிய அனைத்திலுமே, திராவிடக் கலப்பு காணப்படுகின்றது[3].

ஒரு ரூபாய் நாணயத்தில் எழுபத்தைந்து காசுகளுக்கு மேல் ஆரியரல்லாதாறின் ( திராவிடர் ஆஸ்திரியப் பழங்குடி மக்களின் ) பண்பாட்டுக் கூறுகள் கலந்துள்ளன என்று அறிஞர்கள் மதிப்பிட்டுள்ளனர்[4]. இந்திய நாகரிகத்தில்

காணப்படும் திராவிடப் பண்பாட்டின் கலப்பினை மதிப்பிடுகின்ற அந்த அறிஞர்கள் "இந்திய நாகரிகத்தில் காணப்படும் ஆரியர் அல்லாதாரின் பண்பாட்டுக் கூறுகளில் திராவிடப் பண்பாட்டின் கூறுகளே முதன்மையானவையும் முக்கியமானவையுமாகும். இந்தியப் பண்பாட்டின் அடிப்படை ஐம்பது விழுக்காட்டிற்கு (50%) மேல் திராவிடப் பண்பாட்டின் கூறுகளைக் கொண்டிருப்பது மறுக்க முடியாத உண்மை"[5] என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்கது.

## இரண்டும் ஒன்றே

இங்குச் சுட்டப்படும் திராவிடப் பண்பாடு என்பது பெரிதும் தமிழ்ப் பண்பாட்டையே குறிப்பதாகும். 'தமிழ்' எனும் சொல்லுக்கு நேரான சொல்லாக வடமொழியில் 'திராவிட' எனும் சொல் வழங்கி வருகிறது. அதுவும் நேரடியான திரிபு அன்று. பிராகிருத மொழியினர் 'தமிழ்' எனும் சொல்லைத் திரித்துத் 'த்ரமிளம்' எனத் தம் மொழியில் வழங்கினர். பின்னர் வடமொழிவாணர் அச்சொல்லைச் சிற்சில மாற்றங்களோடு வடமொழியில் ஏற்றுக்கொண்டனர். இக்கருத்தினை, 'இந்தியாவின் சமயங்கள்' எனும் நூலில் கார்மார்க்கர் என்பவரும் தெளிவுபடுத்தியுள்ளார்[6].

கலிங்க நாட்டின் சிறப்புமிக்க மன்னனான காரவேலன் கி.மு. 169இல் ஒரு கல்வெட்டினைப் பொறித்துள்ளான். அது பிராகிருத மொழியில் உள்ளது. அதில் 113 ஆண்டுகளாகத் தமிழ் மன்னர்கள் அயலார் (வடவர்) படையெடுப்பை எதிர்ப்பதற்கு அமைத்துப் போற்றிய கூட்டணி ஒன்றை அவன் 'திரமிள தேச சங்காதம்' என்று குறிப்பிட்டுள்ளான். 'திரமிள' எனும் சொல்லாட்சி மேலே கண்ட கருத்தினை அரண் செய்கிறது.

கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வடமொழி நூல்களிலும், கல்வெட்டுகளிலும், செப்பேடு களிலும், 'திரமிளர்', 'தமிளர்' என்னும் சொல்லாட்சியே பெருவழக்குடையதாக இருந்தது. இதனைத் தண்டி(ன்) என்னும் வடமொழிவாணர் இயற்றிய 'அவந்தி சுந்தரி கதை' என்னும் இலக்கியத்தில், தொண்டைநாடு, 'திரமிள தேசம்' என்னும் பெயரால்[7] சுட்டப்பட் டிருப்பதாலும், இக்குவாகு அரச மரபினருடைய கல்வெட்டுகளில், தமிழரைப் பற்றிய குறிப்பு வருகின்ற இடங்களில் எல்லாம், 'தமிளர்' என்னும் சொல் வழங்கப்பட்டிருந்ததாலும் அறிகிறோம்.

வடமொழியாளர் தமிழை ஒரு பிராகிருதமாகக் கருதினர். எனவே அதன் எழுத்து வடிவத்தைத் 'திராவிடி' என்ற பெயராலேயே சுட்டியுள்ளனர். 'லலித விஸ்தாரம்' என்னும் பௌத்த சமய நூல் அறுபத்து நான்கு வகையான எழுத்து முறைகளைக் குறிப்பிடுகின்றபொழுது 'திராவிடி' என்று தமிழ் எழுத்து முறையைச் சுட்டுகிறது. கிறித்துவ நூற்றாண்டிற்கு முன்னரும் அதற்குப் பின்னர்ச் சில நூற்றாண்டுகளிலும் தமிழில் அன்றிப் பிற தென்னிந்திய மொழிகளில் இலக்கியம் வளர்ச்சியுறாததால், தமிழ் எழுத்தையே 'திராவிடி' என்றும், 'திராமிளி' என்றும், 'தாமிழி' என்றும் வடநாட்டார் சுட்டியிருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது[8].

இவற்றால் தமிழரையே பண்டைக்காலத்தில் 'திராவிடர்' என்னும் பெயரால் வடமொழிவாணர் சுட்டியதாகத் தெரிகிறது[9]. எனவே, திராவிடப்பண்பாடு எனும் தொடர் இவ்வாய்வுரை முழுவதிலும் தமிழ்ப்பண்பாடு எனும் பொருளிலேயே வழங்கப்படுகிறது. இதனால் எடுத்துக்கொண்ட தலைப்பு இன்று விளக்கம்பெற இயலும்.

## தொல் பழங்காலப் பண்பாடு

ஆரியர் வருகைக்கு முன்பே, திராவிடர் நாகரிகத்தில் முதிர்ச்சியுற்றிருந்தனர். அவர்களுடைய நாகரிகம் நகரத்தை-மருத நிலத்தை - மையமாகக் கொண்டு மாட்சியுற்றது[10]. வேளாண்மைத் தொழிலிலும் கடல் வாணிகத்திலும் அவர்கள் சிறப்புற்று விளங்கினர். சமஸ்கிருத மொழியில் பட்டணத்தைக் குறிக்கும் நகரம் என்னும் சொல்லே, திராவிடமொழிச் சொல்லாகக் கருதப்படுகிறது[11]. இதனால் நாகரிகம் எனும் சொல், நகர் அகத்துச் சிறந்து விளங்கிய வாழ்வியலைச் சுட்டும் சொல்லாகத் தோன்றிப் பின்னர், விரிந்த பொருளில் வழங்கத் தலைப்பட்டமை புலனாகிறது.

திராவிடர்கள் கடற்கரையோரங்களிலும் ஆற்று வெளிகளிலும் வாழ்வதில் பெரிதும் நாட்டம் கொண்டிருந்தனர். இதனால், நீர்ப்பாசன முறையில் அமைந்த வேளாண்மைத் தொழிலில் அவர்கள் நன்கு தேர்ச்சியுற்று இருந்தனர். வரலாற்றுக் காலம் நெடுக, நீர்ப்பாசனக்கலையில் இந்தியா பெற்றிருக்கும் சிறப்பிற்கெல்லாம் மூலகாரணமாக இருந்து வருபவர் திராவிடர்களே ஆவர்[12].

குழந்தை பிறந்த சில நாட்களுக்குள் அதன் சில மயிரினை மழித்து, காதில் துளையிட்டு அணிகலன் அணியும்

வழக்கம் பண்டைத் தமிழருடையதாகும். இன்று, பெரிதும் இந்து சமயத்தைத் தழுவிய இந்திய மக்கள் அனைவராலும் இச்சடங்கு பின்பற்றப்பட்டு வருகிறது[13].

இறந்தோரைத் தாழியிலிட்டுப் புதைப்பதும், புதைக்கப் பட்ட இடத்தில் நடுகல் நட்டு, அதனை வழிபடுவதும் பண்டைத் தமிழர் போற்றிய நெறியாகும்.

இறந்தோரைத் தாழிகளிலிட்டுப் புதைத்த முறையில். தமிழருக்குரிய சிறப்பு இயல்புகள் சில புலப்படுகின்றன. பாறைகளின் நடுவே கல்லறைகள் குடையப்பட்டன. அவற்றுள் தாழிகளைப் புதைப்பதற்குச் சிறுசிறு அறைகள் அமைக்கப் பட்டுள்ளன. மூன்று அடிமுதல் பன்னிரண்டு அடி ஆழத்தில், ஆறு அடியாகிலும் ஒவ்வொன்றுக்கும் இடையே இடைவெளி இருக்குமாறு, தாழிகள் புதைக்கப்பட்டன. அக்கல்லறைகள் யாவும் புதிய முறையில் கட்டப்பட்டனவாகும். பெருங்கற்களையும் கற்பலகைகளையும் கொண்டு அவை கட்டப்பட்டன. அவற்றைப் பெருங்கற்படை[14] என்பர். இம்முறை புதிய கற்காலத்தின் இறுதியிலேனும் இரும்புக் காலத்தின் தொடக்கத்திலேனும் ( கி.மு. 1000 அளவில் ) தமிழகத்தில் வழக்கிற்கு வந்திருக்க வேண்டும் என்று தொல்லியலார் கருதுகின்றனர்[15].

இவ்வாறு இறந்தோரைத் தாழிகளில் இட்டுப் புதைக்கும் பழக்கமும், அத்தாழிகளைப் பெரிய கல்லறைகளின் உள்ளே அமைக்கும் வழக்கமும் பண்டைத் தமிழரிடையே பெருவழக்காக இருந்தன. தாழிகளைப் புதைத்த இடத்தின்மீது நீண்ட கற்கள் நடப்பட்டன. அதில் இறந்தோரின் பெயரும், பீடும், வீரதீரச் செயல்களும் பொறிக்கப்பட்டன. இக்கல்லை நடுகல் என்னும் பெயரால் சுட்டுவது பழந்தமிழர் மரபாகும். நடுகற்களை போற்றி வழிபடும் பழக்கமும் தோன்றி வளர்ந்து சிறப்புற்றதைப் பழைய தமிழ் இலக்கியங்கள் சிறப்பாகப் பேசுகின்றன[16].

தொல் பழங்காலத்தில் தமிழர்கள் பருப்பொருள் சார்பான பண்பாட்டிலும் உணர்ச்சி வயமாகும் பண்பிலும் சிறப்புற்று விளங்கினர். உணர்ச்சிக் கனிவு மிக்க அவர்கள் சிறப்பாகக் கலைத்துறையிலும் புலனெறி மெய்யுணர்விலும் ஒப்பாரு மிக்காருமின்றி மேம்பட்டிருந்தனர். இந்த மெய் யுணர்வும் புலனெறிப் பண்பினை, இறைவனோடு உள்ளத்தை ஒன்றுவிப்பதற்கு அவர்கள் மேற்கொண்ட வழிபாட்டு

முறைகளிலும் அவர்கள் பெரிதும் பயன்படுத்தியுள்ளனர். பிற்காலத்தில் பக்தி நெறியிலும் பழமையான 'யோக நெறியிலும்' இப்பண்பு நன்கு வெளிப்படுவதைக் காணலாம். இறந்தவரோடு தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொள்வதற்கும் செய்யப்படும் சடங்குகளில், திராவிடர் காட்டிய ஆர்வம் - இன்னும் தமிழ் மக்களிடையே இருந்து வரும் ஈடுபாட்டுணர்ச்சி அவர்களுடைய உணர்ச்சிமயமான வாழ்க்கையின் ஒரு கூறாகும். இதை அடிப்படையாகக் கொண்டே, பிற்காலத்தில் இறந்தவருக்குச் செய்யும் நினைவுநாள் சடங்கு என்னும் இந்துசமய வழக்கம் தோன்றியது[17].

கிறித்துவ நூற்றாண்டின் தொடக்கத்தையொட்டி வேதச் சார்புடைய சமயம், பிற சமய வழக்குகளைத் தம்முடையதாக்கிக் கொண்டது, போற்றிக் காத்தும் வருகிறது. வேதகாலத்திற்கு முற்பட்ட மக்களுடைய வழிபாட்டு முறைகள், சடங்குகள் பல வேத நெறியில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. அவற்றை அழித்தொழிப்பதற்குப் பதிலாகத் தன்னுடைய தேவைக்கு ஏற்ற வகையில் அவற்றைச் சிறிது மாற்றியும் திருத்தியும் வைதிக சமயம் அமைத்துக் கொண்டது[18].

உபநிடதக் கொள்கைகள் வேதகால ஆரியர் அறியாதவை. அக்காலத்தியப் புதிய சிந்தனையாக அவை தோன்றின. இந்தியப் பண்பாட்டின் அடித்தளத்தை அமைத்துத் தந்த திராவிடருக்கு அவை, மிகவும் பழமையானவையாகும். எனவே, திராவிடருடைய பண்பாட்டைச் சமயம், தத்துவம் ஆகியவற்றின் முதிர்ந்த நிலையின் உயர்ந்த பண்புகளே, இக்கொள்கைகள் என நாம் துணிந்து கூறலாம். தங்கள் மரபுவழிச் சிந்தனையின் அடிப்படையில் அவற்றிற்கு ஆரியர் விளக்கம் கொடுக்க முயன்றனர். அம்முயற்சியின் பயனாக முகிழ்ந்ததே உபநிடதக் கொள்கைகளாகும். இதனால் ஆரியர்கள் தனிப்பட்டவகையில் அவற்றை உலகிற்கு வழங்கவில்லை என்பது எளிதிற் புலனாகும்[19]. அவ்வுபநிடதக் கொள்கைகளுள் முதலிடம் பெறும் ஆன்மா, பரம்பொருள், மறுபிறப்பு, வினைப்பயன் போன்றவற்றைப் பற்றிய கருத்துகள் யாவும் இந்தியச் சிந்தனைக்குத் திராவிடர் வழங்கிய கொடையென நாம் அறுதியிட்டுக் கூறலாம்.

## குறிப்புகள்

1. Matthew Arnold, Culture and Anarcly C.U.P., G.B. 1969, p.69.
2. T.S. Eliot, Notes Towards the definition of Culture, Faber, London 1967, p.21.
3. Munshi, K.M., Foundations of India Culture, BVR, Bombay 1974, pp.39-40.
4. Chatterji, S.K., 'Racial Movements and Prehistoric Culture' in the Vedic Age, p.114.
5. Chatterji, S.K., Racial and Cultural Intermixture in India, in Tamil Culture, Vol.8, p.275.
6. Karmarkar, A.P., The Religions of India, Vol.I, p.VII.
7. Journal of Madras University, Vol.5, p.2 & pp.4-6.
8. Epigraphia Indica, Vol.20, pp.22-23.
9. இதன் விளக்கத்தைத் 'தமிழ்நாட்டு வரலாறு - தொல் பழங்காலம்' என்னும் நூலில் பக்.62-72 காண்க.
10. தமிழோடு இனத் தொடர்புடைய மொழிகளைப் பேசும் தென்னிந்தியரை விரிவான பொருளில் 'திராவிடர்' எனும் சொல்லினால் முதன்முதலில் குறித்தவர் டாக்டர் கால்டுவெல் என்பது கருதத்தக்கது.
11. Majumdar, R.C., ( Ed. ), The Vedic Age, p.154.
12. Chatterji, S.K., 'Contribution from different Language Culture groups' in the Cultural Heritage of India, Vol.I, p.83.
13. Hornell, J.S., The Origin and Ethnological Significance of Indian Boat Designs in the Memories of Asiatic So. of Bengal Culture, 1920.
14. Megalithic Monuments.
15. Robert Bruce Foote, Pre-historic Antiquities, p.25.
16. புறம். 305, 314, 329; அகம். 67; குறு.342.
17. Cultural Heritage of India, Vol.I, p.90.
18. Radakrishnan, S., Eastern Religions and Western Thought,p.308.
19. Brown, C., 'The Sources of Indian Philosophical Ideas' in the Studies in Honour of Mouria Bloom Field, pp.82-83.

# இயல் - 2

# தமிழ்மொழி

தென்னாட்டில் தொன்மைச் சிறப்புடன் விளங்கி வருவது தமிழ்ப் பண்பாடு. இப்பண்பாடு தொன்றுதொட்டு இன்றுவரை உயிர்த்துடிப்போடு நின்று நிலவிவருகிறது. உலகம் அறிந்தவற்றுள் சிறந்தவற்றிலும், சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றிலும் தமிழ்ப் பண்பாடு தன்னிகரற்று விளங்குகிறது.

இன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட மொழிகள் இந்திய மக்களால் பேசப்பட்டு வருகின்றன. அவற்றுள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பேசப்பட்டு வரும் மொழி, இலக்கிய வளமிக்க மொழி சிறந்த பண்பாட்டின் ஊற்றாய் விளங்கும் மொழி, உலகப் பழம்பெரும் நாகரிகங்களோடு தொடர்பு உடையதாகத் திகழும் மொழி, தமிழ்மொழியேயாகும். சமஸ்கிருத மொழி நீங்கலாக உள்ள பிற இந்திய மொழிகளின் தோற்றம், வளர்ச்சி எல்லாம் கடந்த ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்குள் அடங்கிவிடுகின்றன. இந்தியத் தொன் மொழியாக விளங்கும் தமிழ்மொழி உலகின் உயர்தனிச் செம் மொழிகளுள் ஒன்றாக விளங்குவது இங்குக் கருதத்தக்கதாகும்.

இந்திய நாகரிகம் நெடுங்காலத்திற்கு முன்பே கடல் கடந்த அயல்நாடுகளுக்குச் சென்று பரவியுள்ளது. மொகஞ்சதாரோ, ஆரப்பா பண்பாட்டுக் காலம் முதல் இன்றுவரை, இந்தியாவிற்கு வெளியே கடல்கடந்த நாடுகளில் எல்லாம் சென்று பரவியுள்ள இன்றைய இந்திய மொழி தமிழ்மொழியே என்பது மறுக்க இயலாத உண்மை.

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழுகின்ற மக்கள் பலர் தமிழைப் பேசுகின்றனர். இந்தியாவில் மட்டும் ஆறு கோடிக்கு மேல் தமிழ்மக்கள் உள்ளனர். ஸ்ரீ இலங்காவில் சற்றேறக் குறைய இருபத்தாறு இலட்சம் தமிழ்மக்கள் வாழுகின்றனர். தென்கிழக்காசிய நாடுகளான பர்மா, மலேயா, சிங்கப்பூர், ஜாவா, சுமத்திரா, தாய்லாந்து, போர்னியோ, செலிபசு, பிலிப்பைன்சு போன்ற நாடுகளில் பதினைந்து இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ்மக்கள் நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். தென்னாப்பிரிக்காவிலும் பிற ஆப்பிரிக்க

நாடுகளிலும் வாழும் இந்தியர்களுள் சற்றேறக்குறைய ஐந்து இலட்சம் மக்களுக்கு மேல் தமிழர்களாக உள்ளனர். எகிப்து, அரேபியா போன்ற இசுலாமிய நாடுகளில் இலட்சம் பேருக்குக் குறையாமல் தமிழர்கள் வாழுகின்றனர். ஐரோப்பிய நாடுகளிலும் இங்கிலாந்திலும் 1981 அளவில் ஒரு இலட்சம் பேருக்குத் தமிழர்கள் இருந்தனர். அவர்கள் அமெரிக்க நாட்டிலும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் குடியேறி உள்ளனர். இப்புள்ளிவிவரக் கணக்கைக் கருத்திற் கொண்டு நோக்கினால், உலகின் எல்லாப் பகுதிகளிலும் தமிழர்கள் வாழுகின்றனர் என்பதும், உலகில் வாழும் தமிழ்மக்களின் தொகை சற்றேறக்குறைய ஏழு கோடி என்பதும் புலனாகின்றன[1].

## பழந்தமிழ் இலக்கியம்

இந்திய இலக்கியச் செல்வத்தை வளப்படுத்தும் நற்பணியில் தமிழகம் ஆற்றியுள்ள தொண்டினை உலகப் பேரறிஞர்கள் பலர் வியந்து பாராட்டியுள்ளனர். எத்தனையோ உள்நாட்டுக் குழப்பங்களும் வெளிநாட்டுப் படையெடுப்புகளும் நடந்தும் தமிழ்மொழி தொடர்ந்து தன் இலக்கியங்களைப் படைத்து, வளர்ந்து வந்துள்ளதைப் போன்று, உலகில் வேறெந்த மொழியும் இலக்கியங்களைப் போற்றிப் படைக்கவில்லை. இடையறவு இல்லாமல் வளர்ந்து சிறக்கவும் இல்லை.

இலக்கிய வளமிக்க இந்திய மொழிகள் பலவற்றுள்ளும் சமயச்சார்பற்ற - புராணச் சார்பற்ற இலக்கியங்களை உடைய மொழியாக ஒப்பற்று விளங்குவது தமிழ் மொழியெனில், அது மிகையாகாது. மனித இனத்தின் அடிப்படை உணர்ச்சியாகிய காதலைப் போற்றிப்பாடும் 'அகப்பொருள்' பாடல்களையும், போரையும் வீரவுணர்ச்சியையும் சிறப்பாகப் பாடும் 'புறப்பொருள்' பாடல்களையும் பண்டைத் தமிழ்ப்புலவர்கள் இயற்றியுள்ளனர். அவர்கள் குறிப்பிட்ட எச்சமயத்திற்கும் தம்பாடல்களில் முக்கியத்துவம் தரவில்லை. ஆனால், அன்றைய தமிழ்மக்களின் வாழ்க்கையையும் நாட்டுப்புறக் காட்சிகளையும், நகர வாழ்வின் வளத்தினையும், இயற்கை எழிலையும் அவர்கள் ஏற்றிப் போற்றியுள்ளனர். இவ்விழுமிய பண்பு இந்திய இலக்கியத்தில் மட்டுமல்லாமல், உலக இலக்கியத்திலும் சிறப்பிடம் பெறத்தக்க வீறுடையதாகும்.

சொற்சுருக்கமும் தெளிவும் இனிமையும் இன்ப எக்களிப்பும் மனித இனத்தின் உணர்ச்சித் துடிப்பும் நிறைந்த உயிரோவியங்களாக விளங்கும் இச்சங்கப்பாடல்கள்

செம்மொழி இலக்கியங்களாகப் போற்றத்தக்கன. இவ்றோடு பிண்டாரின் படைப்புகளே ஒப்பிடத்தக்கன[2]. பிண்டாரின் படைப்புக்களைக் காட்டிலும் அமைதியழகும், சொல் நயமும் வாய்ந்தனவாக இவை உள்ளன. இந்திய நாட்டு இலக்கியங்களுள் நன்கு முதிர்ச்சியுற்றதும், மக்களுடைய உள்ளத்தின் நுட்பமான உணர்ச்சிளைச் சித்திரிப்பதும் சங்க இலக்கியமேயாகும் எனக் கூறினால் அது மிகையாகாது. சங்க இலக்கியம் மாண்புமிக்க கிரேக்கக் கலையின் வனப்பையும் நடுவுநிலைப் பண்பையும் அமைதிப்பொலிவையும் பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது[3].

உலகிலுள்ள மக்களுள் ஐந்தில் ஒரு பகுதியினரால் புத்த சமயம் பின்பற்றப்படுகிறது. புத்த சமயத்தின் புனித மொழி - வேதமொழி பாலி. பாலி மொழியில் புத்த சமய நூல்கள் எண்ணற்றவை எழுதப்பட்டுள்ளன. இத்தகைய சிறப்பு வாய்ந்த பாலி மொழிக்கு முதன்முதலில் இலக்கணத்தை வகுத்துக்கொடுத்த பெருமை தமிழகத்திற்கே யுரியதாகும். கச்சாயனர் ('கச்சி' என்ற காஞ்சியைச் சேர்ந்தவர்) முதன்முதல், பாலி மொழிக்கு இலக்கணம் எழுதியுள்ளார். இந்நூலே, இன்றுவரை பெருவழக்கு பெற்ற நூலாக விளங்கி வருகிறது[4].

புத்த சமயத்தோடு தொடர்புகொண்ட உலக மொழிகள் நூற்றைம்பதிற்கு மேற்பட்டன. ஆயினும், புத்த சமயத்தின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் விளக்கும் 'காப்பியம்' அம்மொழிகளில் இன்று இல்லை. தமிழிலுள்ள புத்த சமயக் காப்பியமாகிய மணிமேகலை ஒன்றுதான், புத்த சமயத்தின் தனிப்பெருங் காப்பியமாக விளங்குகிறது.

பழந்தமிழ் இலக்கியங்களிலேயே ஒப்புயர்வற்று விளங்குவது திருக்குறள். மக்களினத்தின் வேதமாக விளங்கும் திருக்குறளில் மில்டனின் கவிநலனும், தாந்தேயின் காப்பிய அழகும், செகப்பிரியரின் உலகப் பொதுமையும், பிளேட்டோவின் இலட்சிய நோக்கும் மாக்கசு அரேலியசின் அறவேட்கையும் ஏற்ற அளவில் இணைந்தும் இழைந்தும், கலந்தும் காணப்படுகின்றன. இத்தகைய அரும்பெரும் நூலினை உலகிற்குத் தந்து வான்புகழ் கொண்டது தமிழ்நாடு. இருபதுக்கு மேற்பட்ட உலக மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தென்கிழக்கு ஆசிய மொழிகளான மலாய், சீன, ஜப்பானிய, பர்மிய, பிஜி, மொரீஷியசு மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

சமயாசாரியர்களான சங்கரர், இராமாநுசர், இராமானந்தர் போன்றோரின் கருத்துகளுக்கும் அருளாளர்களான இராமகிருட்டிணர், விவேகாநந்தர், காந்தியடிகள் ஆகியோரின் சிந்தனைச் சுடர்களுக்குமுரிய மூல முதலை சமஸ்கிருதத்திலோ, வேறெந்த இந்திய மொழியிலும் உள்ள நூல்களிலோ காண இயலாது. அவை திருவள்ளுவ ருடைய திருக்குறளின் மரபில் வந்தவை என்பது டாக்டர் சுவைட்சரின் முடிவாகும்[5].

கற்பார் உள்ளத்தை உருக்கும் உயர்ந்த கவிதை நயத்தோடு மனித இனத்தின் அன்பினை வெளிப்படுத்துவது சிலப்பதிகாரம். காப்பியப் பண்புகள் முழு நிறைவு பெற்றதாய் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் முறையாகக் குழைத்துத் தருவதாய் அமைந்துள்ளது இம்முத்தமிழ்க் காப்பியம். புகழ்மிக்க உலப் பெருங்காப்பியங்களோடு ஒப்பாக வைத்துப் போற்றத்தக்க சிறப்புடையது சிலப்பதிகாரம்.

## பக்தி இலக்கியம்

தமிழ்ப் பண்பாட்டின் கொடுமுடியாக விளங்குவது பக்தி நெறி. அன்பே வடிவாக இறைவன் விளங்குகிறான். அவனை அடைவதற்குக் 'கானகம் சென்று, காய்கனி தின்று, கடுந்தவம் செய்து அல்லற்பட வேண்டா' என்பது இப்பக்தி நெறியின் அடிப்படைக் கோட்பாடாகும்.

"ஊன்வாட உண்ணாது உயிர் காவலிட்டு
உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து
தாம்வாடத் தவம் செய்ய வேண்டா"

என்றும்,

"பொருப்பிடையே நின்றும் புனல் குளித்தும் ஐந்து
நெருப்பிடை நிற்கவும் வேண்டா"

என்றும் தமிழகத்தில் தோன்றிய அருளாளர்கள் மக்களுக்கு அறிவித்தனர். உள்ளத்தே உறையும் இறைவனை, வழிபடுவதற்குரிய பக்தி நெறியை அருள்நெறிச் சான்றோர்கள் இரண்டாக வகுத்தனர். ஒன்று திருக்கோயில் வழிபாடு; மற்றொன்று ஆன்ம வழிபாடு. நடமாடும் கோயில்களாக உள்ள மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசுவரனுக்கு உகந்த தொண்டு என்பது அன்புநெறியின் கோட்பாடு. இவ்வன்பு நெறியின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்கும் தேவாரம் திருவாசகம் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலியன

தமிழிலே உள்ளமை உலகறிந்த உண்மை. பக்தி நெறியின் பழங்காலச் சுவடுகளைத் தமிழல்லாத மற்ற இந்திய மொழிகளில் காண்பது அரிது[6].

இதனை, தமிழ்மக்கள் தங்களுடைய ஆழ்ந்த இறை அன்பினை-பக்திப்பெருக்கை தேவாரம், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் என்னும் நூல்களிலுள்ள பாடல்கள் மூலமாக வெளிப்படுத்தியுள்ளனர். இதைப்போன்று பக்திச்சுவை நலம் கனிந்த பாசுரங்களை வேறு எம்மொழியிலும் காண இயலாது. செமிடிக் ( எபிரேயிய ) மொழியில் 'ஒருவனே இறைவன்' எனும் கோட்பாடு அறிவியல் மாண்புடன் அறிவொளி வீசுகிறது. பேரரசுக் கொள்கையினை உலகிற்கு அளித் இலத்தீன் மொழியின் உயிர்ப்பாக விளங்குவது சட்டமாகும். கலையின் கவின்மிகு வடிவமாக இலங்குவது கிரேக்க மொழி. பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம் ஆகிய புத்துலக மொழிகள் அறிவியல் முன்னேற்றப் பாதையில் ஏறுநடை போட்டுச் செல்லுகின்றன. தத்துவத்தின் திருக்கோயிலாக சமஸ்கிருத மொழி திகழ்கிறது. மனித வாழ்க்கையின் உயர்ந்த பண்புகளை அறியவேண்டுமானால், நாம் இம்மொழிகளை அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம். இதைப்போன்றே கடவுள் பக்தியினை அறிவினால் அறியவும்; உள்ளத்து உணர்வினை உயரவும் உலகம் தமிழ் மொழியிடத்து வந்தாக வேண்டும். கடவுள் பித்தினையூட்டி, எலும்பையும் உருக்கிவிடக்கூடிய ஆற்றல் மிக்க அன்புப் பெருக்காக விளங்கும் பாசுரங்கள் உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தத்தை அளிக்கும் அமுதமயமான இன்பப் பாடல்களைத் தன்னகத்தே கொண்டு இருப்பது தமிழ்மொழி. இப்பக்திப் பாடல்களை நாம் ஊன் கலந்து, உயிர் கலந்து ஓதினால், தமிழ்மொழியின் நயத்தையும் நுட்பத்தையும் உணரலாம் என்னும் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் துணிவை இங்குக் குறிப்பிடத்தக்க தாகும்[7].

இந்தியாவில் உள்ள சமயங்கள் ஒவ்வொன்றின் சார்பாக இயற்றப்பட்ட இலக்கியங்களை உடைய மொழியும் தமிழேயாகும். தமிழ்மொழி ஒன்றில்தான், கிறித்துவ இசுலாமிய இலக்கியங்களும், வழிபாட்டுப் பாடல்களும் காணப்படுகின்றன. வேறெந்த இந்திய மொழியிலும் இந்தியாவிலுள்ள சமயங்கள் அனைத்தினுடைய திருநூல்களும் இவ்வாறு முதல் நூல்களாக அமைந்திருக்கவில்லை.

## குறிப்புகள்

1. சீனா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகளிலுள்ள தமிழ் மக்களைப் பற்றித் தெளிவாகப் புள்ளிவிவரம் கிடைக்கவில்லை.
2. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிய கிரேக்க நாட்டுக் கவிஞர் பிண்டார்.
3. P. Meile, *L'Inde Classique*, ( ed. ) , L. Renon, Part-II, p.302.
4. Kaw, B.C., 'South India as a Centre of Pali Buddhism', in 'I.K. Ayangar's Commission Vol'., p.245.
5. Albert Schweitzer, *Indian Thought and its Development*, p.201.
6. Kamil Zvelebil, A Short Note on 'The Tamil Contribution to World Civilization' in *Tamil Culture*, Vol.V, p.296.
7. T.P. Meenakshisundaranar's Sixty-First Birthday Commemoration Volume, Annamalai University, 1961, p.23.

## இயல் - 3

# வாழ்வியல்

சங்க காலம் முதற்கொண்டே தமிழ்ப் பண்பாடு 'மனித நல நோக்கு'டையதாக இருந்து வருகிறது. மனிதன் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு வழிகாட்டுதற்கும் உதவி செய்வதற்கும் நிறுவப்படுபவையே சமுதாய நிறுவனங்களாகும் என்பதைச் சங்ககாலச் சான்றோர்கள் நன்கு உணர்ந்து இருந்தனர். இதனால் கற்பனை உலகில் மூழ்கிப் பகற் கனவுகளைக் காண்பதில் காலத்தைக் கழிக்காமல், நடைமுறை உலகிற்குப் பொருந்துவனவற்றை ஆராய்ந்து அறிந்து அவற்றை அடைவதற்குரிய வழிவகைகளில் நாட்டமுடைய வர்களாகப் பண்டைத்தமிழர் விளங்கினர். எனவேதான் அவர்கள் இலட்சியக் கனவு காணும் 'கற்பனையாளர்களாக' வாழாமல் எதையும் சாதிக்கும் 'செயல் வீரர்களாகப்' பொன்றாப் புகழ்பெற்றுள்ளார். இவற்றைக் கருத்தில் கொண்டே பண்டைத் தமிழ்ப் பண்பாட்டினை, 'வெப்ப மண்டலக் கிரேக்கப் பண்பாடு எனவும், தமிழகத்தைக் கிரேக்கத்திற்கு முற்பட்ட இந்தியக் கிரேக்கம்' எனவும் அறிஞர்கள் பாராட்டியுள்ளனர்.

### இல்வாழ்க்கை

சங்ககாலத் தமிழ்மக்கள் மனிதனுடைய வாழ்க்கை மதிப்பும் பயனும் வாய்ந்ததாக அமைய வேண்டும் என்பதில் பேரார்வம் காட்டினர். அதற்குரிய சிறந்த கருவி இல் வாழ்க்கை என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து இருந்தனர். இதனாலேயேதான் அவர்கள் படைத்த இலக்கியத்தில் வீடும் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்துள்ளன. ஆடவனும் பெண்ணொருத்தியும் கருத்தொருமித்து இணைந்து வாழ்வதே இல்வாழ்க்கை. அவர்கள் இடையே அரும்பிய காதல் உற்றார் உறவினரிடை அன்பாக மலர்ந்து பிற உயிர்களிடத்து அருளாகக் கனிந்தது. பிற்காலத்தில் இந்தக் காதலே பக்தி உணர்வாகப் பெருக்கெடுத்து ஓடியது. சங்க காலத்தில் இத்தகைய அன்பே இல்வாழ்க்கையின் பண்பாகப் போற்றப் பட்டது. அன்பு வழிப்பட்ட இல்வாழ்க்கையின் பயனாக அறம் ஒளிர்ந்தது[1].

சங்கப்பாடல்களில் இல்வாழ்க்கையை முதன்மையாகக் கொண்ட உலக வாழ்க்கையே பெரிதும் விரும்பப்படுவதைக் காணுகின்றோம். இதனால் உலக வாழ்க்கையை வெறுக்கின்ற பௌத்த, சமண சமயங்களின் செல்வாக்கு தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையை அக்காலத்தில் தாக்கவில்லை என்பது தெரிகிறது.

மகளிர் அன்பின் தலையூற்றாக விளங்கினர். இல் வாழ்க்கையில் ஈடுபடுவதற்குத் தேவைப்படும் அன்பைப் பெருக்குவதற்கு உரிய வாயிலாக - உந்துதல் சக்தியாகக் காதல் வாழ்க்கையை அன்பின் ஐந்திணை வழி வளரும் இல்வாழ்க்கை பெரிதும் போற்றப்பட்டது. இல்வாழ்க்கையில் முதன்மை இடத்தைத் தலைமை இடத்தைப் பெண்ணே பெற்றாள். அவள் அடக்குமுறைக்கு ஆளாகி அல்லற்பட வில்லை. தனி உரிமையோடு தற்சிந்தனை உடையவளாக இகவாழ்க்கையளவில் விளங்கினாள். குடும்ப வாழ்க்கையில் ஆண்களோடு ஒத்த உரிமை உடையவர்களாக மகளிர் விளங்கினர். இல்லத்தரசியரை குடும்ப வாழ்க்கையின் சுமையாக அக்காலத் தமிழர்கள் கருதவில்லை. இல் வாழ்க்கைக்கு இன்றியமையாதவராக ஆண்களுடைய உயிர் நாடியாக இல்வாழ்க்கையில் ஈடுபட்ட மகளிர் பாராட்டப் பட்டனர். சங்க காலத்தில் குடும்பப் பெண்கள் மதிப்பு வாய்ந்தவர்களாகவும் சிறப்புமிக்கவர்களாகவும் போற்றப் பட்டனர்.

தன்னலமிக்க சோற்றுப்பிண்டமாக விளங்கும் தனி மனிதனைப் பண்படுத்த செம்மைப்படுத்த இன்றியமையாதது குடும்ப வாழ்க்கை என்பது அன்றைய தமிழ் மக்களின் துணிவாகும். குடும்ப வாழ்க்கையில் மனைவிக்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டது. தமிழருடைய இல்வாழ்க்கை உள்ளத்தால் ஒன்றுபட்ட தலைவன் - தலைவியரைக் கொண்டதாக இருந்தது. இதனால் அகவாழ்வில் அன்பு தழைத்து ஓங்கியது. அறம் செழித்து வளர்ந்தது. இல்லத் தரசியைக் 'குடும்ப விளக்காக'-மனைக்கு விளக்காகிய 'வாள் நுதல்'[2] என்று சிறப்பித்துப் பாராட்டினர். அன்பும் பண்பும் நிறைந்ததாய் காதலர் இருவர் கருத்தொருமித்து நடத்தும் இல்வாழ்க்கையை-சிறப்புமிகு அறமாக-இல்லறமாகக் கருதினர்.

பண்டைத் தமிழர்கள் காதல்வழிப்பட்ட திருமணத் தையும் இல்வாழ்க்கையையும் மாண்புமிக்கதாகக் கருதினர்[1]. இல்வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் ஒழுக்கத்துடன் வாழ வேண்டும் என்னும் குறிக்கோள் ஆண்களைப் பொறுத்த

வரையில் நலங்கிள்ளி, பூதப்பாண்டியன் போன்ற சிலரைத் தவிரப் பிறரால் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. 'ஒருத்திக்கு ஒருவன்' என்னும் கொள்கையே நடைமுறையில் வீறுபெற்று விளங்கியது. இதனால் மகளிருக்கு 'உயிரினும் சிறந்தது நாணம்; நாணத்தைவிடச் சிறந்தது குற்றமற்ற கற்பு ஒழுக்கம்' என்று அறிவுறுத்தப்பட்டது[3]. கற்பின் அருமைப் பாட்டை உணர்ந்த சான்றோர்கள் தெய்வத்தன்மை பொருந்தியது கற்பு[6] என்றும் கற்பொழுக்கத்தில் சிறப்புற்று விளங்கிய மகளிரைக் 'கற்புக்கரசியர்' என்றும் போன்றினர்.

இதனால், பெண் உரிமையற்றவளாக இருந்தாள் என்பது கருத்தாகாது. ஆணைவிடப் பெண்ணிற்குக் குடும்ப வாழ்க்கையில் பல்வேறு உரிமைகளும் கடமைகளும் இருந்தன. கற்பு நெறியில் வழுவாது நின்று இல்லறத்தை இனிது நடத்திய பெண்களைப் பெருமையுடன் போற்றினர். 'இல்லத்தரசி' எனும் பொருள்படும் 'இல்லாள்' என்னும் சொல்லே இதற்குப் போதிய சான்றாகும். 'பெண்ணிற் பெருந்தக்கது இல்' என்பது அன்றையத் தமிழரின் கொள்கையாகும். பண்டைத் தமிழ் மகளிர் தம் உரிமையை நிலைநாட்டுவதில் நாட்டங் கொள்ளாமல் தம் கடமைகளை உணர்ந்து பணிபுரிவதில் கருத்துடையவராக இருந்தனர்.

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட பெண்டிர் விருந்தினரைப் போற்றி வரவேற்று உதவுவதை முக்கியமான குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். பண்டைத் தமிழரின் இல்வாழ்க்கையின் சீரும் சிறப்பும் வலிவும் பொலிவும் விருந்தோம்பும் பண்பிலே நன்கு வெளிப்பட்டது.

விருந்தோம்பலுக்கு அடுத்த நிலையில் நன்மக்களைப் பெறுவது இல்வாழ்க்கையில் பெருநோக்கமாகக் கருதப்பட்டது[4]. மக்களைப் பெறுவது இப்பிறவியில் புகழையும் தங்கள் குடிவழி அறத்து நின்று நிலைக்கவும் வழிவகுக்கும் என்று அவர்கள் நம்பினர்.

திருமணத்தின்பொழுது மணமகள், தன் மனைவியின் கழுத்தில் மங்கல நாணில் கோக்கப்பட்ட தாலியை அணிவது இன்று பெருவழக்காகத் தமிழரிடையே இருந்து வருகிறது. பண்டைக்காலத்தில் இவ்வழக்கம் இழையணிதல்[5], நெடுவீழ் அணிதல்[6], மங்கலவணி அணிதல்[7], பொன் அணிதல்[8], அம்பொன்மணி அணிதல்[9], தாலி அணிதல்[10] எனும் பல்வேறு தொடர்களால் சுட்டப்பட்டன. தமிழருடைய திருமணத்தில் தொன்றுதொட்டு தாலியோடு கூடிய மங்கலநாண் அணிதல்

சிறப்புமிக்க வழக்கமாக இருந்து வருவது இங்குக் கருதத்தக்க தாகும்.

பழிக்கு அஞ்சிப் பொருளை ஈட்டித் தாமும் நுகர்ந்து பிறர்க்கும் அளித்து வாழ்தலே - அறவோர்க்கு அளித்தலும், அந்தணரை ஓம்பலும், துறவிகளைப் பேணுதலுமே இல்லறத்தின் தலையாய கடமைகளாகக் கருதப்பட்டன.

கல்வி பயிலும் மாணவர், மொழி வளர்க்கும் புலவர், கலை வளர்க்கும் கலைஞர் முதலியோரையும் பிறர்க்கென வாழ்வதற்காகத் தம் வாழ்வைத் துறந்தவர் உழைக்கும் ஆற்றலின்றி வறியவரானோர், தம்மைச் சார்ந்தவர்களால் கைவிடப்பட்டோர், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், உற்றார், முதலியோரையும் போற்றிக் காக்கவேண்டிய பொறுப்பு இல்லறத்தில் ஈடுபட்டோருக்கு உரியதாகும்[11]. இவற்றிலிருந்து பண்டைத் தமிழகத்தின் குடிமக்களுள் இல்வாழ்க்கை மேற்கொண்டவர்க்குப் புனிதமான கடமைகள் பல இருந்தமை புலனாகின்றன.

கணவனும் மனைவியும் இருதலைப்புள்ளின் ஓர் உயிராய் இல்லறம் நடத்தும்பொழுது பிறருக்குப் ப்யன்பட வாழ்ந்தனர். புகழ்பூத்து வாழ்ந்தனர். மற்றும் அறிவறிந்த மக்களைப் பெற்று மகிழ்ந்தனர். மனைமாட்சியை மங்கலமாகப் பெற்ற இல்வாழ்க்கையினருடைய நன்கலமாக-நல்லணியாக மக்கள் பேற்றைப் போற்றினர். மயக்குறு மக்களைப் பெறாதவருடைய வாழ்நாள் பயனற்றனவாகப் போய்விடும்[12] என்பது சங்ககால மக்களின் நம்பிக்கையாகும். காதலர் இருவர் மக்களைப் பெற்று, மனையறம் காத்துச் சுற்றம் தழுவிச் சோர்விலாது சமுதாயத்திற்குப் பயன்பட வாழ்தலே இல்வாழ்க்கையின் இனிய நோக்கங்களாக இருந்தன எனலாம்.

## மகளிர் நிலை

இல்வாழ்க்கையின் இன்னொளியாக மகளிர் விளங்கினர். இன்புறு மனைவியாக அன்புறு தாயாக, பண்புறு இல்லத்தரசியாக மகளிர் அக்காலத்தில் மாண்புற்று இருந்தனர். பெண் தெய்வம் என்று போற்றப்படும் பெரு நிலையைப் பெற்றனர். கல்வி கலை பயில்வதில் அவர்கள் ஆண்களோடு சரிநிகர் சமானமாக விளங்கினர். சங்க காலத்தில் சிறப்புற்று விளங்கிய புலவர்களின் எண்ணிக்கை 473 என்று கணக்கிட்டுள்ளனர். அவர்களுள் முப்பதுபேர் பெண்பாற் புலவர்களாக உள்ளமை அக்காலத்தில் கல்வி

பெறுவதற்கு மகளிர்க்கு வாய்ப்பு வசதிகள் மிகுதியாக இருந்தன என்பதைத் தெரிவிக்கின்றது. இசைக்கலையில் அவர்கள் தன்னிகரற்ற கலைஞராய் விளங்கினர்.

பெற்றோர் இறைவனை வேண்டி நோன்பு நோற்று மகளையும் மகனையும் பெற்றனர் என்றும் சங்க இலக்கியக் குறிப்பு சங்ககாலத் தமிழ்மக்கள் சமமாகவே கருதிப் போற்றியதைப் பறைசாற்றுகிறது. "இருக்குவேத காலத்தில் காணப்பட்ட நிலைக்கு இது முற்றிலும் நேர்மாறானதாகும். அவர்கள் பெண் குழந்தைகள் பிறப்பதையே விரும்பவில்லை. ஆண் குழந்தைகளே பிறக்கவேண்டும் என்று கடவுளை வேண்டி வழிபாடு செய்தனர்" என்று குறிப்பிட்டுள்ளமை இங்கு நினைவுகூரத் தக்கதாகும்.

## திருமணமுறை

பண்டைத் தமிழருடைய திருமணம் எளிமையானது. சடங்குகள் அற்றது. அதில் புரோகிதருக்கோ எரியோம்பலுக்கோ, தீவலம் வருதலுக்கோ இடம் கிடையாது. தமிழருக்கேயுரிய திருமண முறையை இரு சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன[13].

திருமணத்திற்குரிய நல்ல நாளையும், நல்ல வேளையையும் பார்த்துத் திருமண நாளை நம் முன்னோர் உறுதி செய்தனர். பெரிதும் வளர்பிறையில் திங்களும் உரோகிணியில் ஒன்றாகச் சேர்ந்து விளங்கும் நன்னாளையே தேர்ந்து எடுத்தனர். விடியற்காலையில் திருமணத்தை நடத்தினர். திருமண நாளிற்கு முன்பு வீட்டின் முற்றத்தில் வெண்மணல் பரப்பி பந்தல் அமைத்து அழகிய தோரணங்கள் கட்டினர். முரசுகள் முழங்கின. திருவிளக்குச் சுடருடன் ஒளிர்ந்தது. கடவுளைப் போற்றி வழிபட்டனர். சுற்றத் தார்க்கும் மற்றவர்கும் உணவு அளித்தனர். மணமகளை ஒப்பனை செய்து மணப்பந்தருக்கு அழைத்துவந்தனர். பூவும் நெல்லும் கலந்த நீர் நிறைந்த குடங்களைச் செம்மை நலமிக்க முதுபெண்டிர் தலைமீது சுமந்து வந்தனர்; குழந்தைகளைப் பெற்ற வாழ்வரசிகள் நால்வர் திருமணப் பந்தருக்குள் நுழைந்தனர்; முறை முறையாகக் குடங்களைப் பெற்று மணமகள்மீது பூவும் நெல்லும் விளங்குமாறு நீரையூற்றி முழுக்காட்டினர்; முழுக்காட்டும்போது "கணவனால் என்றும் விரும்பப்படும் மனைவியாக இருப்பாயாக!" என்று வாழ்த்தினர். பெற்றோரும் உடன்பிறந்தோரும் "பெருமை

மிகு வீட்டிற்குரிய தலைவியாய் வாழ்க" என்று வாழ்த்தித் தலைவனிடம் தலைவியை ஒப்படைத்து வாழ்த்தொலி எழுப்பினர். பிறகு அன்றிரவே மணமகனும், மணமகளும் மணவறையில் கூடி மகிழுமாறு தனியே விடப்பட்டனர்.

இந்த முறையில் பண்டைத் தமிழருடைய திருமணம் எளிமையும், இனிமையும், அன்பும் பண்பும் நிறைந்ததாக விளங்கியது. இதனை "ஆரியச் சார்பற்ற திருமண முறை" என்று பேராசிரியர் பி.தி. சீனிவாச ஐயங்கார் போற்றியுள்ளமை[14] இங்குக் கருதத்தக்கதாகும்.

இத்தகைய முறையில் திருமணம் எளிமையாக, சமயச் சடங்குகள் இன்றி நடத்தப்பட்டமை பண்டைத் தமிழரின் உள்ளப் பண்பாட்டை உணர்த்துகிறது. திருமண விழாவின்போது புத்தாடை உடுத்துவதும், புது அணிகளை அணிவதும் மலர்களையும் மாலைகளையும் சூடுவதும் உண்டெனத் தெரிகிறது. திருமணத்தின்பொழுது மணமகளுக்குத் தாலிகட்டும் வழக்கம் இருந்திருக்குமாயின், இவ்விரு பாக்களில் ஒன்றிலேனும் - நீராட்டு, விருந்து முதலியவற்றைக் கூறும் புலவர் தாலிகட்டும் சடங்கினைக் குறியாதிருத்தல் கூடுமா என்னும் ஐயம் எழுகிறது.

இடைக்காலத்திலோ, இக்காலத்திலோ திருமண நிகழ்ச்சியில் மணமகளுக்குத் தாலியினை மணமகன் அணிவதைப் போன்ற சடங்கு அக்காலத்தில் திருமணத்தில் இடம்பெறவில்லை என்பது உண்மை. ஆனால் கணவனோடு வாழ்கின்ற மகளிரை - வாழ்வரசிகளை - "வாலிழை மகளிர்" என்று திருமண முறையினை விளக்கும் பாடல் சுட்டுவதை ("வாலிழை மகளிர் நால்வர் கூடி")[15] நாம் எளிதில் புறக்-கணிக்க இயலாது. மற்றும் இந்த வாலிழையை, 'ஈகை அரிய இழையணி[16] என்று மகளிர்க்குரிய சிறப்புமிகு அணியாகவும் அக்காலத்திய மக்கள் போற்றியுள்ளனர். இவற்றிலிருந்து வெறும் திருமண நாணினை (இழை) திருமணம் ஆனவர் என்பதைப் புலப்படுத்துவதற்கு அறிகுறியாக மகளிர் அணியும் வழக்கம் இருந்தது என்பது புலனாகின்றது. ஆனால் யார் மணமகளுக்கு இதனை அணிவித்தார்கள் என்பது தெரிய வில்லை. அகநானூறு 136ஆம் பாடலில் மணமகளுக்குத் திருமணத்தின்பொழுது நறுமணமிக்க மலர்களையும், வெண்ணூலையும் (மண்ணு மணியன்னமா யிதழிப் பாவைந் தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டி) வாழ்வரசிகள் (வதுவை மண்ணிய மகளிர்) சூட்டினர் என்று குறிப்பிடப் பட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது. இங்குச் சுட்டப்படும்

'வெண்ணூல் என்பது யாது?' எனும் ஐயம் உண்டாகிறது. 'பிற்காலத்திய மங்கல நாணிற்கு இது முன்னோடியா?' எனும் கேள்வி எழுகிறது. 'இதைத்தான் வாலிழை' (வெண்மையான நூல்) என்று சுட்டினரா? எனும் எண்ணமும் தோன்றுகிறது.

இவற்றையெல்லாம் ஒருங்கே இணைத்து நோக்குகின்ற பொழுது 'வாலிழை' என்பது மங்கல நாண் (மாங்கலிய சூத்திரம்) என்பதும் இக்காலத்திய தமிழருள், சில சமூகத்தினர் திருமணத்து அன்று வாழ்வரசிகளைக் கொண்டு மணமகளுக்குத் தாலியைக் கட்டுவதைப் போன்று ஒருவகை வழக்கம் சங்ககாலத்தில் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்பதும் உய்த்துணரத் தக்கனவாக உள்ளன.

சங்க மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரம் இந்த அணியையே 'மங்கலவணி'[17] எனப் போற்றுவதாகக் கொள்ளலாம். இவற்றால் சங்ககாலத் தமிழரின் திருமணத்தில் மங்கல நாண் மட்டும் அணியும் வழக்கம் இருந்ததாகக் கொள்ளுவதே பொருத்தமாகும்.

இந்தத் திருமணமுறை சங்ககாலத்தின் கடைப்பகுதியில் மாற்றமுற்றதைச் சிலப்பதிகாரத்தில் காணுகின்றோம். மாமுது பார்ப்பான் மறைவழிகாட்டிட மணமக்கள் தீவலம் வரும் பழக்கம் நகரங்களில் வாழும் மேட்டுக்குடி மக்களிடத்தும் புதியதாகப் புகுந்து செல்வாக்குப் பெறத் தொடங்கியது. சங்க காலத்தின் பிற்பகுதியில் இந்த ஆரியச் சடங்கு வழிப்பட்ட இத்திருமண முறையைத் தமிழர்கள் வியப்புடன் நோக்கியமை புலனாகின்றது.

நாமும்
நெய்பெய் தீயின் எதிர்கொண்டு
தான் மணந்தனையம் என விடுகம் தூதே
(குறுந். 106)

என்று கபிலர் திருமணச் சடங்கில் எரியோம்பலை (ஓமம் வளர்த்தலை) க் குறிப்பிட்டுள்ளார். இதையே சிறிது விரிவாக,

காதல்கொள் வதுவைநாள் கலிங்கத்துள் ஒடுங்கிய
மாதர்கொள் மாண்நோக்கின் மடந்தைதன்
துணையாக
ஓதுடை அந்தணன் எரிவலம் செல்வான்போல்
(கலித்.69)

என்று மருதனிள நாகனாரும் சுட்டியுள்ளார்.

சங்ககாலத்தின் கடைப்பகுதியில் ஆரியரின் பழக்க வழக்கங்கள் தமிழரிடம் புகுந்துவிட்டமையை இவற்றால் அறியமுடிகிறது. ஆனால் இந்தப் புதுமை மோகம் நகரத்து மக்கள் இடையில் செல்வமும் செல்வாக்கும் பெற்றவர்கள் இடையில் செல்வாக்குப் பெற்று இருக்க வேண்டும். இதனுடைய வளர்ச்சியைத்தான் இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தில் படம்பிடித்துக் காட்டுகிறார்.

## விருந்தோம்பல்

இல்வாழ்க்கையின் தலையான பண்பாக விருந்தோம்பல் கருதப்பட்டது[18]. கணவன் வீட்டில் இல்லாத போதும் மனைவி விருந்தோம்பலைக் கவனித்து வந்தாள். வந்த விருந்தினரை அன்புடன் வரவேற்று அவர்களுக்கு உதவி செய்வதற்காகத் தேவைப்படுவது என்று பொருள் என்று பண்டைத் தமிழர் கருதினர். இதற்காகப் பொருளை ஈட்டுவதில் பேரார்வம் காட்டினர்.

இருந்தோம்பி இல்வாழ்க்கை நடத்துவது 'இன்னும் இனியர்' எனக் கருதாது விருந்தினை இன்முகத்துடன் வரவேற்று உதவிகள் செய்யும் பொருட்டே எனும் தெளிந்த அறிவுடையவர்களாக அன்றைய தமிழர்கள் விளங்கினர்.

வரலாற்றுக் காலம் நெடுக விருந்தோம்பும் பண்பு தமிழரிடையே தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருந்து வருகிறது. இதற்குரிய அடிப்படை உணர்வினைச் சங்ககால மக்களிடம் இருந்து 'மரபுச் செல்வமாக' இதனைப் பெற்றுள்ளார் எனலாம்.

பண்டைத் தமிழர் விருந்தோம்பலைச் சிறந்ததோர் அறமாகப் போற்றினர். இதனை அவர்களுடைய அன்றாட வாழ்வின் நிகழ்ச்சிகளில் இருந்து தெளியலாம். சங்கப் பாடல்கள் இத்தகைய நிகழ்ச்சிகள் பலவற்றை அழகிய ஓவியங்களாகத் தீட்டிக் காட்டுகின்றன. அவற்றுள் ஒன்றை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

ஓர் இல்லத்திற்குப் பசியால் வாடிய சில பெரியோர்கள் சென்றனர். அந்த இல்லத்தரசி அவர்களை அன்போடு வரவேற்றாள். வீட்டில் இருந்த வரகும் தினையும் இரவலரின் பசியைப் போக்கப் பயன்படுத்தியதனால் தீர்ந்துவிட்டன. திருப்பித் தருவதாகக் கடன் வாங்கிச் சென்ற அண்டை அயலாரும் அந்த நேரத்தில் உதவும் நிலையில் இல்லை. அவ்வீட்டரசி செய்வதறியாது வருத்தமுற்றாள்; அடுத்த உழவுக்குப் பயன்படுத்துவதற்குப் பாதுகாப்பாக எடுத்து

வைக்கப்பட்டுள்ள தினைவிதை வீட்டில் இருக்கும் நினைவு வந்தது. ஆனால் அவ்விதைக்குரிய தினையைச் செலவழித்து விட்டால் அடுத்து விதைவிதைப்பதற்கு ஒரு சிறு மணிகூட வீட்டில் இல்லாமல் போய்விடுமே எனும் எண்ணமும் அவள் உள்ளத்தில் எழுந்தது. ஆயினும் அதற்காக அவள் தயங்க வில்லை. பசியுடன் வந்தவருக்குப் பசியைப் போக்குவது தம்முடைய இல்வாழ்க்கையின் கடமை என்பதை அவள் முக்கியமாகக் கருதினாள். உடனே விதைத் தினையை மிகுந்த மகிழ்ச்சியோடு உரலில் இட்டு, குற்றியெடுத்து அவள் உணவு சமைத்தாள். விருந்தினரை உண்பித்து மகிழ்ந்தாள்[19].

இவ்வாறு விருந்தினரைப் போற்றி வரவேற்று அவர்கள் பசியைப் போக்குவதை எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் தங்களுடைய தலையாய கடமையாகக் கருதியமை அக்காலத்தில் தமிழ்மக்களின் விருந்தோம்பும் உணர்விற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

'தனக்கு இன்னா; பிறர்க்கு இன்னா' என்பதை உணர்ந்து போற்றும் அருளுறை நெறியின் அடிப்படைப் பண்பே விருந்தோம்புதலாகும். இல்லறத்தாரின் கடமைகளுள் விருந்தோம்புதல் முதன்மை இடம்பெற்றிருந்தமைக்கு இதைப் போன்ற பல நிகழ்ச்சிகளைக் காட்டலாம்.

## உடை

இந்திய நாட்டின் பொதுவான உடை அமைப்பாக வேட்டியும் சேலையும் காட்சி தருகிறது. இவ்வுடைகள் பேரளவிற்குத் திராவிடருடைய பண்பாட்டின் கொடை யாகும். ஆண்கள் உடுப்பவை இரண்டு அதாவது இடுப்பினைச் சுற்றி அணிவது ஆடை ஒன்றும் அதற்குமேல் தோளைச் சுற்றி அணிந்த ஆடை மற்றொன்று. மகளிர் சேலையொடு கச்சினை அணிந்தனர். தைத்த சட்டைகள் 'மெய்ப்பை', 'கஞ்சுகம்'[20] எனப்பட்டன.

## தொழில்கள்

தமிழர் நாகரிகத்தின் சிறப்பிற்கும் செழிப்பிற்கும் காரணமான தொழில்கள் பல. அவற்றுள் நெல் முதலிய தானியங்களைப் பயிரிடுதல், பருத்தியைப் பயிரிடுதல், வெற்றிலைக் கொடியைப் பயிரிடுதல், கரும்பைப் பயிரிடுதல் போன்ற பல்வகைப் பயிர்த்தொழில்களைத் தொல்பழங்காலத் தமிழர் முதன்முதல் செய்யக் கற்றதோடு, அவற்றை இந்தியா முழுவதிலும் பரப்பினர்.

உழவுத் தொழிலையே நம்பி வாழ்ந்து வருபவர் தமிழர். புதிய கற்கால நாகரிகம் அரும்பிய காலத்திலேயே அவர்கள் உழவுத்தொழிலைச் செய்யக் கற்றனர். அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ள புதிய கற்காலக் கருவிகளுள் பல உழவுத்தொழிற்குரியனவாக உள்ளன. நெல்லினைப் பயிரிடும் முறையில் பண்டைக்காலம் முதற் கொண்டே தமிழர்கள் சிறப்புற்று விளங்குகின்றனர். எனவே, நெல்லைப் பயிரிடும் முறை தமிழகத்தில் தமிழ்மக்களால் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொழிலாகவே கூறலாம். நன்செய், புன்செய் என நிலங்கள் நெடுங்காலத்திற்கு முன்பே இருவகையாகப் பாகுபடுத்தப்பட்டன. நெல்லைப் பயிரிடும் விளைநிலத்தை வயல், செய், அகலி, கம்பலை, கழனி, கைதை, செறு, தடி, பனை, பண்ணை, பழவம், பானல், புலம் எனப் பல்வேறு பெயர்களால் தமிழ்மக்கள் வழங்கி வருவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

தமிழன் என்று உழவுத் தொழிலைச் செய்யக் கற்றானோ அன்றே பாசன முறைகளையும் பயன்படுத்தத் தொடங்கினான். வேளாண்மைத் தொழிலிற்கு இன்றியமையாது தேவைப்படும் நீரினைப் பாழாக்காமல் போற்றிக் காக்க அவன் முயன்றான். தமிழகத்தில் மழை பெய்யும் பருவ காலத்தைக் கண்டறிந்து, அம்மழை நீரைத் தேக்கி வைப்பதற்குப் பல வழிமுறைகளை அவன் கண்டான்.

வேளாண்மைத் தொழிலிற்குத் தேவையான நீரினை சேமித்துவைக்கப் பண்டைத் தமிழர் முயன்றனர். மழை பெய்யும்பொழுது பல ஆறுகளில் பெருக்கெடுத்து ஓடும் நீரினைத் தடுத்து சிறிய பெரிய அணைகளைக் கட்டி ஏரிகளையும், நீர்த்தேக்கங்களையும் அவர்கள் அமைத்தனர். பின்னர் கால்வாய்கள் வழியாக நீரினை வயல்களுக்குப் பாய்ச்சும் பணியினைச் செய்தனர். பெரும்பாலும் மலையடி வாரங்களில் உள்ள பள்ளத்தாக்குகளிலேயே ஏரிகளை அமைத்தனர். இந்த ஏரிகள் அல்லது கன்மாய்கள் தமிழ் நாட்டில் புதிய கற்காலம் முதற்கொண்டே அமைக்கப்பட்டு வருவதாக தொல்பொருள் ஆராய்ச்சி தெரிவிக்கிறது. இநத் ஏரிகள் இரண்டு வகைப்படும். மழைநீரினால் நிரம்பிய ஏரிகளை பெரிய ஏரிகள் எனவும், ஆற்றின் மூலம் நீரைக் கொண்டுவந்து நிரப்பப்படும் ஏரிகளைச் சிறிய ஏரிகள் எனவும் வழங்கினர். இவை பெரிய ஏரி, பேரேரி எனவும், சிறிய ஏரி சிற்றேரி ( சிறு ஏரி ) எனவும் பேச்சு வழக்கில் திரிந்து வழங்கலாயின.

இவையல்லாமல், பெரிய குளங்களையும் கிணறுகளையும் வெட்டிப் பாசன வசதிக்கு வழிசெய்துள்ளனர். கால்வாய்களில் இரண்டு வகை இருந்துவருகின்றன. வெள்ளப் பெருக்குள்ள காலங்களில் ஆறுகளின் கரைகளை மீறி வழிந்து செல்லும் நீரைப் பயன்படுத்துவதற்கு வெட்டப்பட்ட கால்வாய்களை வெள்ளக் கால்வாய்கள் என்பர். ஆண்டு முழுவதும் வற்றாது வெள்ளப் பெருக்கெடுத்தோடும் வற்றாத ஆறுகளிலிருந்து பாசனத்திற்காக வெட்டப்பட்ட கிளையாறு அல்லது கால்வாய்களை வற்றாத கால்வாய்கள் என்பர். தொன்றுதொட்டு இக்கால்வாய்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வெட்டப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இத்தகைய பாசனமுறைகள் தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வருகின்றன். காவிரியில் கரிகாலன் கட்டிய கல்லணை உலகப் புகழ்பெற்றது. பல்லவ சோழ மன்னர்கள் வெட்டிய ஏரிகள் மிகப்பல. திரையன் ஏரி (தென்னேரி) மகேந்திரப் பேரேரி போன்றவை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. குளங்களுடன் குறிப்பிடத் தக்கது தஞ்சையில் ஓடும் வெட்டாறு, வெண்ணாறு என்னும் கிளையாறுகள் போன்றவை காவிரியிலிருந்து பாசனத்திற்காக வெட்டப்பட்ட பெரிய கால்வாய்களேயாகும். கோவை மாவட்டத்தில் ஓடும் காலிங்கராய கால்வாயும் இத்தகையதேயாகும்.

தமிழ்மக்கள் பாசனப்பணிகளில் பன்னெடுங்காலமாய் சிறப்புற்று விளங்கி வருவதற்கு இவையாவும் சான்று பகர்கின்றன. தென்கிழக்காசிய நாடுகளில் - சிறப்பாகக் கம்போடியாவில் கி.பி. 1000 அளவில் உழவுத்தொழிலுக்குப் பயன்படும் வகையில் நீர்ப்பாசன முறைகள் பேரளவில் மேற்கொள்ளப்பட்டன. அம்முறைகள் பெரிதும் தமிழகத்தின் மேற்கண்ட பாசனமுறைகளை ஒத்து இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பாண்டியன் நெடுஞ்செழியனிடம் குடபுல வியனூர் என்னும் புலவர் "செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும், இவ்வுலகத்தில் இனிய புகழை நாட்ட விரும்பினும் செய்யத் தக்கதைக் கேட்பாயாக! உணவால் நிலைபெறுவது உடல். உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தேவைப் படுவது நீர்! விளைவிற்குத் தேவையான நீரையும் நிலனையும் ஒன்றாக இணைப்போர் உடம்பும் உயிரும் படைத்தோராவர். வயலில் விதைத்துவிட்டு நீர்க்கு வானத்தை நோக்கி இருப்பது இறைவன் என்று சிறப்பித்துக் கூறப்படும் அரசன் முயற்சிக்கு

இழுக்காகும். ஆகவே, நீர்நிலைகளைப் பெருகச் செய்தல் அரசரின் தலையாய கடமையாகும். அவ்வாறு செய்பவரே தம் புகழை இவ்வுலகில் நிலைநிறுத்தியோராவர். இதனைச் செய்யாதவர் தம்புகழை இவ்வுலகத்தில் நிலைபெறச் செய்யாதவரே ஆவர்"[21] என்று அறிவுரை கூறியுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

இன்றும் இந்தியாவில் மட்டும் அல்லாமல் தெற்கு ஆசிய, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நீர்ப்பாசன முறைகளில் சிறந்து விளங்குவது தமிழகமேயாகும்[22]. இத்தகைய பாசன வசதிகளைக் கொண்ட உழவுத் தொழிலையே- வேளாண்மைத் தொழிலையே- சங்ககால மக்கள் சிறப்புமிக்க தொழில்களாகப் போற்றியுள்ளனர். அக்காலத்திய வடவர்களால் உழவுத் தொழில் இழிந்த தொழிலாகச் சுட்டப்பட்டது. அத் தொழிலைச் செய்வோர் இழிந்தவர்களாகவும் கருதப் பட்டனர்[23] என்பதை இங்கு நினைவுகூர்வோமானால் வேளாண்மைத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட தமிழர் நாகரிகத்தின் சிறப்பு எளிதிற் புலனாகும்.

கரும்பைப் பயிரிட்டதுடன் அதைச் சாறு பிழிந்து, காய்ச்சி வெல்லம் தயாரித்தல் தொழிலையும் பண்டைத் தமிழர் நன்கு அறிந்திருந்தனர். பருத்தியை நூலாக நூற்று மிக மெல்லிய துகில்களையும் வண்ண வண்ண ஆடைகளையும் நேர்த்தியாக நெய்து உலகிற்கு வழங்கிய பெருமை தொல்பழங்காலத் தமிழருக்குரியதாகும்.

## கடலக வாழ்வு

நீண்ட நெடுங்கடற்கரையை இயல்பாகப் பண்டைத் தமிழகம் பெற்றிருந்தது. இதனால் தமிழ்மக்கள் அலைகளைக் கண்டு அஞ்சாது கருங்கடலில் மரக்கலத்தைச் செலுத்தி நெடுந் தொலைவில் உள்ள நாடுகளோடு வாணிகத் தொடர்பும், பண்பாட்டுத் தொடர்பும் கொண்ட கடல் மறவராய்ச் சிறப்புற்று விளங்கினர். வரலாற்று நூலின் தொடக்க காலத்திற்கு அருகில் சென்றால் இந்திய தீபகற்பத் (தமிழகத்) தின் நாகரிகத்தில் கடலக வாழ்வின் பண்புகள் பல பளிச்சிடுகின்றன. பழந்தமிழ் இலக்கியத்தில் கடல் வாணிகத்தைப் பற்றிய குறிப்புகள் நிறைந்துள்ளன. இந்திய மக்களுள் தென்னாட்டவரே கிறித்துவ ஆண்டின் தொடக்கத்தில் மேற்கத்திய நாடுகளோடும், கிழக்காசிய நாடுகளோடும் நெருக்கமான வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்[23] என்று கே.எம். பணிக்கர்

மொழிந்துள்ளமை தமிழரின் கடலக வாழ்வின் சிறப்பினை வெளிப்படுத்துகிறது.

இந்தக் கடலக வாழ்வின் சிறப்பினைக் கருத்தில் கொண்டே ரெனே குரோசெட் எனும் பிரான்சு நாட்டு அறிஞர் பண்டைத் தமிழரை 'வெப்பமண்டலக் கிரேக்கர்' என்று பாராட்டியுள்ளார்.

பண்டைத் தமிழ்மக்கள் இயற்கை அமைப்பை அடிப்படையாகக் கொண்டு தாங்கள் வாழ்ந்த நாட்டினை நான்கு வகையாகப் பாகுபாடு செய்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாகும். இவற்றுள் நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த மணல் வெளியையும் குறிப்பதாகும். கடலையொட்டி வாழ்ந்த மக்கள் இயல்பாகவே உள்ள உரமும் உடல் வலிமையும் உடையவராய் அலை கடலைக் கண்டு அஞ்சாது கலத்தைச் செலுத்தக்கூடிய கடல் மறவராய்ச் சிறப்புற்று விளங்கினர்.

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழகம் தென்கிழக்காசிய நாடுகளுக்குச் செல்லும் கடல் வழியின் மையப் பகுதியாகப் பயன்படுத்தப்பட்டது என்று சில்வென்லெவி மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்கது. இன்று கீழை நாடுகளிலும் மேற்கு நாடுகளில் சில பகுதிகளிலும் தமிழ்ப்பண்பாட்டின் சின்னங்கள் பல காணப் படுகின்றன. அவை கடலக வாழ்வின் மூலம் அந்நாடுகளோடு பண்டைத் தமிழர்கள் கொண்ட தொடர்பினால் அமைந்தவை யாகும். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' எனும் பழமொழி கடலக வாழ்க்கையில் தமிழர் கொண்டிருந்த ஈடுபாட்டை எடுத்து இயம்புகிறது.

தென்கிழக்காசிய நாடுகளில் தமிழர் நெருக்கமான தொடர்புகொள்ளுமாறு இக்கடலக வாழ்வே தூண்டியது. அந்நாடுகளில் அமைதியான முறையில் வாணிகத்தின் பொருட்டுச் சென்றவர்கள், பல குடியிருப்புகளை அமைத்துள்ளனர். அவை படை ஆற்றலினால் அமைக்கப் பட்டவை அல்ல.

பிற்காலச் சோழப் பேரரசர்கள் கிழக்குக் கடற்கரை முழுவதையும் தங்கள் ஆட்சிக்குக் கொண்டுவந்தனர், ஆற்றல் மிக்க கடல் மறவரைக் கொண்டு வலிமைமிக்க மரக்கலங்களை ஆயிரக்கணக்காக அக்கடலில் செலுத்தி பர்மா, மலேயா, ஜாவா, சுமத்திரா போன்ற நாடுகளின்மீது படையெடுத்துச் சென்று அவர்கள் வாகை சூடினர். இந்திய நாட்டை ஆண்ட

வேறெந்த அரச மரபினரும் கனவில்கூடக் கருதாத கடல் கடந்த பேரரசினைச் சோழர் குடியில் தோன்றிய மாபெரும் மன்னனான இராசேந்திரன் நிறுவ முயன்றான் என்னும் செய்தி இந்திய வரலாற்றில் ஒரு பொன்னேடாகப் பொலிகிறது.

இவை யாவும் தமிழர்கள் கடலக வாழ்வில் பெரிதும் நாட்டங்கொண்டிருந்தனர் என்பதையும் கிரேக்கரைப் போலப் பண்டை உலகின் கடலோடிகளாக அவர்கள் சிறப்புற்று இருந்தனர் என்பதையும் தெளிவுறுத்துகின்றன.

மிகப்பழங்காலத்திலேயே தமிழர்கள் கடலக வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தனர். கி.மு. இரண்டாம் நூற்றாண்டு அளவிலேயே அவர்கள் இருமுறை படை யெடுத்தனர். முதல் படையெடுப்பு மாண்புமிகு இலங்கை மன்னன் தேவனும்பிரியதிசின் இறந்த உடஜ ம் இரண்டாவது படையெடுப்பு இதற்குச் சிறிது காலத்திற்குப் பின்னரும் நடைபெற்றன... பெரிதும் இதே காலத்திலேயே (கி.மு. முதலிரண்டு நூற்றாண்டுகள்) தமிழர்கள் தென்கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று இருக்கலாம். கி.பி. முதல் நூற்றாண்டில் அவர்கள் எகிப்தோடும் ரோமப் பேரரசோடும் மிக நெருக்கமான தொடர்பினைச் செழிப்புமிகு வாணிகத்தின் மூலம் கொண்டிருந்தனர்[24] என்பதனாலும் அறியலாம்.

தமிழ்மொழியில் கடலில் செலுத்தப்படும் மரக்கலத்தைக் குறிப்பதற்கு அம்பி, ஓங்கல், ஓடம், கலம், கட்டை, மரம், சதா, சொங்கு, திமில், தொள்ளை, தோணி, நாவாய், படகு, கரிசல், பலாரி, பாதை, பாரதி, பாறு, புணை, போதம், மதலை, வங்கம், வள்ளல், பொறி, கப்பல், மரக்கலம் போன்ற பல சொற்கள் நெடுங்காலமாக வழங்கி வருகின்றன. இவை யாவும் பண்டைத் தமிழர் கடலைக் கடந்துசெல்ல சிறியதும் பெரியதுமான பலவகை மரக்கலங்களைச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததைத் தெரிவிக்கின்றன. இதனால் கடலக வாழ்க்கையில் பண்டைத் தமிழருக்கு இருந்த பயிற்சியும் தேர்ச்சியும் புலனாகின்றன. சங்கரர், சோழந்தியா எனும் இருவகைப் பெரும் கப்பல்களைப் பண்டைத் தமிழர் கடற்செலவுக்குப் பயன்படுத்தியதாக பெரிபுளூஸ் எனும் யவனரின் கையேடு கூறுகிறது[25].

மேற்கண்ட பல்வகை மரக்கலங்களுள் நாவாய் என்பது பெருங்கடலில் செல்லுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மரக்கலமாகும். இவ்வகை மரக்கலங்களில் கிடை மட்டமாக

மூன்று கோடுகள் அவற்றின் இருபக்கங்களையும் அணிசெய்யும். அவற்றில் ஒற்றை வெளித் துடுப்பும், சமநிலைப் பலகையும் சிறப்புடன் விளங்கும். வெளித்துடுப்புகள் இல்லாத இரட்டை பாய்மரக்கப்பல்களாகவும் அவை செய்யப்பட்டன. இதைப் போன்றே பொலினீசிய நாடுகளின் கப்பல்களிலும் கண் வடிவம் செதுக்கப்பட்டிருந்தது. தமிழகக் கடலோடிகளின் தாக்கத்தாலேயே இத்தகைய பழக்கம் தென்கிழக்காசியக் கப்பல் கட்டும் கலையில் இடம்பெற்றிருக்க வேண்டும். வெறும் தற்செயல் நிகழ்ச்சி எனப் புறக்கணித்துவிட முடியாது[38].

### வாணிகப்பொருள்கள்

இஞ்சி, இலவங்கம், ஏலக்காய், மிளகு போன்றவை உணவுக்கு மணமும் சுவையும் உடலுக்கு உரமும் ஊட்டும் நறுமணப் பொருள்களாகும். இவற்றை முதன்முதல் பயிரிடக் கற்றவர் தமிழர். அவற்றை உலகின் பல பகுதிகளுக்கு வாணிகப் பொருளாக ஏற்றுமதி செய்தவரும் தமிழரேயாவர். தேக்கு, கருங்காலி முதலிய பயன்படு மரங்களையும் பண்டை உலகின் நாகரிக நாடுகளுக்கு அவர்கள் ஏற்றுமதி செய்துள்ளனர். பொதியமலையின் சந்தன மரம், அகில் ஆகியவை அன்றைய உலக மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தன வாகும்.

மயிலையும் அதன் தோகையையும், குரங்கையும், யானைத் தந்தத்தையும், சங்கையும் வெளிநாடுகளுக்கு அவர்கள் அனுப்பினர். இவை யாவற்றையும்விட உலகப் புகழ் பெற்றது தமிழகத்தின் முத்தாகும். சொகுசு மிக இன்ப வாழக்கையில் ஈடுபட்ட எழில்மிகு மங்கையர் தம்மை அலங்கரித்துக்கொள்ள முத்தினைப் பெரிதும் விரும்பினர். பண்டை உலகின் பலநாட்டு மங்கையரும் தமிழ்நாட்டின் முத்தினைப் பேரார்வத்தோடு பயன்படுத்தினர். தமிழகத்திற்கு வந்த வெளிநாட்டு வாணிகர்கள் முத்தையும், மிளகையும் சந்தனத்தையும் பேரளவில் வாங்கிச் சென்றதைக் கிரேக்கரின் கடற்பயணக் குறிப்பு ஏடுகள் சிறப்பாகப் பேசுகின்றன. தென் கிழக்காசிய நாடுகளுக்கும், சீனாவிற்கும் இவ்வரிய பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

### வாணிக நிலையங்கள்

தமிழகத்து வாணிக அமைப்புகளும் நிலையங்களும் தமிழ்ப் பண்பாட்டினைப் பிறநாடுகளில் பரப்பும் பணியில் தம்மை அறியாமலேயே ஈடுபட்டிருந்தன. கடல் வாணிகத்தை நடத்துவதற்குத் தமிழகத்தில் பல அமைப்புகள் தோன்றி

இருந்தன. அவை நாநாதேச திசையாயிரத் தைந்நூற்றுவர் மணிக்கிராமத்தார், நகரத்தார் வளஞ்சியார் அஞ்சு வண்ணத்தார் எனப்படும் வாணிகக் குழுக்களாகும். கடல் கடந்த நாடுகளில் சென்று வாணிகம் செய்வதற்கு அரசர்களின் ஆதரவை அவை பெற்றிருந்தன.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் மலேயாவில் தகோபா என்னுமிடத்தில் மணிக்கிராமம் எனும் தமிழ்நாட்டு வாணிகர் சங்கம் ஒன்று சிறப்புற்று விளங்கியது. சீகாழிக்கு அருகிலுள்ள நாங்கூரைச் சேர்ந்த வாணிகன் ஒருவன் அவனிநாரணன் என்ற சிறப்புப் பெயரைக் கொண்டிருந்த மூன்றாம் நந்திவர்மன் ஆட்சிக்காலத்தில் (கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில்) மலேயாவில் பெராக்கு மாவட்டத்திலுள்ள இவ்வூரில் குளம் ஒன்றை வெட்டி, அதன் கரையில் தமிழ்க் கல்வெட்டு ஒன்றைப் பொறித்துள்ளான்.

## சாதி வேறுபாடற்ற சமுதாயம்

மக்களிடையே பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வருணாசிர வழிப்பட்ட சாதிப் பாகுபாடு சங்க காலத் தமிழரிடம் இடம்பெறவில்லை. நிலவியல் அடிப்படையில் தமிழகம் நானிலமாகப் பாகுபடுத்தப்பட்டது. நானிலத்தில் நான்கு வகைப்பட்ட சமுதாய அமைப்புகள் தோன்றி வளர்ந்தன. அவற்றிற்கேற்ப அவற்றின் வாழ்க்கை முறைகளும் வேறுபட்டன. அவை வெவ்வேறு சமூகங்கள் கிளைத்தெழக் காரணமாயின. நானிலத்து வாழ்ந்த மக்கள் தாங்கள் வாழ்ந்த நிலத்தாலும் செய்தொழிலாலும் பல சமூகங்களாக வேறுபட்டு விளங்கினர். இத்தகைய வாழ் நிலப்பரப்பு வழி அமைந்த குழுமங்களை நிலைக்களன்களாகக் கொண்டு தொடக்க காலத்தில் தமிழ்ச் சமுதாயம் தோன்றியது. பின்னர் பையப் பையத் தொழில்வழிச் சமுதாய அமைப்பு அவற்றிடையே உருவாகத் தொடங்கியது.

நானிலத்து ஐந்திணை மக்கள் குறவர்குடி, வேட்டுவர் குடி, ஆயர், கானவர், உழவர், பரதவர் ஆகிய குடியினர் நுளையர் குடி, எயினர் குடி, மறவர் குடி எனப்பட்ட பல்வேறு குடிகளைச் சேர்ந்தவர்களாக விளங்கினர். இக்குடிகளோடு கம்மியர் (உலோகத் தொழிலாளர்), தச்சர், குயவர், பாணர், பொருநர், வணிகர், அரையர் (ஆட்சிபுரிவோர்) போன்ற தொழில் வழிக் குடிகளும் நாளடைவில் தோன்றின. இப்பாகு பாட்டிற்குப் பிறப்பு அடிப்படை அன்று. செய்த தொழிலே வேறுபாட்டிற்குக் காரணமாகும். சங்ககாலத்தின் கடைசிப்

பகுதியில், நகர நாகரிகம் சிறப்புற்றது. அக்காலத்தில் வடவருடைய வருணாசிரம சாதிப் பாகுபாட்டைத் தமிழ் நாட்டுத் தொழில்வழிச் சமூகங்களோடு பொருத்தி இரண்டும் ஒன்றே என்று மயங்குமாறு ஆரியர் செய்தனர். எனினும் அவர்கள் முயற்சி வெற்றிபெறவில்லை. 39 நிலப்பிரபுக்களே குறுநில மன்னர்களாக விளங்கினர். அவர்களிடையே இருந்து வேந்தர்கள் தோன்றினர். போர்க்காலத்து மறவர், மழவர், உழவல், குரவர் போன்ற பலவகை மக்களும் படை வீரர்களாகப் பணிபுரிந்தனர். எனவே, 'போரிடுவதற்கென்றே பிறந்த சாதியினர்' என்று தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் யாரையுமே குறிப்பிட இயலாது. இதைப்போன்றே மற்ற பாகுபாடுகளும் அமைந்தன. எனவே சங்ககாலச் சமுதாயத்தில் 'நான்குவகை சாதி முறை' தமிழ்நாட்டில் இருந்தது இல்லை என்று துணிந்து கூறலாம். பிற்காலத்தில் அம்முறையை இங்குப் புகுத்த முயன்றனர். ஆனால் அம்முயற்சி இன்றுவரையில் முழு வெற்றி பெறவில்லை.

இன்றைய இந்தியச் சமுதாயத்தைச் சீரழிக்கும் தீண்டாமை முறை அன்றைய தமிழகத்தில் இடம்பெறவில்லை. புன்மையான தொழில்களைச் செய்தவர்களைப் 'புலையர்' என்றும் இழிவான தொழில்களைச் செய்தவர்களை 'இழிசினர்' என்றும் சுட்டினர்[26]. இதற்கும் தீண்டாமைக்கும் யாதொரு தொடர்பும் அக்காலத்தில் இருந்தது இல்லை.

## கல்வி கற்கும் உரிமை

மக்களாகப் பிறந்த அனைவருக்கும் கல்வி கற்கும் உரிமை பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் இருந்தது. நுண்ணறிவையும் நூலறிவையும் வளர்ப்பதற்குக் கல்வியினைச் சிறந்த கருவியாகப் போற்றினர். மேட்டுக்குடி மக்களுக்கும் பிறப்பால் உயர்ந்தவர்களுக்குமே கல்வி கற்கும் உரிமை உண்டு என்று உலகின் பிற பகுதிகளில் நம்பப்பட்ட அக்காலத்தில் சங்ககாலத் தமிழ்மக்கள் எண்ணெ (கணக்கை) யும் எழுத்தையும் (இலக்கியத்தை) யும் உயிர்களுக்குரிய இரு கண்களாகப் போற்றினர்[27].

அன்றைய கல்விமுறையில் பொதுக்கல்வி, சிறப்புக் கல்வி, மேல்நிலைக்கல்வி எனும் மூன்று நிலைகள் இருந்தன. பொதுக்கல்வி ஏழாண்டுகளுக்கும் சிறப்புக்கல்வி மூன்றாண்டுக்கும் பயிற்றுவிக்கப்பட்டன. மேல்நிலைக்கல்வி என்பது வெளி ஊர்களுக்கோ நாடுகளுக்கோ சென்று குறிப்பிட்ட துறையில் வல்லுநர்களிடம் கற்ற கல்வியாகும்.

இதற்காக ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் வரை ஒதுக்கப்பட்டன.

பொதுவாக எல்லாரும் எழுதவும் படிக்கவும் கணித அறிவு பெறவும் கற்பிக்கப்பட்ட கல்வியே பொதுக்கல்வியாகும். சங்க காலப் புலவர்களுள் பலர் பாலாசிரியர், கணக்காயர், தமிழாசிரியர் என்னும் அடை கொடுத்துச் சிறப்பிக்கப் பெற்றுள்ளனர். ஊர்கள்தோறும் இத்தகைய ஆசிரியர்கள் கல்விப்பணி புரிந்தனர். சிறப்புக்கல்வி என்பது ஒருவர் விரும்பும் தொழில் அல்லது கலையைப் பற்றிய கல்வியாகும். இதனைத் தொழிற்கல்வி எனலாம். இத்தொழிற்கல்வியை முறையாகப் பெறாத வரை அல்லது பயிலும் நிலையில் உள்ளவரை 'கல்வி இளையர்' எனச் சுட்டுவது அக்கால வழக்கம். மேல்நிலைக்கல்வி என்பது ஆராய்ச்சிக் கல்வியாகும். இக்கல்வியைப் பயில்வதற்குத் திருமணம் ஆனபிறகு மனைவியைப் பிரிந்து வெளியூர்களுக்கு ஆடவர் சென்றனர். மகளிருள் பலர் பொதுக்கல்வி பெற்றவர்களாக இருந்ததோடு சிறந்த புலவர்களாகவும் விளங்கினர்.

## ஊராட்சி மன்றம்

அயலாருடைய ஆதிக்கமும் அச்சுறுத்தலுமின்றித் தமிழகம் பன்னெடுங் காலமாகத் தனியுரிமையோடு வாழ்ந்து வந்தது. அதனால் பேரளவிற்கு ஒருமைப்பாடுடையதாகத் தமிழ்ச் சமுதாயம் அமைய முடிந்தது. இதன் விளைவாக நிலையான பழக்க வழக்கங்களைக் கொண்ட சமுக வாழ்வு மல்ச்சியுற்றது. எனவே குறிப்பிட்ட ஓரிடத்தில் - ஒரு வட்டாரத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் தங்களுடைய தேவைகளைத் தாங்களே அரும்பாடுபட்டு, நிறைவு செய்து கொள்வதற்குரிய அகத்தெழுச்சியைப் பெற்றனர். அவ்வகத்து எழுச்சி, வட்டார இயல்புடைய நிறுவனங்கள் பலவற்றை அமைத்து அவற்றைத் திறமையோடு செயல்படுமாறு செய்தது. இவ்வாறு பண்டைத் தமிழ்மக்கள் தங்களைத் தாங்களே ஆளக் கற்றனர். இதன் விளைவாக ஊராட்சி மன்றங்கள் தோன்றின.

சிற்றூர், பேரூர், நாடு, வளநாடு ஆகியவற்றில் உள்ளாட்சிமுறை, சங்க காலம் முதற்கொண்டே தமிழகத்தில் சிறப்புற்று விளங்கலாயிற்று. சோழர் ஆட்சிமுறையில் சிறப்பியல்பாக விளங்குவது உள்ளாட்சி முறையான ஊராட்சி முறையேயாகும். ஊர்களிலும் நகரங்களிலும் மக்களாட்சிப் பண்பின் அடிப்படையில் அமைந்த ஊராட்சி மன்றங்களும் நகரங்களில் சிறப்பாக வணிகப் பெருங்குடிமக்கள் வாழ்ந்த

பட்டணங்களில் - அவற்றில் பிரதிநிதிகளைக் கொண்ட நகரம் எனப்பட்ட நகராட்சி மன்றமும் நாட்டாட்சியை நன் முறையில் நடத்தின. ஊராட்சி மன்றங்கள் மக்களிடையே குழு மனப்பான்மையை வளர்த்து கூட்டு முயற்சியில் மக்களை ஈடுபடுத்திய முறை நம்முடைய கருத்தைக் கவருவதாகும்.

ஊராட்சி மன்றங்களுக்கு உரிமைகள் பலவற்றை மைய அரசு அளித்திருந்தது. அவ்வரசு எல்லா உரிமைகளையும் தனக்கேயுரியதாக - அதிகாரங்கள் அனைத்தையும் தன்னிடத்துக் குவித்துக்கொண்ட குவிமுக அரசாக இல்லாமல் பெரும்பாலான உரிமைகளை உள்ளாட்சி மன்றங்களுக்கு அளித்திருந்தமை வியக்கத்தக்க செய்தியாகும். மத்திய அரசு வட்டாரச் சமுதாய அமைப்பினை அடக்கி ஒடுக்கி ஆளவில்லை மாறாக உரிமைகள் பல வழங்கி வந்தது. அதனால் அவை தன்னாட்சி உரிமைபெற்ற வட்டாரச் சமுதாய உள்ளாட்சி அரசுகளாக விளங்கின. நாட்டாட்சியின் அடிப்படை உறுப்பாக அமைந்த இச் சிறு குடியரசுகள் மக்களிடையே நாடி வாழும் மனப்பான்மையை வளர்த்தன. நாட்டு ஆட்சியில் குடி மக்களுக்குரிய பொறுப்புணர்ச்சியையும, கடமையுணர்ச்சி யையும் அவை வளர்த்தன; உரிமை வாழ்வில் மக்களுக்கு ஆர்வத்தை ஊட்டின. திறமையும் தூய்மையும் பொருந்திய சிறந்த ஆட்சிமுறை நாட்டிலே வேரூன்றுமாறு செய்தன.

ஊர்மக்கள் பங்குகொண்டிருந்த ஊராட்சி முறை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தென்னாட்டில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் அமைந்து இருந்ததைப்போல் இந்தியாவின் பிற பகுதிகளில் அமைந்திருக்கவில்லை. இன்றைய இந்திய ஆட்சி முறையின் ஆணி வேராகக் கருதப்படுவது பஞ்சாயத்து ஆட்சி அமைப்பாகும். அதன் தாயாக விளங்குவது பண்டைத் தமிழரின் உள்ளாட்சி முறையாகிய ஊராட்சி முறையாகும்.

## குடவோலைத் தேர்தல் முறை

முடியாட்சி முறையே சிறப்புடன் விளங்கிய சங்ககாலத்தில் ஊராட்சி முறை நன்கு செயல்பட்டது. ஊர்கள் தோறும் நடத்திய நிருவாகம் செய்த அவைகள் ஊராட்சி மன்றங்கள் இருந்தன. இதனை அவையிருந்த பெரும் பொதியில்- ( பத்து. மதுரை. 224 ) எனும் குறிப்பால் அறிகிறோம்.

அந்த ஊராட்சி மன்றத்திற்குரிய உறுப்பினர்களை கி.பி. பத்தாம் நூற்றாண்டில் சோழப் பெருவேந்தன் முதலாம் பராந்தகன் காலத்தில் ( கி.பி. 907-953 ) குடவோலை

முறையில் தேர்ந்து எடுத்ததைப் போன்றே சங்க காலத்திலும் தேர்ந்து எடுத்துள்ளனர். வாக்குச் சீட்டுகள் ஓலையால் ஆனவை. பானையே (குடமே) வாக்குச் சீட்டுகளைப் போடும் பெட்டியாகப் பயன்படுத்தப்பட்டது. "பானை நிறைந்தவுடன் அதன் வாயினைத் துணியினால் கட்டி முத்திரை இட்டு வைப்பது அக்கால வழக்கம். அரசனுடைய ஆணையைப் பெற்ற அதிகாரிகள் (ஆணை மாக்கள்) அவையோர் முன்னிலையில் அக்குடத்தின் மேலுள்ள முத்திரை அழியாமல் இருப்பதைக் காட்டி, பிறகு குடத்தின் மூடிய வாயினை அவிழ்ப்பர். பிறகு குடத்தினுள் உள்ள ஓலைகளை அவர்கள் எடுப்பர்" எனும் அகநானூற்றுப் பாடல் (77) குறிப்பால் "குடவோலைத் தேர்தல் முறை" பன்னெடுங் காலமாகத் தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வந்தமை புலனாகிறது.

## போர் நெறி

சங்க காலம் தமிழகத்தின் வீரயுகமாய் போற்றப் படுகிறது. போர்க்களத்தில் புகழுக்காக உயிரைக் கொடுக்கும் பண்பு பண்டைத் தமிழரிடம் மேலோங்கி நின்றது. இதனால் வீரமும் காதலும் சங்ககாலத் தமிழருடைய வாழ்க்கையில் முதன்மை இடம் பெற்றிருந்தன. 'ஒருவனை ஒருவன் அடுதலும், அழித்தலும் புதுவது அன்று; இவ்வுலகத்து இயற்கை' என்பது பண்டைத் தமிழரின் நம்பிக்கையாகும்[28].

எனினும் போரிடுவதற்குரிய நெறிமுறைகளை அவர்கள் நன்கு வரையறுத்து இருந்தனர். போரில் ஐந்து நிலைகள் இடம்பெற்றன. அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பனவாகும்[45]. போரில் வீரமரணம் அடைந்தோர்க்கு நினைவுச் சின்னமாக நடுகல் நாட்டி வழிபாடு செய்வது பண்டைத் தமிழ்ரின் வழக்கமாகும்[29].

மறக்குடி மங்கையர் போருக்குத் தங்கள் மக்களையும், கணவனையும், அண்ணன் தம்பிகளையும் அனுப்பி வைப்பதில் பேரார்வம் காட்டினர். தம் வயிற்றில் பிறந்து தம்முலைப்பால் உண்ட மக்கள் வீரம் குன்றாத மானமும் அஞ்சா நெஞ்சமும் படைத்தவராய்க் கடும்போர் புரிந்து வாகை சூட வேண்டும் என்பதும் வீரத் தாய்மார்களின் சிறந்த குறிக்கோளாக இருந்தது. போரில் புறமுதுகிட்டு ஓடாத தன் மகனுடைய வீரச் செயல்களைக் கேட்டு, போர்க்களத்தில் அவனுடைய உடலைக் கண்டபொழுது அவளுடைய வாடிய மார்பகங்கள் ஊறிச் சுரந்தன[30]. எனும் செய்தி அக்காலத்தில் மற

வுணர்வுமிகு தாய்மாரின் அகத்தெழுச்சியைப் புலப்படுத்துவது ஆகும்.

மற்றொரு மறக்குடி மங்கை போரில் என்மகன் புறமுதுகிட்டு ஓடியிருப்பின் அவனுக்குப் பாலூட்டிய இம்முலைகளை அறுத்து எறிவேன் என்று வஞ்சினம் கூறிப் போர்க்களம் புகுந்து தன்மகன் இறந்துகிடப்பது கண்டு அவனைப் பெற்ற காலத்திலும் பெருமகிழ்ச்சியுற்றாள்[31] எனும் வீரவரலாறு சங்ககாலத் தமிழ்மக்களுடைய மறவுணர்வுமிகு வாழ்க்கையின் மாண்பினைப் புலப்படுத்துகிறது. இத்தகைய வீரவுணர்வு மனிதனின் அடிமனத்தின் அடியில் உறையும் வேட்கையை வெளிப்படுத்துகிறது. செயற்கருஞ் செயல்களைச் செய்ய வேண்டும் என்னும் உள்ளத் துடிப்பும் ஒப்புயர்வற்ற இலட்சியங்களுக்காக உயிரைக் கொடுக்கும் துணிவும் சங்க காலத் தாய்மார்களை இத்தகைய அஞ்சா நெஞ்சமும் அருஞ்செயல் நாட்டமும் வாய்ந்தவர்களாகப் பொன்றாப் புகழ்பெறத் தூண்டின.

வீரயுக இலக்கியம் பற்றி ஆராய்ந்த சி.எம். பௌரா மூவகை வீரயுக மனப் போக்குகளைச் சுட்டுவர். முதல்வகை நாடோடி மக்கள் இடையே காணப்படுவதாகும். இரண்டாவது நிலை நிலப்பிரபுத்துவ நிலையில் இருந்து பேரரசு அமைக்கும் நிலைக்குக் குறிப்பிட்ட ஒரு சமுதாயம் மாறும் காலகட்டத்தில் அமைவது. இக்காலத்திலேயே வீரத் தாய்மார்கள் வீறுடன் விளங்குவர் என்பர்[32]. சங்ககாலத் தமிழகத்து வீரத்தாய்மார்கள் பேரரசுகளைத் தமிழ்மக்கள் உருவாக்கியதற்கு உதவிபுரிந்தவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

போரினைப் பல்வேறு நிலைகளாக நுட்பமாகப் பாகுபடுத்தியுள்ளதைப் புறப்பொருள் இலக்கணத்தால் அறிகிறோம். இதைப்போன்றே போர்புரியும் காலத்திலும் போருக்குப் புறப்படும்பொழுதும் பண்டைத் தமிழர் சில நெறி முறைகளைப் பின்பற்றினர். பொதுவாக நாட்டு மக்களுக்கு அல்லல் உண்டாக்கக்கூடாது எனும் நோக்குடையவராக அவர்கள் செயல்பட்டனர். ஒரு நாட்டின்மீது படையெடுத்துச் செல்லும்போது அந்நாட்டு மக்களுக்கு முன்கூட்டியே தக்க பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுமாறு எச்சரிக்கை செய்துள்ளனர்.

பசுக்கூட்டங்களையும், அறவோர்களையும், பெண்டிரையும், திருமணம் ஆகிய நிலையில் பொன்போல்

புதல்வரைப் பெறாதவர்களையும் "எங்கள் அம்புகள் தாக்கா வண்ணம் உங்களுக்குக் காவலான அரண்களை அடைக" என்று அறிவுறுத்தும் வழக்கம் படையெடுத்துச் செல்லுவோரிடம் இருந்தது எனலாம். இவ்வாறு ஏன் எச்சரிக்கை செய்தனர்? 'அறத்தின் வழிப்பட்டதாகத் தங்கள் போர்நெறி அமைய வேண்டும்' எனும் உயரிய நோக்கோடு அருள் உள்ளத்தோடு இவ்வாறு எச்சரிக்கை செய்தனர் என்பதை 'அறத்தாறு நுவலும் பூட்கை'[33] எனும் தொடர் அறிவிக்கிறது.

அடிக்கடி போரில் ஈடுபட்டு சங்ககாலத் தமிழ்மக்கள் அப்போரினை நெறியோடும் முறையோடும் நடத்த வேண்டும் எனும் உறுதிப்பாடு உடையவர்களாக இருந்தமை இதனால் புலனாகிறது. இக்காலத்தில் ஈவு இரக்கமற்ற முறையில் பள்ளிகளையும், மருத்துவமனைகளையும், கோயில்களையும், குடியிருப்புகளையும் பகைவர்கள் தாக்கி அழிக்கும் கொடுஞ் செயல்களைப் பண்டைத் தமிழர்கள் அறியாதவர் ஆவர்.

## கடவுளின் திருவுருவம்

தமிழரிடையே அரசியல் அமைப்பு தொல் பழங்காலத்தில் தோன்றி வளர்ந்து வந்துள்ளது. அரசனுக்குப் பழைய பெயர் கோ அல்லது கோன் என்பதாகும். இச்சொல்லிற்குக் கோ (பசு) க்களைக் காப்பவன் என்பது பொருள். இடையன் பசுக்களைப் பகைவரிடம் இருந்தும் விலங்குகளிடமிருந்தும் காப்பதைப் போல, குடிமக்களைப் பகைவர்களிடமிருந்தும், கொடிய விலங்குகளிடமிருந்தும் பிற துன்பங்களில் இருந்தும் காப்பவனே அரசன் என்னும் கருத்தினையுடையவர் பண்டைத் தமிழர் என்பது புலனாகின்றது. இக்காரணத்தினால்தான் நாட்டின் உயிராக மன்னனைக் கருதினர்[34]. அறநெறியில் சிறிதும் தவறாது ஒழுகுபவனாக அரசன் விளங்கினான். அவனுடைய வெண்கொற்றக்குடை மக்கள்மீது துன்பம் எனும் வெயில் படாது காப்பதற்காக விரிக்கப்பட்ட சின்னமாகப் போற்றப் பட்டது[35]. அறநெறி தவறாமல் அரசோச்சி மக்களைக் காத்த மன்னர்களைக் கடவுளுக்கு ஒப்பாக - கடவுளின் மண்ணுலகத் திருவுருவமாகக் கருதினர். அரசனது பேராற்றலையும் போர்வியையும் பெருந்திறனையும் கண்ட சான்றோர் அவனைத் திருமாவின் இயல்புகளோடு ஒப்பிட்டுப் புகழ்ந்து போற்றினர்[54]. இவற்றால் அரசனைத் தெய்வீகப் பிறப்புரிமை உடையவன் என்று கருதுவதோடு அமையாது விண்ணுலகக் கடவுளின் மண்ணுலகத் திருவடிவமாக அரசனைப் போற்றுவதும்

பண்டைத் தமிழ் மரபு என்பது புலனாகின்றது. இதனால்தான், நம்மாழ்வார் போன்ற அருளாளர்களும் திருவுடை மன்னரைக் காணின் "திருமாலைக் கண்டேனே" என்று அரசனைத் திருமாலாகக் கருதிப் போற்றினர்[36].

## குறிப்புகள்

1. குறள். 45.
2. புறம். 314.
3. தொல்.பொருள்.களா.நூ. 23.
4. குறள். 61.
5. அகம். 136.
6. நெடுநல்வாடை 136-7.
7. சிலப்பதிகாரம் 2-63.
8. பழமொழி 381.
9. பெரியபுராணம் 21-34.
10. சீவகசிந்தாமணி 2697.
11. குறள். 42.
12. புறம். 188.
13. அகம். 86; 136.
14. History of the Tamils, p.80.
15. அகம். 136.
16. புறம். 127.
17. சிலப். 2.63.
18. புறம். 319.
19. புறம். 333.
20. புறம். 274.
21. புறம். 18.
22. தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப்பண்பாடு, ப. 179.
23. A Survey of Indian History, p. 73.
24. தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, ப. 22.

25. பெரிப்ளூஸ், ப. 268.
26. புறம். 287.
27. குறள். 392.
28. புறம். 176.
29. புறம். 232.
30. புறம். 295.
31. அகம். 278.
32. Heroic Poetry, p. 3.
33. புறம். 9.
34. புறம். 186.
35. சிந்தாமணி, 2908.
36. திவ்யப்ரபந்தம், 4-4-8.

# இயல் - 4

# சிறப்புமிகு பழக்க வழக்கங்கள்

சங்ககாலத் தமிழ் மக்களுக்கேயுரிய சிறப்புமிகு பழக்க வழக்கங்கள் நம் கருத்தைக் கவருகின்றன. அவற்றுள் சில இன்றுவரையில் தமிழரிடையே வழக்கில் இருந்து வருகின்றன. அவை பிற இந்திய மக்களிடையே காணப்பெறாதனவாக உள்ளன. அல்லது தமிழ் மக்களிடம் இருந்து பிற இந்திய மக்கள் கற்றுக்கொண்டனவாகத் தோன்றுகின்றன. அவற்றுள் முதன்மையான சிலவற்றை இங்குக் காண்போம்.

## சிலம்புகழி நோன்பு

திருமணம் ஆவதற்கு முன்பு இளம்பெண்கள் ஒருவகைச் சிலம்பு அணிந்து இருப்பர். திருமணம் முடிவான பிறகும் திருமண வாழ்விற்கு முன்னரும் ஒரு நன்னாளில் அச்சிறு 'சிலம்பினை நீக்கும் விழா' மணமகள் இல்லத்தில் நடைபெறும். இதனைச் 'சிலம்புகழி நோன்பு' என்பர். இவ் விழா வயது முதிர்ந்த இல்லத்தரசியர் சிலர் ஒன்றாகக் கூடி செய்த சடங்காகும். இச்சடங்குகளின் மூலம் பெற்றோர் தம் மகள் மணவாழ்விற்குரிய தகுதியைப் பெற்றுவிட்டனள் என்பதை உலகிற்கு உணர்த்தினர்[1].

இந்தச் சிறு சிலம்பு நீக்கு விழாவிற்குப் பிறகு வாழ்வரசிகளான மகளிர் சிலம்பு அணிவது இல்லையா? எனும் ஐயம் எழலாம். திருமணத்திற்குப் பிறகு வேறு வகையான சிலம்புகள் அணிவது வழக்கம். கண்ணகியின் காற்சிலம்பும் பாண்டிமாதேவியின் பொற்சிலம்பும் இதற்குச் சிறப்புமிகு சான்றுகளாகும்.

## மணமகளின் முதற்பணி

திருமணத்திற்குப் பிறகு முதன்முதல் கணவன் வீட்டிற்கு வரும் மணமகள் மணமகனுக்கும் அவனுடைய உற்றார் உறவினருக்கும் சோறு வட்டிக்கும் ( பரிமாறும் ) வழக்கம் சங்க காலம் முதல் இன்று வரை இருந்து வருகிறது. இதனைத் தொல்காப்பியர் "அடிசிலும் ( உணவு ) பூவும் தொடுதல்" என்று கூறுவர். இக்காலத்தில் இதனை நெய் ஊற்றுதல் என்பர்.

## மாலை நேரத்தில் திருவிளக்கு வழிபாடு

இன்றைய தமிழர் வாழ்வில் திருவிளக்கு ஏற்றி வழிபாடு செய்தல் ஒருவகைப் பண்பாடாக இருந்து வருகிறது. விழாக்களைத் தொடங்குகின்ற பொழுதும், நற்செயல்களைச் செய்கின்ற பொழுதும் குத்துவிளக்கேற்றுதல் சிறப்புமிகு வழக்கமாகும்.

நாள்தோறும் மாலை வேளையில் கதிரவன் மறையும் அந்தி நேரத்தில் வீட்டு முற்றத்தில் மணிவிளக்கு ஏற்றி நெல்லும் மலரும் தூவி வழிபாடு செய்வது பண்டைத் தமிழ் மகளிரின் பழக்கமாகும். தெரு வாசற்படியில் நெல்லும் மலரும் பெய்து விளக்கேற்றி அந்நேரத்தில் வழிபடுவதும் வீட்டின் உள்ளே திருவிளக்கு ஏற்றி வழிபாடு செய்வதும் மனையுறை தெய்வத்தை - குலதெய்வத்தை வழிபாடு செய்யும் ஒருவகை முறையாகவும் மேற்கொள்ளப்பட்டது[3].

## பிறை தொழுதல்

பொதுவாகத் திங்களைப் போற்றி வழிபடுவது பண்டை நாகரிக நாடுகளிலும் சிற்சில வேறுபாடுகளுடன் இருந்ததைக் காணுகின்றோம். செழிப்பினையும் வளர்ச்சியினையும் வேண்டிப் பிறை தொழுவது தமிழ்நாட்டின் மரபு. மங்கைப் பருவம் அடைந்த பெண்கள் நல்ல கணவனும் சிறந்த வாழ்க்கையும் வாய்க்க வேண்டும் எனும் நோக்கத்தோடு பிறையினைப் போற்றி வழிபட்டனர். சந்திரனைப் பெண் தெய்வமாகவும், காதல் தெய்வமாகவும் கருதி போற்றுவது பண்டைத் தமிழரின் வழக்கமாகும்[4].

## பத்தினி வழிபாடு

கற்புடை மகளிரைப் பெருமையுடன் பாராட்டுவது பண்டைய மரபு. கற்புக்கரசியாகிய கண்ணகிக்குக் கோயில் எடுத்து திருவிழா நடத்தப்பட்டதைச் சிலப்பதிகாரத்தால் அறிகிறோம். கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் இப்பத்தினித் தெய்வ வழிபாட்டைத் தமிழகத்தில் இருந்து கொண்டு சென்று இலங்கையில் புகுத்தியதாகத் தெரிகிறது[5].

சேரன் செங்குட்டுவனால் தொடங்கி வைக்கப்பட்ட இப்பத்தினி வழிபாடு இளங்கோவடிகளால் இலக்கியத்தின் மூலம் போற்றிப் பரப்பப்பட்ட இப்பத்தினி வழிபாடு, சங்க காலத்திற்குப் பிறகு தமிழகத்தின் ஊர்கள் தோறும் 'சக்தி வழிபாட்டின்' ஒரு கூறாகப் பின்பற்றப்பட்டு வருவதைக் காணலாம். இவ்வழிபாட்டு நெறி இன்றும் இலங்கையில்

பெருஞ்சிறப்பு உடையதாக இருந்து வருவது கருதத் தக்கதாகும்.

## மலரினைப் போற்றுதல்

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள் பண்டைத் தமிழர்கள். அவர்களுடைய உள்ளத்தை வண்ண மலர்கள் பெரிதும் கவர்ந்துள்ளன. அவற்றை அணிந்து மகிழ்ந்தனர். காதல் வாழ்க்கை போர், வழிபாடு முதலிய வற்றில் ஒருவகைக் குறியீட்டுப் பொருளாகவும் கலையுணர்வை வெளிப்படுத்தும் ஒருவகைச் சின்னமாகவும் மலர்களை அவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

காதல் வாழ்க்கையில் மட்டும் அல்லாமல் போரின் பல்வேறு நிலைகளைப் புலப்படுத்தவும் வெட்சி, கரந்தை, வஞ்சி, தும்பை, உழிஞை, வாகை போன்ற பூக்கள் பயன் படுத்தப்பட்டுள்ளமை பண்டைத் தமிழருக்கு மக்களிடத்து ஒருவகை மயக்கம் இருந்ததைத் தெரிவிக்கிறது.

முல்லை மலர் கற்பு நெறி பிறழா காதல் வாழ்க்கைக் குரிய 'முல்லை சான்ற கற்பு' என்று அடையாளச் சின்னமாகப் போற்றப்பட்டது. அதே சமயத்தில் காட்டு நிலப்பெயராகவும் வழங்கப்பட்டது. எல்லா வகையான வழிபாட்டிற்கும் உரிய புனித மலராகவும், முல்லை மலர் பயன்படுத்தப்பட்டது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர், மலையும் மலை சார்ந்த பகுதியையும் சுட்டும் பெயராகவும் ஒருவனும் ஒருத்தியும் காதல் வயப்பட்டு 'இருதலைப்புள்ளின் ஒருயிராக' விளங்கும் களவு வாழ்க்கையின் சின்னமாகவும் போற்றப்பட்டது. மருத மலர் நகர நாகரிகத்தின் சின்னமாகவும் பரத்தையர் பிரிவினையும் அதனால் உண்டாகும் ஊடலையும் உணர்த்துவதாயிற்று. நெய்தல் மலர் கடற்கரைப் பகுதிக்குரிய பெயராகவும் காதலன் பிரிவினால் உண்டாகும் ஏக்கத்தைப் புலப்படுத்தும் குறியீடாகவும் வழங்கலாயிற்று.

குவளை மலரும், தாமரைப்பூவும் வளமிக்க வாழ்க்கையின் சின்னங்களாகக் கருதப்பட்டன. 'பூப்பலி' செய்து இறை வழிபாடு செய்யும் 'பூசெய்' ( பூசை ) முறை சங்க காலத்திலேயே தோன்றிவிட்டது.

ஆடவரும் மகளிரும் மலர்களைத் தலைமுடியில் சூடி மகிழ்ந்தனர். மாலையாக அணிந்து அழகுமிக்கவர்களாக விளங்க முயன்றனர். விருந்தினருடைய உள்ளத்தை அணிச்ச

மலரினும் மென்மையானதாகக் கருதினர். இந்த அனிச்ச மலர் காதலியின் பாதங்களைத் துன்புறுத்தக்கூடிய முட்களாகும் என்று காதலனுடைய உள்ளம் துடித்ததைக் காணுகின்றோம்[7].

காதல் நோய் காலையில் அரும்பாகத் தோன்றுமாம். பகற்பொழுதில் மொட்டாகக் காட்சி தருமாம்; மாலையில் மலர்ந்து மணம் பரப்புமாம்! காதல் வாழ்க்கை மலரினும் மென்மையானதாகக் கருதப்பட்டது[8]. மங்கையர் மலர்க்கொடி, பூங்கொடி என்று பலவாறாகப் போற்றப் பட்டனர்.

இவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் மலரினைப் பெரிதும் தமிழர்கள் மதித்துப் போற்றியுள்ளனர். மலரினுடைய மென்மை எளிமை, தூய்மை, புதுமை, அழகு முதலிய பண்புகளைப் பண்டைத் தமிழர் நன்கு உணர்ந்து இருந்தனர். மகிழ்ச்சியையும், இன்ப எக்களிப்பையும், தூய்மையையும், குறிக்கோளினையும் புலப்படுத்தும் ஓர் அடையாளச் சின்னமாக அவர்கள் மலர்களைப் போற்றிப் பயன்படுத்தியுள்ளனர்.

## எண்ணெய் தேய்த்துக் குளித்தல்

சங்ககாலத் தமிழர் 'நெய்' எனும் சொல்லாலேயே எண்ணெய்யை (எள்+நெய்)ச் சுட்டினர். கதிரவனின் வெப்பத்தின் தாக்குதலால் உடலின் தோல் நைந்துவிடா வண்ணம் காப்பதற்கு உடல் முழுவதும் எண்ணெய் பூசி ஊற வைத்துக் குளிப்பது வழக்கம்.

சங்ககாலத் தமிழகத்தில் எண்ணெய் தேய்த்துக் குளித்தல் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளோடு இயைந்த ஒருவகைப் பாக்கமாக இருந்தது. இன்றும் இப்பழக்கம் இருந்து வருவதைக் காணலாம்.

குழந்தையைப் பெற்றெடுத்த தாய்மார்களுக்குக் குறிப்பிட்ட சில நாள்கள் கழித்த பிறது எண்ணெய் நீராட்டுதல் சிறப்புமிக்க வழக்கமாகும். எண்ணெய் தேய்த்துக் குறித்த இளம் தாய்மார்கள் சோர்வினாலும், களைப்பினாலும் மயக்கமுற்று உறங்குவர். இதனை 'நெய்யணி மயக்கம்'[9] என்பர்.

போருக்குப் புறப்படும்பொழுதும், திரும்பி வந்த பிறகும், தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவதற்கு முன்பும், ஆடவரும் பெண்டிரும் எண்ணெய் தேய்த்துக் குளித்தல் வழக்கம் என்பதைச் சங்கப் பாடல்களால் நாம் அறியலாம்[10].

பண்டை நாகரிக நாடுகளுள் கிரேக்கர்களும் ரோமானியர்களும் (ஆலிவ்) எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தனர்.

## வெள்ளணி விழா

ஐரோப்பியர் வருகைக்குப் பிறகே இந்தியர்கள் பிறந்த நாள் விழாக் கொண்டாடுவதைக் கற்றதாகச் சிலர் தவறாகக் கூறுகின்றனர். நம் நாட்டில் அரசர்களுடைய பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாகப் பண்டைக் காலத்தில் கொண்டாடப் பட்டதைச் சங்க காலத்தால் அறிகிறோம்.

திருவண்ணாமலைக்கு அருகில் செங்கண்மா (செங்கத்தை) வினைச் சிறப்பாக நன்னன் என்னும் குறுநில மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். அவனுடைய பிறந்தநாள் விழா, அவனுடைய நாட்டு மக்களால் சிறப்புமிகு பெரு விழாவாகக் கொண்டாடப்பட்டது.

பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாள்
சேரி விழவினும் ஆர்ப்பெழுந் தாங்கு
(பத்து. 6:618-619)

என்று மாங்குடி மருதனார் குறிப்பிடுகிறார். இந்தப் பிறந்த நாள் விழாவினை, (வெள்ளணி விழா) எனப் போற்றுவது வழக்கம்[11] என்பது சிலப்பதிகாரத்தால் புலனாகின்றது. இதனால் தூய வெண்மையான ஆடையைப் பிறந்தநாள் அன்று உடுத்திக்கொள்வது வழக்கம் என்பதும் தெரிகிறது.

## கார்த்திகை விளக்கீடு

சங்ககாலம் முதற்கொண்டு இன்றுவரை கொண்டாடப் பட்டுவரும் திருவிழா 'கார்த்திகை விளக்கீடு' என்பதாகும். கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாளன்று முருகனுடைய விழாவாகத் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வரும் ஒளி வழிபாட்டுத் திருவிழாவே 'கார்த்திகை விளக்கீடு' என்பதாகும்.

இந்தத் திருவிழாவில் எண்ணற்ற சிறு விளக்குகளை வரிசை சரிசையாக வீடுகளிலும் வீதிகளிலும் ஏற்றி வைத்து வழிபாடு செய்வது வழக்கம்[12]. அன்று செல்வர்கள் பல்வேறு பொருள்களைத் தானமாகக் கொடுத்து மகிழ்வது[13] சங்க காலத்திய வழக்கம்.

## தைந்நீராடல்

இக்காலத்தில் மார்கழி நோன்பும், தைமாதம் முதல் நாள் அன்று பொங்கல் விழாவும் மிகச் சிறப்பாகத் தமிழர்களால் கொண்டாடப்படுகின்றன. இவற்றினுடைய பழைய வடிவம் 'தைந்நீராடல்' எனும் திருவிழாவாக இருந்திருக்கக் கூடும்.

தை மாதம் முதல் நாள் அன்று மேற்கொள்ளப்பட்ட புனித நீராடல் ஒருவகைத் திருநாளாகக் கொண்டாடப் பட்டது. சங்ககாலத்தில் கடைசிப் பகுதியிலேயே இந்த விழா வழக்கிற்கு வந்ததாகத் தெரிகிறது. மற்றும் இது சமயத் தொடர்பான விழா என்பதும் புலனாகின்றது. திருவாதிரைத் திருநாளோடு தொடர்பு உடைய விழாவாக இதனைப் பரிபாடல் கூறுகிறது[14].

கன்னிப் பெண்கள் இறைவனை வேண்டி நோன்பு நோற்று நோன்பின் நிறைவு நாளன்று நீராடுவது தைந் நீராடலாகும்[15]. 'சிறந்த கணவரைப் பெறவேண்டும்' எனும் நோக்கத்தோடு இந்நோன்பு மேற்கொள்ளப்பட்டதைச் சங்க இலக்கியப் பாடல்கள் தெரிவிக்கின்றன[16].

இவ்வகையில், பிற்காலத்திய மார்கழி நோன்புடன் தைந்நீராடல் திருவிழா பெரிதும் தொடர்பு உடையதாகக் காணப்படுகிறது.

## கூந்தல் களைதல்

கணவன் உள்ளவரையில் சிறப்புடன் மகளிர் போற்றப் பட்டனர். கணவனை இழந்தவுடன் எல்லாவற்றையுமே வாழ்வில் இழந்தவர்களாக மகளிர் கருதப்பட்டனர்.

கைம்பெண்டிரின் வாழ்க்கை அன்று அவலம் நிறைந்த வாழ்வாக இருந்தது. அழகூட்டு அணிகலன்களையும், வளையல்களையும் அவர்கள் அணியவே கூடாது எனும் காரணத்தால் கணவன் இறந்தவுடன் அவற்றை எல்லாம் கைம்பெண்கள் நீக்கிவிடுவர். எனவே, கணவனை இழந்த மகளிரைக் 'கழிகல மகளிர்' என்று சுட்டுவது வழக்கமாகும்.

அடுத்து, அவர்களுடைய கூந்தல் களையப்பட்டது.

கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி யுணவின் மனைவி (புறநா.280)

ஒள்நுதல் மகளிர் கைம்மை கூர
குவையிருங் கூந்தல் கொய்தல் கண்டே (புறநா.257)

கொய்மழித் தலையொடு கைம்மை யுறக் கலங்கிய
கழிகல மகடூஉ ( புறநா.261 )

எனும் புறப்பாடற் பகுதிகளால், மகளிருடைய கூந்தல் கணவன் இறந்தவுடன் மழிக்கப்பட்டமை புலனாகிறது. அணிமைக்காலம் வரையில் தமிழ்நாட்டில் பார்ப்னர் சமூகத்தில் இவ்வழக்கம் வழக்கில் இருந்து வந்தது. இன்றும் அருகிய வழக்காக இருந்து வருகிறது.

இச்செயலால் மகளிருடைய அழகு குலைக்கப்பட்டது என்பது உண்மை. மானிட இயல் நூலார் இதற்கு வேறு காரணம் கூறுவர். "பெண்ணை மனைவியாகப் பெற்றவனுடைய சிறப்புமிகு ஆற்றல் அனைத்தும், அவளுடைய தலையில் - முடியில் - குவிந்து கிடக்குமாம். கணவனுடைய மறைவால், அவள் அந்த் ஆற்றல்கள் அனைத்தையும் இழந்துவிட்டாள் என்பதைப் புலப்படுத்தும் அறிகுறியே விதவைகளுக்கு மொட்டை அடித்தலாகும்"[19] என்று விளக்கம் தருவர்! சமுதாயத்தின் மதிப்பினை இழந்தவள்; அழகற்றவள் என்பதை உணர்த்தவே 'கூந்தலைக் கொய்தனர்' எனலாம். எனினும் மகளிர்க்கு வழங்கப்பட்ட மாபெருந் தண்டனையே 'கூந்தல் கொய்தல்' எனக் கூறினால் அது தவறாகாது.

கணவனை இழந்த மகளிர்க்கு மறுமணம் செய்து கொள்ளும் உரிமை, சங்ககாலத் தமிழ்ச் சமுதாயத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. கைம்மை நோன்பு கொண்ட ஏழை எளிய மகளிர் நூற்றல்[17] தொழிலில் ஈடுபட்டு வாழ்க்கைக்கு வழி தேடிக்கொண்டனர்.

## வாளால் வெட்டி அடக்கம் செய்தல்

குழந்தைகள் பிறந்தவுடன் இறந்தாலோ இறந்தே பிறந்தாலோ அவற்றை வாளால் வெட்டிப் புதைப்பது அக்காலத்திய பழக்கமாகும். குழந்தை வடிவம் பெறாமல், குறை வடிவமாக - வெறும் சதைப்பிண்டமாக இருந்தாலும் இப்பழக்கத்தில் இருந்து தப்ப இயலாது என்பர்.

இவ்வாறு வெட்டிப் புதைக்கும் பழக்கம் இன்னொரு பழக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. பிறந்தோர் யாவரும்-சிறப்பாக ஆடவர் யாவரும்-நாட்டுக்காகப் போர்க் களத்தில் உயிரை விடவேண்டும் என்று சங்ககால மக்கள் கருதினர். இந்த உணர்வு உலகின் பல்வேறு நாடுகளிலும் வீர யுகக் காலத்தில் இருந்ததை வரலாறு பேசுகிறது. இவ்வாறு இறந்தால்தான், துறக்க இன்பம் - வீரசுவர்க்கம் - கிடைக்கும்

என்று அவர்கள் நம்பினர். ஆகவே, போர்க்களத்தில் இறக்கும் வாய்ப்பினைப் பெறாது, குழந்தைப் பருவத்தில் இறந்தாலும், முதுமையுற்று இறந்தாலும், இறந்தபின்னர் சங்ககாலத் தமிழ்மக்கள் வாளால் வெட்டித்தான் புதைத்தனர்.

நோயினால் இறந்தோரை, போர்க்களத்தில் உயிரை விடாத குற்றம் நீங்கும்படி, பசும்புல்மீது கிடத்தி, 'அற நெறியில் வாழும் நான்மறை முதல்வர்கள் வீரமும் துணையாகப் போர்க்களத்தில் இறந்தோர் செல்லுமிடம் செல்லுக' எனக்கூறி வாளால் வெட்டிய பிறகு அடக்கம் செய்வது பண்டைத் தமிழரின் பழக்கமாகும்[18].

இக்காலத்தில் முதியோர் இறந்தால் இவ்வாறு செய்வதில்லை. ஆனால் குழந்தை இறந்துவிட்டால் இடுகாட்டில் அடக்கம் செய்வதற்கு முன்பு சிறு கத்தியாலோ, காட்டு முள்ளினாலோ கைவிரல்களில் ஓரிடத்தில் - சிறப்பாக நுனி விரலில் கீறி அடக்கம் செய்வதைக் காணலாம். சில சமூகங்களில் காதிலேனும், மூக்கிலேனும் கீறி அடக்கம் செய்யும் வழக்கம் இருந்து வருகிறது. இதனைப் பண்டைக் காலப் பழக்கத்தின் 'எச்சமிச்சம்' எனலாம்.

## கல் எடுப்பு

வீரராக இறந்தோர்க்குக் கல் நடும் வழக்கம் - 'நடுகல்' நாட்டும் வழக்கம், அன்று பெருவழக்காகும்.

> காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்
> சீர்தரு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று
> இருமூன்று வகையின் கல்லொடு புணர
> ( தொல்.பொருள். )

என்று நடுகல் நாட்டும் பழக்கத்தின் பல்வேறு நிலைகளைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். கல் நடுதல் தொடர்பாகப் பல்வேறு பழக்க வழக்கங்கள் உருவாகியுள்ளன. கல்லில் இறந்தோர் பெயரைப் பொறித்தலும் அவருடைய அருஞ் செயல்களை எழுதுதலும் பின்னர் அக்கல்லுக்கு மயிலிறகு மலர்களைச் சூட்டுதலும், கள், பாற்சோறு படைத்தலும், பூவும் நெல்லும் தூவி வழிபடுதலும் நடுகல் வழிபாட்டு முறையாகும். நடுகல்லின்மீது வெண்மையான துணியினால் பந்தல் இடுவதும் உண்டு[19].

இன்றும் இறந்த பதினாறாம் நாளில் செய்யப்படும் இறுதிச்சடங்கில் கல் எடுத்து வழிபாடு செய்து பிறகு ஆற்று நீரிலோ குளத்து நீரிலோ அதனை விடுவது வழக்கமாகும்.

இதனைக் கல்லினைத் தண்ணீரில் வீழ்த்துதல் என்பர். பண்டைய நடுகல் வழிபாட்டுமுறை பல்வேறு மாற்றமுற்று பெயரளவிற்கு இன்றும் பின்பற்றப்படுவதை இந்த வழக்கம் நினைவுபடுத்துகிறது.

இதே நடுகல் வழிபாடு பிற்காலச் சோழர் காலத்தில் இறந்தோரை அடக்கம் செய்தவிடத்தில் எழுப்பப்பட்ட கோயில் வழிபாடாக மாறியது. இத்தகைய நினைவுச் சின்னக் கோயில்களைப் பள்ளிப்படை[20] என்பர். வடமொழியில் அதிஷ்டானம் என்பர். சங்ககாலத்திற்குப் பிறகு வீரர்களுக்கு-சிறப்பாகப் போரில் உயிர்நீத்த அரசர்களுக்கும் பொதுவாக அறவாழ்வு நடத்தி மறைந்த சான்றோர்களுக்கும், சித்தர்களுக்கும், ஞானிகளுக்கும் அவர்களுடைய உடல் அடக்கம் செய்யப்பட்ட இடங்களில் நினைவுச்சின்னங்களாகக் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. இன்றைக்கும் புதைக்கும் பழக்கம் உள்ள சமூகத்தினர் புதைத்த இடத்தில் சமாதி அமைத்து அதன்மீது சிவலிங்கத்தை நாட்டி வழிபாடு செய்கின்றனர்.

இன்று சிறப்புற்று விளங்கும் தமிழகத்தில் சிவனோடு தொடர்புடைய திருக்கோயில்கள் பல இவ்வாறு அமைந்தனவாகத் தோன்றுகின்றன. தில்லைச் சிற்றம்பலத்தின் (சிதம்பரத்தில்) நடராசர் திருக்கோயில் திருமூலர் சமாதியை ஒட்டி எழுந்ததாகத் தெரிகிறது. நடராசருடைய திருக்கோயிலின் உள்ளே இடதுபக்கத்தில் 'திருமூலட்டானேசுவரரின்' கோயில் ஒன்று உள்ளதை யாவரும் அறிவர். அங்கும் சிவலிங்கம் இருப்பதைப் பார்க்கலாம். இதனையே திருமூலர் சமாதியாகக் கூறுவர்.

இன்றைக்குப் பழனியில் உள்ள பழனியாண்டவர் கோயில் உலகப் புகழ் பெற்றுள்ளது. அம்மலையடிவாரத்தில் உள்ள ஊருக்குச் சங்ககாலத்தில் 'ஆவி நன்குடி' (ஆவியர் அரச மரபினரின் (பேகன்) இருப்பிடம்) என்பது பெயராகும். அங்கு ஒரு முருகன் கோயில் இருக்கிறது. சங்க காலத்தில் அக்கோயிலே சிறப்புற்று விளங்கியது.

இன்று பழனி (சங்க காலத்தியப் பொதினி) மலைக்கு இடைக்காலத்தில் 'சித்தன் வாழ்வு' என்பது பெயராகும். இன்றைய தண்டபாணி சாமித் திருக்கோயில் ஒரு சித்தருடைய சமாதியின்மீது எழுப்பப்பட்டதாகும். இங்கு வழிபாடு செய்யப்படும் 'பழனியப்பன்' ஒரு மாபெருந் துறவிக் கோலத்தில் காட்சி தருவதும் இதை உறுதிப்படுத்துகிறது.

மற்றும் இக்கோயிலுக்குச் சிறிது தொலைவில் 'போகர்' எனும் சித்தரின் சமாதி வழிபாடு செய்யப்படும் இடமாக உள்ளதை இன்றும் காணலாம்.

இவற்றால் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த நச்சினார்க்கினியர் எனும் புகழ்மிகு உரையாசிரியர் இம்மலையில் உள்ள கோயிலைச் 'சித்தன் வாழ்வு' என்று குறிப்பிட்டுள்ளதன் உண்மை புலனாகின்றது[21].

"தென்னிந்தியாவின் திருக்கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும்" பற்றி ஆராய்ந்த அறிஞர்களும் தமிழகத்தின் பெரும்பாலான கோயில்கள் 'நடுகல் - சமாதி' நினைவுச் சின்னங்களை அமைக்கும் பழக்கத்திலிருந்து தோன்றி வளர்ந்தனவாக இருத்தல் வேண்டும்[25] எனும் முடிவிற்கு வந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

நடுகல்லில் இருந்த வீரனுடைய வீரத்தையும், பெயரையும் சாதனைகளையும் பொறிப்பது சங்ககாலத்திய வழக்கம். பிற்கால (வீரக்கற்களில்) மறைந்த வீரனுடைய வடிவமும், அவனுடைய படைக்கருவிகளும், பிற பொருள்களும் செதுக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம்[26].

சேரன் செங்குட்டுவன் பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் நினைவாக, வஞ்சிமாநகரில் கோயில் - பத்தினிக் கோட்டம் சமைத்தான். கோயிலின் உள்ளே கண்ணகியின் சிலையை அமைத்து கடவுள் மங்கல (குடமுழுக்கு) விழா நடத்தி 'பத்தினித் தெய்வ' வழிபாட்டிற்கு வழி சமைத்தான் என்று சிலப்பதிகாரம் பேசுகிறது.

கண்ணகியின் சிலையைச் செய்வதற்கு இமயமலையில் கல்லினைத் தேர்ந்து எடுத்தான். அதனைக் கங்கையாற்றில் திருமுழுக்கு ஆட்டினான், பிறகு சேரநாட்டிற்குக் கொண்டு வந்து அக்கல்லில் கண்ணகியின் சிலை வடித்தான்; பின்னர் பத்தினிக் கோட்டத்தில் அச்சிலையினைத் தெய்வமாக அமைத்து விழாவெடுத்து வழிபாடு செய்தான். இச்செயல்களை காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், வாழ்த்து எனும் ஐந்து காதைகளில் இளங்கோவடிகள் விரித்துரைத்துள்ளார். இந்த ஐந்து தலைப்புகளும் நடுகல் வழிபாட்டில் மேற்கொள்ளப் பட்ட செயல்முறைகள் என்பதனை நாம் முன்னமே கண்ட தொல்காப்பிய நூற்பாவால் அறிகிறோம்.

இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து நோக்குகின்ற பொழுது உருவ (விக்கிரக) வழிபாடும் திருக்கோயில்

வழிபாடும் சங்ககாலத்திய தமிழ் மக்கள் போற்றிப் பின்பற்றிய நடுகல் வழிபாட்டில் இருந்தே தோன்றி வளர்ந்து சிறந்து பல்லவர் - நாயன்மார் - ஆழ்வார்கள் - காலத்தில் திருக்கோயில் வழிபாட்டு அமைப்பாகவும் - ஒரு சமுதாயமாகவும் நிறுவனமாகவும் பெருவழக்கிற்கு வந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

## குறிப்புகள்

1. ஐங். 399.
2. தொல். பொருள். 146.
3. பத்து. நெடு. 64.
4. குறுந். 178, 307, பத்து. மதுரை. 193.
5. சிலப். 30:160-165.
6. (1) பத்து. சிறுபாண். 29-30.
   (2) அகம். 274.
7. சிலப். 24:19-20.
8. திருக். 1289.
9. தொல். பொருள். கற்பு. 146.
10. புறநா. 279, 329.
11. சிலப். 27:229.
12. அகநா. 11, 161, 185.
13. நற். 202.
14. பரிபா. 11.
15. நற். 22.
16. நற். 80, கலி. 59.
17. புறநா. 306, நற். 359.
18. புறநா. 74, 93.
19. புறநா. 221, 223, 232, 260, 261, 263, 264, 306, 314, 329, 335.
20. Heriage of the Tamils - Temple Arts, p. 358.
21. பத்துப். திருமுரு. நச்சி. உரை.
22. அகம். 67.

# இயல் - 5

# அழகுக் கலைகள்

## முத்தமிழ்

உலகம் கண்டு வியக்கத்தக்க அழகுக் கலைகள் பலவற்றைத் தமிழகம் உலகிற்கு அளித்துள்ளது. தமிழருடைய முருகியல் உணர்வு முத்தமிழாக முகிழ்த்தது. மும்மலை, முந்நாடு, மூவரசு, முப்பொருள், முப்பால் என்று மும்மூன்றாக எதையும் தொகுத்துக் கூறுவது பண்டைத் தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்பாகும். இம்மரபு வழியே முகிழ்த்ததே பண்டைத் தமிழருடைய 'கலையியல்' கோட்பாடாகிய முத்தமிழாகும். 'தெரிமான் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' எனும் பரிபாடல் பகுதியால் (தி.4) சங்க காலத்தின் கடைப்பகுதியில் தமிழருடைய அழகியல் உணர்வு 'முத்தமிழாக' வள்ர்ச்சியுற்றதைக் காணுகின்றோம்.

பண்டைத் தமிழ் மக்களின் அழகியல் உணர்வு அவர்கள் பேசிய மொழியின் மூலம் மூவகையாக வெளிப் பட்டது. அவை இயல், இசை, நாடகம் என்பனவாகும். இயற்றமிழ் எண்ணத்தை வளர்ப்பது; சொற்களால் எண்ணத்தை வெளிப்படுத்துவது. இசைத்தமிழ் உள்ளத்து உணர்ச்சிகளை ஒலி நயத்தால் உணர்த்துவது. நாடகத்தமிழ் உள்ளத்து உணர்ச்சிகளைக் கண்ணுக்குப் புலனாகுமாறு காட்டுவது, உடலினுள் இருந்து எழும் உணர்ச்சி ஆற்றலால் ஒலி வெளிப்படுகிறது. அவ்வொலியால் அமைவதே 'மொழி' என்று பண்டைத் தமிழர் கருதினர். அம்மொழியால், அமையும் இலக்கிய, இலக்கணங்களை 'இயற்றமிழ்' என்று போற்றினர். கேட்போரைத் தன் வயப்படுத்தும் ஆற்றலுடன் உள்ளத்தில் எழும் உணர்வுகளை இன்னொலியுடன் உணர்த்தும் மொழியை 'இசைத்தமிழ்' என்றும் குறித்த உணர்ச்சியையும், சுவையையும் இயலும் இசையும் இணைந்து விளங்க, நடிப்பால் வெளிப்படுத்துவதை 'நாடகத்தமிழ்' என்றும் அவர்கள் பாகுபாடு செய்துள்ளனர்.

## இயல்தமிழ்

இயல்தமிழ் இலக்கிய இலக்கணங்களின் வாயிலாக வளர்ந்து வருகிறது. இந்திய இலக்கியங்களுள், தமிழ் இலக்கியம்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொடர்ந்த வரலாற்றை உடையதாகும். உலகச் செம்மொழியாகப் போற்றப்படுவதற்குரிய தகுதியும் சிறப்பும் வாய்ந்தது தமிழ்மொழி. இதனுடைய பழைய இலக்கியங்களான தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள் என்பன சமயச் சார்பற்றன வாகும். மனித இனத்தின் அடிப்படை உணர்ச்சியாகிய காதலைப் போற்றிப்பாடும் 'அகப்பொருள்' பாடல்களையும் போரையும் வீரத்தையும் போற்றிப் பாடும் 'புறப்பொருள்' பாடல்களையும் பண்டைத் தமிழ்ப்புலவர்கள் பாடியுள்ளனர். அவர்கள், குறிப்பிட்ட எச்சமயத்திற்கும் தம் பாடல்களில் முக்கியத்துவம் தரவில்லை. ஆனால் அன்றைய தமிழ்மக்களின் வாழ்க்கையையும், நாட்டுப்புறக் காட்சிகளையும் நகர வாழ்வின் வளத்தினையும், இயற்கை எழிலினையும் அவர்கள் ஏற்றிப் போற்றினர்.

உலக மொழிகள் பலவற்றினும் காதல் பாடல்கள் - இலக்கியங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே சங்க காலத்தின் தமிழ் அகப்பொருள் பாடல்களுக்கு என்ன சிறப்பு? எனும் எண்ணம் எழலாம். உலகின் பிற மொழிகளிலெல்லாம் 'காதல் இலக்கியங்கள்' எல்லாம் சிதைந்த காதலை முறிந்த காதலை, கருகிய காதலைச் சொல்லோவியங்களாகத் தீட்டிக் காட்டுகின்றன. சங்கத் தமிழ்ப் பாடல்களோ காதலின் வெற்றியை, காதலரின் வெற்றிமிகு இன்ப வாழ்வின் சிறப்பியல்புகளை மிகவும் நுட்பமாகக் படம்பிடித்துக் காட்டுகின்றன. 'அன்பின் ஐந்திணை' எனும் கோட்பாடு நிறைவேறாத காதலைப் பற்றிப் பேசவில்லை; காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுப்பட்ட இன்ப வாழ்க்கையை ஐந்து நிலைகளாகப் பாகுபடுத்திக் காட்டுகிறது.

இலக்கியத்தில் இடம்பெறும் தமிழ்மக்களின் வாழ்க்கையை அகம், புறம் என்று பாகுபாடு செய்து, அவற்றைப் பல்வேறு நுட்பமான மனவுணர்ச்சிகளை வெளிப் படுத்தும் வகையில் விரித்து விளக்குவது தமிழர்க்கே உரிய பொருள் இலக்கணம் என்பதாகும். இப்பொருள் இலக்கணத்துள் அகப்பொருள் இலக்கணம் தனிச்சிறப்பு வாய்ந்தது. அவ்விலக்கண மரபையொட்டி இயற்றப்பட்டு உள்ளவையே அகப்பொருள் இலக்கியங்களாகும். அவற்றுள் காதலர் உள்ளத்தின் தூய அன்பின் திறத்தையும், உறுதிப் பாட்டையும், கூடல், பிரிவு, இருத்தல், ஊடல், இரங்கல் எனும் ஐவகை வாழ்க்கை நிலைகளால் பண்டைத் தமிழ்ச் சான்றோர் வெளிப்படுத்தியுள்ளனர். இவற்றையே குறிஞ்சி, பாலை,

முல்லை, மருதம், நெய்தல் எனும் திணைகளாகக் கூறுவர். இத்தகைய திணைவழிப்பட்ட அகப்பொருள் இலக்கியத்தை-காதல் பாடல்களை - உலகில் வேறு எந்த மொழியிலும் காண வியலாது.

சங்க இலக்கியம் யாவும் அரசர்களுக்காகவோ, மத குருமார்களுக்காகவோ இயற்றப்பட்டன அல்ல; மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு பல்வகை உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்வியல் பாங்குடன் மக்களுக்காக இயற்றப்பட்டனவாகும்.

சொற்சுருக்கமும், தெளிவும், இனிமையும், இன்ப எக்களிப்பும் மனித இனத்தின் உணர்ச்சித் துடிப்பும் நிறைந்த உயிரோவியங்களாக விளங்கும் இச்சங்கப் பாடல்கள் 'செம்மொழி இலக்கியங்களாக'ப் போற்றத் தக்கன. இவற்றோடு பிண்டாரின் படைப்புகளே ஒப்பிடத்தக்கன. பிண்டாரின் படைப்புகளைக் காட்டிலும் அமைதியழகும் சொல்நயமும் வாய்ந்தனவாக இவை உள்ளன. இந்திய நாட்டு இலக்கியங்களுள் நன்கு முதிர்ச்சியுற்றதும், மக்களுடைய உள்ளத்தின் நுட்பமான உணர்ச்சிகளைச் சித்தரிப்பதும் சங்க இலக்கியம் எனலாம். சங்க இலக்கியம் மாண்புமிக்க கிரேக்கக் கலையின் வனப்பையும், நடுவுநிலைப் பண்பையும், அமைதிப் பொலிவையும் பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்[1].

பழந்தமிழ் இலக்கியங்களிலே ஒப்புயர்வற்றது திருக்குறள் எனும் இலக்கியமாகும். இந்நூல் அனைத்துலக மனிதனைப் பாடுவதாகும். "அன்பு சமூக சேவையாக வளர்ந்து சிறக்க வேண்டும் எனும் கருத்து திருக்குறளிலேதான் வலியுறுத்தப்படுகிறது.... நெடுங்காலமாகத் தமிழ் நாட்டிலே வேரூன்றி வளர்ந்த கருத்துகளை அவர் (திருவள்ளுவர்) குறள் வெண்பா வடிவில் எடுத்துரைத்தார்.... செயல் மூலமாகவும் சேவை மூலமாகவும் மற்றவர்களுக்கு நன்மை செய்ய இயலுகிறதே! அதற்காகச் செயலில் ஈடுபடு! வள்ளுவர் இடும் கட்டளையாகும்"[1] என்னும் கருத்து இங்குச் சித்திரிக்கத் தக்கதாகும்.

செயலில் ஈடுபடுவதன் மூலம் மனிதனுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது எனும் கருத்து இந்திய மலக்கியங்களில் வேறு எங்கும் காண இயலாதது. இந்தக் கருத்தை வள்ளுவர் பல இடங்களிலே வற்புறுத்தியுள்ளார் என்னும் ஆய்வுரை திருக்குறளின் வாழ்க்கை மறுப்பு இன்மைக் கோட்பாட்டைக் கோடி காட்டுகிறது.

பழைய தமிழ் இலக்கியத்துள் சாதி, சமய, இன, மொழி, காலம் ஆகிய வேறுபாடுகளை எல்லாம் கடந்து உலக மக்களுக்கு என்றும் எப்பொழுதும் பயன்படத்தக்க உலகப் பொதுமறையாக விளங்குவது திருக்குறள்.

கற்டார் உள்ளத்தை உருக்கும் சிறப்புமிகு கவிதை நயத்தோடு மனித இனத்தின் அன்பினை வெளிப்படுத்துவது 'சிலப்பதிகாரம்' எனும் காப்பியமாகும். காப்பியப் பண்புகளை முழு நிறைவு பெற்றதாக இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழையும் முறையாகக் குழைத்துத் தருவதாக அமைந்துள்ளது இம்முத்தமிழ்க் காப்பியம். இது புகழ்மிக்க உலகப் பெருங்காப்பியங்களோடு ஒப்பாக வைத்துப் போற்றத்தக்க சிறப்புடையது என்பர்.

பௌத்த சமயத்தோடு தொடர்பு கொண்ட உலக மொழிகள் நூற்றைம்பதிற்கு மேற்பட்டனவாக உள்ளன. ஆயினும் அச்சமயத்தின் கொள்கைகளையும் கோட்பாடு களையும் விளக்கும் காப்பியம் அம்மொழிகளில் இன்று இல்லை. தமிழிலுள்ள பௌத்த சமயக் காப்பியமாகிய மணிமேகலை ஒன்றுதான் அச்சமயத்தின் தனிப்பெருங் காப்பியமாக விளங்குகிறது.

## இசைக்கலை

முத்தமிழுள் இயல்தமிழ் அடைந்த வளர்ச்சியை நோக்குகின்றபொழுது இசைத்தமிழும் நாடகத்தமிழும் நன்கு வளர்ச்சியுற்றிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. இவற்றின் சிறப்பு இயல்புகள் சிலவற்றை இங்கு காணலாம். இசைத்தமிழ் பண், திறம் எனும் இருவகைப் பிரிவுகளையுடையது. மாத்திரைகள் எனப்படும் 22 வகை சுருதிகளும், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற எழுவகைச் சுரங்களும் தொன்றுதொட்டு இசைத்தமிழின் கூறுகளாகப் போற்றப்படுகின்றன.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே இசைத்தமிழ் வளர்ச்சி யுற்றதைப் பழந்தமிழ் நூல்களால் நாம் அறிகிறோம். காலப் போக்கில் பழந்தமிழிசையில் திரபுகளும் மாற்றங்களும் உண்டாயின. 'கரு நாடக இசை' எனும் புதிய பெயரினை அது பெற்றது. கருநாடக சங்கீதம் என்று வழங்கும் தென் னாட்டு இசைக்கலை தமிழ்மக்களின் பரம்பரைச் சொத்து. சிலப்பதிகாரக் காலத்துக்கு முன்பிருந்து தமிழ் நாட்டில் இந்த இசைக்கலை உருவம் பெற்று வளர்ந்தது என்பது அறிஞரின் துணிவாகும். இவ்விசையினைத் தம் வாழ்க்கையின் பல்வேறு

துறைகளிலும் நிலைகளிலும் தமிழ் மக்கள் போற்றி வளர்த்துள்ளனர். அதில் இனிமையும் கனிவும் அமைந்தும் அகத்தெழு உணர்ச்சி ஆன்மீக ஒலி நயத்தில் தோய்ந்தும் வெளிப்படுவதை இன்றும் கேட்டுணரலாம்.

இசை என்பது வாயினால் பாடுவது மட்டும் அன்று; கருவியினால் இசைப்பதும் இசையேயாகும். பன்னெடுங் காலமாக குழல், யாழ், முழவு எனும் மூவகை இசைக்கருவிகள் பெருஞ்சிறப்புடையனவாகத் தமிழகத்தில் போற்றப்பட்டு வருகின்றன. குழலிசைத் துளைக்கருவி வகையிலும் யாழினை நரம்புக் கருவி வகையிலும், முழவினைத் தோற்கருவி வகையிலும் அடக்குவர். இவற்றுள் யாழ் என்பது வீணை எனும் இசைக்கருவி தென்னாட்டில் புகுத்தப்படுவதற்கு முன்னர்ப் பெருவாழ்வு பெற்று விளங்கியது. ஏழு நரம்புகளைக் கொண்ட சிறு யாழ் முதல் ஆயிரம் நரம்புகளைக் கொண்ட பேரியாழ் வரை பலதிறப்பட்ட யாழ்க்கருவிகளை (சகட யாழ், செங்கோட்டி யாழ், வில் யாழ், மகர யாழ், பேரியாழ் முதலியன) ப் பண்டைத் தமிழர் இசைத்து மகிழ்ந்தனர். வீணையில் எழுப்ப இயலாத சுரங்களை யெல்லாம் யாழிலே இசைத்து நம் முன்னோர்கள் இன்புற்றனர். இந்திய இசைக் கருவிகளுள் யாழுக்கும் அதன் இசைக்கும் தனி இடம் உண்டு.

இன்று தமிழகத்தில் சிறப்புற்று விளங்கும் வீணை யாழினை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த வளர்ச்சிக் கேற்பச் சில மாற்றங்களோடு அமைத்துக் கொள்ளப்பட்ட இசைக்கருவியாகும். வீணை முதலில் யாழ் போன்று இருந்து படிப்படியாக இன்றைய வளர்ச்சி அடைந்தது என்பது இசையியலறிஞரின் துணிவாகும்[2]. தமிழகத்து மக்களே, இன்றும் வீணையை இசைப்பதில் தலைசிறந்த கலைஞர்களாக விளங்குகின்றனர். இதை, வட இந்திய அறிஞர்கள் தம் ஆராய்ச்சியின் மூலம் உலகிற்கு உணர்த்தியுள்ளனர். எனவே பழந்தமிழிசை இன்று கருநாடக சங்கீதமாகவும் பண்டைத் தமிழகத்து இசைக் கருவியான யாழ் இன்று வீணையாகவும் மாற்றமும் வளர்ச்சியும் பெற்றுள்ளதை யாரும் எளிதில் புறக்கணிக்க இயலாது.

## நாட்டியக்கலை

தமிழகத்தின் மற்றொரு சிறப்புமிக்க கலை பரத நாட்டியம். இக்கலையே, பல்வேறு கலைகளுக்கு அடிப்படை யாகவும், மூலமாகவும் இருந்து வருகிறது. உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளையும், கருத்துகளையும் உடல்

உறுப்புக்கள் வாயிலாகப் புறத்தார்க்குப் புலப்படுத்துவதே நாட்டியக் கலையின் நோக்கம். முகக்குறிப்பு, கண்குறிப்பு, கைக் குறிப்பு என்னும் பகுதிகளைக் கொண்ட நாட்டியக் கலையோடு இசைக்கலையைக் கலந்து பேரின்பத்தை அளிக்கிறது பரத நாட்டியம். எண்வகை மெய்பாடுகளே இக் கலையின் உயிர்நாடி. இக்கலை கோயிலில் பயன்படுத்தப்படும் சிற்பக்கலை, படிமக்கலை, இசைக்கலை ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பும் இசைவும் கொண்டது. இதனைப் போற்றி வளர்த்துவருவது மட்டும் அல்லாமல் இன்றைக்கு அக்கலைக்கு ஒரு புதுவாழ்வினை அளித்து, உலகப் பெருங்கலையாக அதனை மாற்றி வருகின்றவர்களும் தமிழர்களேயாவர்.

இவ்வழகுக்கலை தோன்றி வளர்ந்தது தமிழ்நாட்டில். ஆனால், இக்கலையின் நுட்பத்தைத் அறிவியல் முறைப்படி ஆராய்ந்து, நாட்டிய சாத்திரத்தை பரதர் என்னும் கலைஞர் வடமொழியில் எழுதியுள்ளார். நாட்டியம் எனும் சொல் 'நிருத்' எனும் திராவிடமொழியின் வேர்ச்சொல்லிலிருந்து நிருத்த, நிருத்திய, நாட்டிய என்று திரிந்திருப்பதாக மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர்[9]. மேலும் பரத முனிவர் தென்னாட்டைச் சேர்ந்தவர் என்றும், அவர் ஆரியர் அல்லாத இந்தியப் பழங்குடி மக்கள் இனத்தைச் சேர்ந்தவர் என்றும், தம் காலத்திய நிலைமைக்கேற்ப வட மொழியில் நாட்டிய சாத்திரத்தை அவர் இயற்றியருளினார் என்றும் வடமொழி நாடக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தென்னாட்டில் நாட்டியக்கலை தெய்வீகக் கலையாகப் போற்றி வளர்க்கப்பட்டு வருவதைக் கல்வெட்டுகளும் இலக்கியங்களும் எடுத்து இயம்புகின்றன. இக்கலையின் தனிச் சிறப்பை, இந்தியாவில் வளர்க்கப்பட்டுள்ள நாட்டியக் கலைகள் அனைத்திலும் பரத நாட்டியக் கலை தலை சிறந்ததாகும். இதனுடைய தொன்மைச் சிறப்பும் ஏற்றமும் எழிலும் பிற நாட்டியக் கலைகளில் காணப்படவில்லை. பரத நாட்டியத்தின் மேன்மையையும் சிறப்பையும் அதனுடைய பெண்களாகக் கருதத்தக்க இந்தியாவின் பிற நாட்டியக் கலைகளில் காண்பது அரிது[11] என்று பரத நாட்டியக்கலையின் தன்னிகரற்ற தலைவியாக விளங்கும் திருமதி ருக்குமணிதேவி மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

நாட்டியத்தோடு கதையும் பாட்டும் இணைந்து வளர்ந்தபொழுது, நாடகம் வளர்ந்தது. இதைக் கதை தழுவிய கூத்து என்பர். இது இரு வகைப்படும். அகக் கூத்து, புறக்

கூத்து என்பது ஒருவகை. சாந்திக் கூத்து, விநோதக் கூத்து என்பது மற்றொரு வகை. இவை ஒவ்வொன்றும் பல்வேறு வகை உறுப்புகளை உடைத்தாய் இருந்தன. இவற்றை வேத்தியல், பொதுவியல் எனவும் பாகுபடுத்துவர். வேந்தனது அவையில் நடிப்பதற்குரிய தகுதியும், கலைச்சிறப்பும் வாய்ந்தது வேத்தியல். பாமர மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் ஆடப்பட்ட ஆடல்களும், சமயச் சடங்குகளோடு இணைந்த கூத்துகளும் பொதுவியல் எனப்பட்ட வரிக் கூத்துகளும் பதினோராடல்களும் இத்தகையனவாகும்.

### சிற்பக்கலை

நம் இந்தியக் கலையின் முழுமையான வளர்ச்சியில், திராவிட மக்களின் கலைப்படைப்புகள் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. எளிதில் வேறுபாட்டைக் கண்டறியக்கூடிய வகையில், திராவிடக் கலைப்பாணி தற்சார்புடைய தனி இயல்புகளையும், சுவையுணர்வுகளையும் உடையதாய் இருந்து வருகிறது. இவ் வேற்றுமைப் பண்புகளைச் சிறப்பாக நாம் கட்டடக்கலையிலும் தெய்வத் திருமேனிகளை வடிக்கும் படிமக் கலையிலும் மிகப் பேரளவில் காணலாம். இவை, இந்தியா முழுமைக்கும் பொதுவான சமயத் துறைப்பயன் பாதிப்புகளையும் உருவச்சிலை வடிவக் கூறுகளையும் முற்றிலும் புறக்கணித்துவிடவில்லை என்பது உண்மை. ஆயினும், திராவிடக் கலை முறையில் தனிச் சிறப்புமிக்க, கலைப்பாணிகளும், உருவச்சிலைகளின் அமைப்பில் இந்தியாவின் வேறெந்த பகுதியிலும் காண இயலாத இயக்கமும் நெகிழ்வும் நொசிவும் கொண்ட சிறப்பியல்புகள் இடம்பெற்றுள்ளதை நாம் கருத்தில் இருத்த வேண்டும்.

இந்தியக் கலையின் பல்வேறு பகுதிகளோடு திராவிடக் கலையின் வளர்ச்சியைத் தொடர்புபடுத்தாமல், அதைத் தனியாகத் தென்னாட்டு வரலாற்றின் அடிப்படையில் ஆராய்கின்றபொழுது, திராவிடக் கலை இயல்புகள் மிகப் பேரளவில் தெளிவும் பொலிவும் பெற்றுத் தனிச்சிறப்புடன் ஒளிர்கின்றன.

தமிழ்நாட்டுக் கோயில் சிற்பங்கள் உலகத்தையே இன்று வியப்படையச் செய்துள்ளன. கால இடையீடில்லாமல் இங்குத் தொடர்ந்து வளர்ச்சியுற்றிருப்பதைக் காணுகின்றோம். பன்னெடுங்காலமாகத் தொடர்ந்து, சிற்பக் கலை போற்றி வளர்க்கப்பட்டதன் விளைவாக யாதொரு

கட்டுப்பாடுமின்றி இயங்கும் வடிவங்களைப் படிப்படியாக அமைக்கத் தமிழகச் சிற்பிகள் கற்றனர். துணிவுமிக்க ஆக்க வேலையும், சரியான இசைவுப் பொருத்தமும் கண்டாரை வியப்படைச் செய்யும் வகையில் திராவிடச் சிற்பங்களில் இடம் பெற்றிருக்கின்றன. சிற்பங்களை வடிப்பதற்குப் பயன்படுத்தப் படும் பொருள்கள் யாதாக இருந்தாலும், அதில் ஒரு குழைவுத் தன்மையையும் நெளிவு சுளிவுகளையும் நாம் காண்கிறோம். நெகிழ்ச்சியும், இழைவும், குழைவும், அழுத்தமின்றிப் பரவலாகக் கலை நுட்பத்தைப் பயன்படுத்தலும் திராவிட சிற்பக்கலையின் முதன்மையான இயல்புகளாகும். மண்ணக வாழ்வை அடிப்படையாகக் கொண்டு, விளக்கத்தை நோக்கிச் செல்லுவதாகத் தமிழருடைய சிற்பக்கலை விளக்குகிறது. திராவிடக் கலையியலில் கலையுணர்வைவிட சமயவுணர்வு சிறப்பிடம் பெற்றுள்ளதை யாரும் மறுக்க இயலாது. அழகினைத் தூய்மையின் மூலந்தான் பெறமுடியும் என்ற நம்பிக்கை தமிழகத்துச் சிற்பிகளிடத்து நெடுங்காலமாக இருந்து வருவதை அவை அறிவிக்கின்றன.

மாமல்லபுரத்துச் சிற்பங்கள் கல்லிலே இழைக்கப்பட்ட காப்பியங்களாகும். பல்லவர் சிற்பக் கலையில் அடைந்த மாபெரும் வெற்றிக்கு - சாதனைக்கு, இவை அழியாப் பெருஞ் சான்றுகளாகும். பாறைகளில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள், தென்னிந்திய சிற்ப வடிவங்களின் களஞ்சியமாகக் காட்சி தருகின்றன. அவை அக்கமான கவின்மிகு கலைப்பாணி உடையன. பெரிதும் பயன்படுத்தாத இயற்கையும் அதில் இடம்பெற்றிருக்கிறது. ஆனால், அது தென்னிந்திய சிற்பக் கலையின் தனிச்சிறப்பு மிக்கப் பண்பாக விளங்குகிறது.

கங்கையின் தோற்றம் எனும் பாறைச் சிற்பங்கள் பல்லவர்களுடைய கலைச் சிறப்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். பல்லவர் கலைப் பாணியில் அமைந்த சிற்பங்களுள் இவை முக்கியமானவை. மான், குரங்கு, யானை, எருது போன்ற சிற்பிகளின் கைவண்ணத்தால் பொன்றாப் பெருவாழ்வைப் பெற்றுள்ளன. விலங்குகளின் உடற்கூற்று அமைப்பழகில் இத்தகைய உயிர்க்களையும், நிகழ்வியல் பாங்குமிகு அமைதியும், அருளுணர்வோடு அமைந்த கலை முறையையும் இந்தியாவில் வேறெந்தப் பகுதியிலும் நாம் காண்பது அரிது. புதுமையும் அழகும் பொருந்திய கலையியல் கொள்கை கைவரப்பெற்று இந்தியக்கலை இங்குத்தான் முழுமலர்ச்சி அடைந்துள்ளதைக் காணுகின்றோம். மனித வடிவின் இலட்சியத் தோற்றம் பல்லவர்களுடைய கலைப்

படைப்புகளிலே தலைசிறந்து விளங்குவதோடு இந்திய சிற்பங்களிலேயே ஒப்புயர்வற்றதாகவும் உள்ளத்தை நெகிழ்விப்பதாகவும் உள்ளன.

நிலைபேறற்ற உலகியல் வாழ்வில் நிலையான மதிப்பினைச் சோழர் காலத்திய சிற்பங்கள் பெற்றுள்ளன. ஆடையணிகள் உடலோடு பொருந்தியுள்ள காட்சி உடலுக்கு இயல்பான பொலிவை அளிப்பதோடு நுட்பமான கலைநயம் பொருந்தியனவாக உள்ளன. வடிவங்களின் அமைவு முறையில் கலையழகு நாட்டமும், உடலுறுப்புகளின் நெளிவு சுளிவுகளில் உள்ள நேர்த்தியும் நெகிழ்ச்சியும் சிறப்புமிக்கன. இவற்றோடு ஒருவகைப் புதுமை பொலிவும் சேர்ந்து சோழர்கால சிற்பக் கலைக்குப் பொன்றாப் புகழைத் தேடித் தந்துள்ளன.

திருக்கோயில்களின் கருவறையைச் சுற்றிலும் வெளிச் சுவர்களிலுள்ள மாடங்களில் பல தெய்வத் திருமேனிகள் சோழர் காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. கங்கைகொண்ட சோழீச்சுரத்தின் தெற்குச் சுற்றாலையில் கலைமகளின் கவின் மிகு சிற்பம் செதுக்கப்பட்டள்ளது. அச்சிற்பம் நல்ல பெருமிதமான தோற்றம் கொண்டது; அமைதி தவழும் அழகிய வடிவம் வாய்ந்தது; நீண்டுயர்ந்த மணிமகுடம் அதன் தலையை அழகுபடுத்துகிறது. வெள்ளைத் தாமரையில் அவள் வீற்றிருக்கும் கோலம் காண்பவர் கண்ணிற்கும் கருத்திற்கும் நல்விருந்தாகும். இது புடைப்புச் சிற்ப முறையில் அமைந்திருப்பதால் பேரழகுடன் பொலிவுறுகிறது.

திருவரங்கத்தில் வேணுகோபாலன் கோயிலின் தெற்கு சுற்றாலையில் உள்ள ஒரு மாடக்குழியிலே, கல்லில் கற்பனைப் பெண் ஒருத்தி நிற்கின்ற நேர்த்தி கையில் கண்ணாடி ஏந்தி யிருக்கின்ற எழில், அணிந்திருக்கும் அணிகளின் அழகு, இதழ்களிலே தவழும் புன்னகையாகிய அனைத்தும் காண்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவனவாகும். இதைப்போன்ற எண்ணற்ற சிற்பங்கள் இக்காலத்திய கலைப் பாணியின் ஏரையும் எழிலையும் உலகிற்கு உணர்த்துகின்றன.

### கட்டடக்கலை

இந்தியக் கட்டடக்கலை முறையில், தமிழ்நாட்டுக் கட்டடக்கலை தனிச்சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது.

தென்னிந்தியக் கட்டடக்கலை முறையைத் திராவிடக் கட்டடக்கலை முறை என்பர் மு.வே. தூப்ராய். தமிழகம் திருக்கோயில்கள் நிறைந்த திருநாடு. அத்திருக்கோயில்களி-

னுடைய விமானங்களின் அமைப்பும் அழகும் தமிழகத்திற்கே யுரிய புதிய கலைப்பாணியை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பிரமிட் போன்ற தோற்றத்தோடு வானுற உயர்ந்து விளங்கும் விமானங்களையும் கோபுரங்களையும் திராவிடக் கலைப்பாணியைச் சேர்ந்தவை எனப் பழைய சிற்ப நூல்களே கூறுகின்றன. கோயில் கட்டடக்கலை பல்லவர் காலத்தில் குகைக்கோயில்களாக அரும்பி சோழர் காலத்தில் விண்ணைத் தீண்டித் தழுவும் மாபெரும் கோயில்களாக மலர்ச்சியுற்றது பல்லவர் காலத்திய கோயில்கள் எளிமையின் எதிலும் அடக்கமான அமைப்பு முறையின் அழகும் உடையன. மண்டகப்பட்டு திருச்சிராப்பள்ளி மாமல்லபுரம் முதல்ய இடங்களில் உள்ள குகைக்கோயில்களும் மாமல்லபுரத்தில் ஒற்றைக் கல்லினால் அமைக்கப்பட்டுள்ள பஞ்ச பாண்டவர் தேர்களும் இத்தகையனவாகும். பல்லவர் காலத்திய கட்டுமானக் கோயில்களுள் மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயிலும் காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலும் வைகுந்தப் பெருமாள் கோயிலும் கோயில் கட்டடக் கலையின் வளர்ச்சியினை அறிவிப்பனவாகும். கட்டடக்கலைப்பாணியின் எளிமையும் அதே சமயத்தில் நேர்த்தியும் வாய்ந்தனவாகத் தமிழகத்துக் கட்டடக்கலை முன்னேற்றம் கண்டதை இக்கோயில்கள் தெரிவிக்கின்றன.

சோழர் காலத்திய கோயில்களின் அமைப்பு முறையில் வீறும் ஊற்றமும், அணியழகின் கலை நயமும், தொழில்நுட்பச் சிறப்பும் மேம்பட்டு விளங்குகின்றன. மாபெரும் விமானங்கள் எளிமையான எழிலைச் சிறிதளவும் இழக்காது. பெருமிதத் தோற்றத்தோடு பேரழகுப் பிழம்பாகப் பொலிகின்றன.

இப்புதிய கலைப்பாணியின் மாண்புமிக்க வடிவமாக விளங்குவது தஞ்சைப் பெருவுடையார் கோயில். இக்கோயிலின் விமானம் எகிப்திய பிரமிடுகளைப் போன்று மாபெரும் வடிவமாகப் பெருமிதத் தோற்றத்தோடு காணப்படுகிறது. அவ்விமானம் திண்மையும் உறுதியும் உடையதாய், என்றும் நிலைபெற்று விளங்கும் என்னும் நம்பிக்கையூட்டும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே, இதுவரை வகுத்தமைக்கப்பட்டுள்ள கோயில் விமானங்களில் நிலையான கட்டுக்கோப்புடையதாகக் காணப்படுவது தஞ்சை பெருவுடையார் கோயில் விமானமேயாகும். திராவிடக் கட்டடக் கலைஞரின் நேர்த்திமிக்க படைப்புகளுள் சிறிதளவும் ஐயத்திற்கு இடமின்றித் தலைசிறந்து விளங்குவது

இக்கோயிலாகும். தஞ்சைக் கோயிலின் விமானம், இந்தியக் கட்டடக் கலையின் மாட்சியினை அறிய ஓர் உரைகல்லாகவும் விளங்குகிறது[3].

தஞ்சைப் பெருவுடையார் கோயிலைப் போன்ற, ஆனால் சிறிது அடக்கமான அளவில் இராசேந்திர சோழனால், கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டப்பட்டுள்ள கங்கை கொண்ட சோழீச்சுரம் தஞ்சைக் கோயிலின் கலைப்பணியைப் பெரிதும் பின்பற்றி அமைக்கப்பட்டதாகும். ஓரளவிற்கு அதன் அமைப்பு முறைகளிலும், கட்டடக்கலை நயத்திலும் நுட்பமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் ஆண்மையின் வீறு மேலோங்கி நிற்கிறது என்றால் கங்கைகொண்ட சோழீச்சுரத்தில் பெண்மையின் பேரெழில் பொங்கி வழிகிறது எனலாம்[4].

தாராசுரத்திலுள்ள ஐராவதேசுவரர் கோயிலும் திருபுவனத்திலுள்ள கம்பேசுவரர் கோயிலும் சோழர் கலைப் பாணியின் பிற்கால இயல்புகளை நன்கு புலப்படுத்துகின்றன. இவற்றில் நுணுக்கமான வேலைப்பாடுகள் மிகுதியாக வளர்ந்துள்ளன. கோயில்களின் தலைவாயிலில் விண்ணை முட்டும் கோபுரங்கள் சிற்பக்கலைக் களஞ்சியமாக விளங்குகின்றன. இத்தகைய கோபுரங்களைச் சிதம்பரம், மதுரை, திருவண்ணாமலை முதலிய ஊர்களிலுள்ள கோயில்களிலும் காணலாம்.

**படிமக்கலை**

தமிழகத்தின் கலைப்படைப்புகளில் வெண்கலச் சிலைகள் தலைசிறந்தவை; தன்னிகரற்றவை.இந்தியாவிலேயே, தமிழகத்துச் சிற்பிகள் இத்துறையில் ஈடும் இணையுமற்ற மாபெரும் சாதனைகளைப் புரிந்துள்ளனர். கற்சிற்பங்களைப் போலவே இவையும் மிகத் தொன்மையான கலைமரபினைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளன. இவ்வெண்கலச் சிலைகள், சோழர் காலத்திலேயே, மிகப் பேரளவில் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் அழுத்தம், பெருமிதம், அடக்கமான நுண்ணயமிக்க வேலைப்பாடு, உயிர்த்துடிப்பு முதலிய பண்புகள் பொருந்தி யுள்ளன. அவற்றின் நிலையிலும் இயற்கை எழில் முழுமைத் தன்மையுடையதாய்ப் பொலிவுறுகிறது. அணிகள் அழகாகவும் அளவாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

பக்தி நெறியையும் அதனால் ஏற்படுவனவாகிய மன வுணர்ச்சிகளையும் இத்திருவுருவங்கள் மிக நயம்பட

விளங்குகின்றன. உண்மையான பக்தியில் ஈடுபட்டுள்ள ஓர் அடியாரது உள்ளமும், உடலும் எந்நிலையில் இருக்கும் என்பதைத் தமிழகத்து அருளாளர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலியோருடைய உருவச்சிலைகள் தெளிவாக உணர்த்துகின்றன.

அம்பலவாணரின் அருள் வடிவம், பேரின்பமாகிய சிவானுபவத்தை பேரின்ப நுகர்ச்சியைக் குறிக்கிறது. மேலும் சிவபெருமானே படைத்தல், காத்தல், அருளர், இறைத்தல், அழித்தல் எனும் ஐந்து தொழில்களையும் முறையே நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவம் எனும் ஐவகை மூர்த்திகளின் மூலுமாகச் செய்து வருகிறான் என்பதையும் இத்திருவுருவம் உணர்த்துகிறது. உடுக்கை ஏந்திய கை உலகப் படைப்பையும் அருள்புரியும் கை காத்தலையும், தீயேந்திய கை மும்மலத்தை அழிப்பதையும், ஊன்றிய திருவடி ஆன்மாக்களை மறைத்தலையும், தூக்கிய திருவடி ஆன்மாக்களின் புகலிடம் இதுவெனக் காட்டுதலையும் குறிப்பதாக, நடராசப் பெருமானின் திருமேனியின் அமைப்பையும் அழகையும் மெய்ப்பொருள் சார்பான நோக்கில் விளக்குவது பண்டைத் தமிழர் மரபு. "இறைவன் உயிர்த்துடிப்பாகவும், ஒழுங்கான இயக்கமாகவும், அழியாத இளமை எழிலாகவும் கட்புலனாகாப் பேரொளியாகவும் விளங்குகிறான் என்பதையே இந் நடராசத் திருவுருவம் உணர்த்துகிறது... சமயச் சூழ்நிலையில் இவ்வடிவத்தின் உட்பொருளை ஒருமுறை புரிந்துகொண்டால் நடராசப் பெருமானின் அழகிய திருவுருவத்தில் ஐரோப்பியர்கள்கூட உண்மையான சமய உணர்வினைப் பெறமுடியும். தெய்விக உண்மையையும், தெய்விக அழகையும், தெய்விக இன்பத்தையும் உணர்த்தும் கலைப்பிழம்பே பேரெழில் வாய்ந்த நடராசர் திருமேனி"[5] என்பது இக்காலத்திய மேற்கு நாட்டு அறிஞர் ஒருவரின் கருத்தாகும்.

இந்திய நாகரிகம் என்றவுடன் உலக அறிஞர்கள் பலருடைய உள்ளத்தில் தமிழ்க்கலைஞர்கள் 'இப்படியன், இந் நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக் காட்ட' இயலாத இறைவனுக்குக் கற்பித்த நடராச வடிவே தோன்றுவதாகக் கூறுகின்றனர். எனவே, "ஒரு கூட்டத்தாருக் காவது, ஒரு நூற்றாண்டைச் சேர்ந்த சிந்தனையாளர்க்காவது ஏற்புடைத்தாகலின்றி, எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும், இறையன்பர்களாலும், கலைஞர்களாலும்

ஏற்றுக்கொள்ளப்படும் வண்ணம் மெய்ப்பொருள் குறிப்பும் சமய உணர்வும், கலையழகும், அறிவியல் கொள்கையும் இணைந்தும் இழைந்தும் விளங்கும் பேரெழில் மிக்க, கலைப் பிழம்பாகிய இவ்வடிவத்தை முதலில் தமது உள்ளக் கிழியிலே வரைந்த மெய்யுணர்வு பெற்ற கலைஞர்களின் ஆழ்ந்த சிந்தனைத் திறனும் அருளுணர்வும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன"[6].

இவ்வரிய நாகரிக இயல்புகள் யாவும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பியல்புகளாகும். இந்தியப் பண்பாட்டின் ஏற்றத்திற்கும் ஊற்றத்திற்கும் தமிழ்மக்கள் அரும்பெரும் பணிகளை வாழ்வின் பல்வேறு துறைகளிலும் ஆற்றியுள்ளனர். இன்றைய இந்து நாகரிகத்தில் - இந்திய நாகரிகத்தில் - தமிழ்ப் பண்பாட்டின் இயல்புகளும் கூறுகளும் இரண்டறக் கலந்து விட்டன. இதனால் எளிதில் இனங்கண்டுகொள்ள இயலாத ஒரு நிலை உண்டாகி இருக்கிறது. எனினும் கூர்ந்து நோக்க வல்லார்க்கும், பகுத்தாய்ந்து பார்ப்போர்க்கும், ஆழ்ந்து சிந்திக்கும் திறன் வாய்க்கப் பெற்றோர்க்கும் தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்பும், இந்திய நாகரிகத்தினை உருவாக்குவதில் அதற்குரிய பங்கு எத்தகையது என்பதும் எளிதிற் புலனாகும்.

திராவிட (தமிழ்)ப் பண்பாட்டோடு ஆரியப் பண்பாடு ஒன்றாக இணைந்தமையால் தோன்றியதே இந்திய நாகரிகம். திராவிட (தமிழ்)ப் பண்பாட்டின் தாக்கத்தால் இந்திய நாகரிகம் செழுமையும் சிறப்புமுற்றது; அகலமும் ஆழமும் அடைந்தது.

அகமுகவுணர்வோ, புலன்கடந்த நுண்பொருள் ஆய்வு உணர்வோ திராவிடரிடம் மேலோங்கி நிற்காமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் கலையுணர்வுமிக்க கலைஞர்கள்; ஆடலிலும் பாடலிலும் ஈடு இணையற்றவர்கள்; கவின்மிகு கலை வடிவங்களைத் திட்டமிட்டு வகுப்பதிலும், வியத்தகு கோயில்களைக் கட்டுவதிலும் அவர்கள் கைதேர்ந்த கலைஞர்கள்; உணர்ச்சிச் செறிவும், படைப்புத் திறனும் வாய்ந்த திராவிட (தமிழ)ரின் கலையுணர்வை ஆரியரின் அப்பாலைத் தத்துவம் மணம் புரிந்ததனால் பிறந்த மழலைச் செல்வமே இந்திய நாகரிகம்[7] என்று இரவீந்திரநாத தாகூர் மொழிந்துள்ளமை அரண் செய்கிறது.

## குறிப்புகள்

1. குறள். 33.

2. எஸ். இராமநாதன், தமிழகத்து இசைக்கருவிகள், கையேடு, தொல்பொருள் துறை, சென்னை-68, பக்.191.

3. Heinrich Zimmer, The Art of Indian Asia, Vol.I, p. 219.

4. Percy Brown, Indian Architecture, Vol.I, pp. 86-87.

5. A.L. Bashen, The Wonder that was India, p. 373-376.

6. காளிதாஸ் நாகர் Rupam (1921) No.2, pp. 160-62.

7. Rabindranath Tagore, Viswa Bharathi, Vol.I, No.1, p. 4.

## இயல் - 6

# தமிழ் முனிவர்

தமிழ் மக்களிடையே தொல்பழங்கால இளநினைவு களாக இருந்து வரும் செய்திகள் பல. அவற்றுள் காலத்தால் மிகப் பழமையானதும் இன்றுவரை பசுமையாக இருப்பதும் தமிழ்ச் சங்கங்களைப் பற்றிய பழங்கதையாகும். அச்சங்கத்துள் காலத்தால் முந்தியது முதற்சங்கம் அல்லது தலைச்சங்கம் எனப்படும். அச்சங்கத்துள் அகத்தியர் எனும் பெரும்புலவர் சிறப்புற்று விளங்கியதாகக் கூறுவர். தமிழ்ச் சங்கங்களைப் பற்றிய இம்மரபு வழிச் செய்தி செற்றேக்குறைய ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக நாட்டிலே வழங்கி வருகிறது. முதன் முதலில் அகத்தியர் தமிழிற்கு ஓர் இலக்கணம் இயற்றினார் என்பதும் அதற்கு அகத்தியம் எனும் பெயர் வழங்கலாயிற்று என்பதும் இம்மரபு வழிக் கதைகளால் தெரியவருகின்றன.

தமிழகத்தில் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய காலத்தை ( கி.பி. 600 முதல் 900 வரை ) யொட்டி அகத்தியரைப் பற்றிப் பல புராணக் கதைகள் சமய வண்ணத்தில் குழைத்துத் தரப்பட்டன. அவர் ஒரு சிறந்த சிவபக்தர் என்பதும், முருகப்பெருமானிடம் தமிழைக் கற்ற பெருந்துறவி என்பதும் சமயக் கண்ணோட்டத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட சிறப்பாகும்.

தமிழ்மொழியைச் சிவபெருமான் படைத்து அகத்தியருக்குக் கொடுத்தார் என்றும், அம்மொழியைப் போற்றி வளர்த்த பெருமை அகத்தியருக்கு உரியது என்றும் மக்கள் நம்பலாயினர். நானூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த வில்லிபுத்தூரார் 'அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு' என்று தமிழ்மொழியைப் போற்றியுள்ளமை இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

தமிழ் இலக்கியத்தில் 'என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்ட'[1] அகத்தியரைப் பற்றிய குறிப்புகள் பல உள்ளன. முதன்முதல் பரிபாடல் எனும் சங்க இலக்கியத்துள் 'பொதியில் முனிவன் புரைவரை'[2] எனும் குறிப்பு காணப் படுகிறது. அகத்தியர் பாண்டி நாட்டில் உள்ள பொதிய மலையில் தங்கி வளர்ந்ததாகக் கூறுவதும் பண்டைத் தமிழ்

மரபு. இதனால், அவரைப் 'பொதியில் முனிவன்' எனவும், தமிழைப் (பொதியமலைப் பிறந்த மொழி) எனவும் போற்றுவது வழக்கமாகும். பரிபாடலில் குறிப்பிடப்படுவது பொதியில் முனிவனாகிய அகத்தியரின் பெயரைக் கொண்ட விண்மீனைக் குறிப்பதாக அதன் உரையாசிரியர் பரிமேலழகர் விளக்கியுள்ளார்[3]

காலப்போக்கில் எனும் அடிகளுக்கு, இராவணனைத் தமிழ்நாட்டை ஆளாதபடி போக்கின கிட்டுதற்கரிய வலிமையினையுடைய பழமை முதிர்ந்த அகத்தியம் பின்னே எண்ணப் பட்டுச் சான்றோனாயிருத்தற்கு மேவின ஒப்பற்றவனே என்று நச்சினார்க்கினியர்[5] உரைவிளக்கம் தந்துள்ளார். ஆயினும் ஆராய்ச்சியாளர் தொன்முது கடவுள் மேய என்பது சிவபெருமானைக் குறிப்பதாகவே கருதுகின்றனர்[4]. இவ்விரு சான்றுகளைத் தவிர சங்க இலக்கியத்துள் அகத்தியரைப் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை.

சங்க மருவிய காலத்தில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களான சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலுமே முதன்முதலாக அகத்தியனைப் பற்றிய குறிப்புகள் வெளிப் படையாகக் காணப்படுகின்றன. இளங்கோவடிகள்,

மாமறை முதல்வன் மாடலன்-என்போன்
மாதவன் முனிவன் மலைவலங் கொண்டு
(சிலப். 15:13-14)

என்னும் பகுதியில் அகத்தியரை 'மாதவத்தைச் செய்த முனிவனை அகத்தியன் தங்கியுள்ள பொதியமலை' எனப் போற்றியுள்ளார்.

மணிமேகலையில்தான், முதன்முதல் 'அகத்தியன்' எனும் சொல் வழங்கப்பட்டுள்ளது. அகத்தியனார் காவிரியாற்றைத் தமிழகத்திற்குக் கொண்டுவந்தது பற்றிய ஒரு கதையைச் சாத்தனார் குறிப்பிடுகிறார்.

கஞ்ச வேட்கையிற் காந்த பன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் றனாது

மதுரைக்காஞ்சியுள்,

தென்னவற் பெயரிய துன்ன ருந்துப்பிற்
தொன்முது கடவுள் மேய வரை தாழருவாப்
பொருப்பிற் (மது. 41-43)

கரகம் கவிழ்த்த காவிரிப்பாவை (மணி.பதி.10-12)

வடநாட்டில் வாழ்ந்துவந்த அகத்தியர், தென்னாட்டிற்கு வந்த வரலாறு யாவரும் அறிந்தது. அமை முதன்முதல்,

நடுவுநில்லாதின் வுலகஞ் சரிந்து
கெடுகின்ற ஏதம் ஒருமா வெள்ள ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முருகிய வையத்து முன்னிலென் றானே
( திருமந். 337 )

என்று திருமூலர் தெரிவித்துள்ளார்.

கம்பர், 'தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்'[5] எனவும், 'என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்' எனவும் அகத்தியரைப் போற்றுகின்றார். அவர் வாழ்ந்த இடத்தை 'தென்தமிழ் நாட்டகன் பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம்'[6] எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இறையனார் அகப்பொருள் உரையிலிருந்து தலைச் சங்கத்தில் அகத்தியனார் எனும் புலவர் ஒருவர் இருந்தார் என்பதும், அவர் செய்த நூலாகிய அகத்தியம் என்பதே அக்காலத்திய இலக்கணமாக இருந்தது என்பதும் அது உலக சூத்திரங்களால் ஆகியது என்பதும், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழைப் பற்றியும் கூறுவது என்பது தெரிய வருகின்றன.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் தொல்காப்பியரின் ஆசிரியர் அகத்தியர் என்றும் அகத்தியர் வடநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்த பொழுது 18 குடிவேளிரும், அரசரும், தொல்காப்பியரும் கங்கை வெளியிலிருந்து அவருடன் வந்தனர் என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்ச் சங்கங்களைப் போற்றிப் புரந்தவர் பாண்டிய மன்னர்களாவர். தலைச்சங்கத்தில் சிறப்புற்று விளங்கிய அகத்தியனார் பாண்டிய அரச மரபிற்குக் குலகுருவாக - அரச குருவாக விளங்கினார் என்னும் நம்பிக்கை கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் நன்கு வேரூன்றியிருந்தது. மற்றும் பாண்டிய மன்னர்களின் முடிசூட்டு விழாவில் அகத்தியரே பாண்டிய மன்னனுக்கு முடிசூட்டி, வாழ்த்துரை வழங்குவது வழக்கம் என்னும் கருத்தும் பாண்டிய அரச குடும்பத்தினரின் நம்பிக்கையாக இருந்து வந்தது. கி.பி. 770ஆம் ஆண்டில் சடிலவர்மன் பராந்தகனால் வெளியிடப்பட்ட வேள்விக்குடிச் செப்பேட்டின் வடமொழிப் பகுதியில் இச்செய்திகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

உயர்ந்து வளர்ந்துகொண்டிருக்கும் (விந்திய) மலையை (வளராமல் தடுத்து) நிறுத்தியவரும், கடல்நீர் முழுவதையும் குடித்தவருமான குடமுனி (அகத்தியர்) யைப் புரோகிதராகக் கொண்டதும் செல்வத்திற்கு உறைவிடமானதுமான பாண்டிய மன்னர்களின் குலம் வெற்றி பெறுவதாகுக (சூ.3).

தேவர்களைத் தூதராகக் கொண்டதும் (மந்தர) மலையால் பாற்கடலைக் கடைந்ததும் கும்பமுனியான் அகத்தியரின் கைகளால் முடிசூடுதலை அடைந்ததும் பூமண்டலத்திலுள்ள இரவலர் அனைவர்க்கும் விரும்பிய பொருள்களை அளித்துத் திருப்தி செய்விப்பதுமான அந்த (பாண்டிய) குலத்தில் மூவுலகும் போற்றும் நற்குணங் களையுடைய ஸ்ரீமாறவர்மன் என்ற அரசன் தோன்றினான் (சூ.6, 10) என்னும் தமிழாக்கப் பகுதிகளால் இதனை நாம் அறியலாம்.

இதே செய்தி சீவரமங்கலச் செப்பேட்டின் வடமொழிப் பகுதி (சூ.4) யிலும் தெற்குத் திசையிலுள்ள பொதிய மலை மீது உரையும் குடமுனியின் இனிய தமிழ் எனும் செய்தி,

தென்வரைமிசைக் கும்போதவனது

தீந்தமிழிற் செவி கழுவியும் (சூ.4)

என சின்னமனூர்ச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியிலும் குறிப்பிடப்பெற்றுள்ளன[11].

தளவாய்புரச் செப்பேட்டின் தமிழப் பகுதியில் பாண்டிய மன்னர் தென்மதுரையைத் தலைநகராக அமைத்ததும், அங்கு சங்கம் நிறுவித் தமிழை வளர்த்ததும், அகத்திய முனிவருடன் சங்கத்தில் வீற்றிருந்து பாண்டிய மன்னர் தமிழ் ஆய்ந்ததும் பற்றிய செய்திகள் பேசப்படுகின்றன.

பாண்டியன் இராசசிம்மனுடைய சின்னமனூர் (பெரிய) செப்பேட்டின் வடமொழிப் பகுதியில் பகையரசர் அனைவரையும் அழித்தவர்களும் இமய மலைமீது தம் ஆணையை ஏற்றிவைத்தவர்களுமான இந்த (பாண்டிய) மரபினர்க்கு அகஸ்திய பகவான் புரோகிதராக இருந்தார் (சூ.3).

இவன் (ஒரு பாண்டிய அரசன்) அகஸ்தியரின் சீடன் (சூ.6) எனும் குறிப்புகள் உள்ளன. தமிழ்ப்பகுதியில்,

பொருவருஞ்சீர் அகத்தியனைப்
புரோகிதனாகப் பெற்றது[13]

என்னும் குறிப்பும் காணப்படுகிறது. இக்குறிப்புகள் யாவும் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் அகத்தியரைப் பற்றித் தமிழ் மக்களிடையே வழங்கிய புராணக் கதைகளின் அடிப்படையில் எழுந்த நம்பிக்கையைப் புலப்படுத்துகின்றன. இத்தகைய நம்பிக்கையைப் பையத் தமிழ்மக்களுடைய உள்ளத்தில் ஆழ வேரூன்றி வளர்ந்துள்ளதைக் காணுகின்றோம்.

இதனால்தான், பிற்காலத்தில் தோன்றிய சித்தர்கள் பதினெண்மருள் ஒருசிலர் அகத்தியர் எனும் பெயருடன் விளங்கினர். அவர்கள் சித்த மருத்துவ நூல்கள் பல இயற்றி யுள்ளனர். அகத்தியர் பெயரால், அகத்தியர் சித்த வைத்தியம், அகத்தியர் ஆறெழுத்தந்தாதி, அகத்தியர் கருப்ப சூத்திரம், அகத்தியர் நாடி, அகத்தியர் வாகடம், அகத்தியர் ரஸவாத சூத்திரம் எட்டு, அகத்தியர் ஞானம் பன்னிரண்டு முதலிய பல நூல்கள் தமிழில் தோன்றியுள்ளன. இவை யாவும் ஓர் உண்மையைத் தெரிவிக்கின்றன. இடைக்காலத் தமிழகத்தில் தோன்றிய புலவர்கள் தாங்கள் எழுதிய நூல்களின் ஆசிரியராகத் தங்கள் பெயரைக் குறிப்பிடாது நாட்டு மக்களால் மாபெரும் ஞானியாகப்போற்றப்பட்ட அகத்தியரையே அவற்றின் ஆசிரியராகக் குறித்துச் சென்றுள்ளனர் என்பதே அவ்வுண்மையாகும். இதனால்தான் அகத்தியர் பெயரால் எண்ணற்ற நூல்கள் தமிழில் தோன்றியுள்ளன.

பொதுவாகத் தமிழ் இலக்கியங்களிலும் சிறப்பாகக் கந்தபுராணம், காஞ்சி புராணம் போன்ற புராணங்களிலும் பேசப்படுகின்ற அகத்தியர் குறுகிய வடிவங்கொண்ட ஒரு துறவியாகத் தோன்றுகிறார். முதல் சங்கத்தின் வரலாற்றில் மனிதனாகக் காட்சி அளித்வர் பின்னர் முனிவராகவும், அரச குருவாகவும், தெய்வமாகவும் பண்டைத் தமிழ்மக்களால் சிறப்பித்துப் போற்றப்பட்டுள்ளார். அவருக்குக் கோயில் அமைத்து வழிபாடு செய்யும் நிலைக்கு அவரை நம் முன்னோர்கள் உயர்த்தியுள்ளனர். அவருடைய பெயரால் தமிழ்நாட்டில் பல ஊர்கள் உள்ளன. அகத்தியான் பள்ளி, அகத்தீசுவரம் எனும் ஊர்ப்பெயர்கள் இங்குக் கருதத்தக்கன.

தொல்பழங்காலத்தில் வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்த அகத்தியரைப் பற்றிய கதை ஒன்றை முன்னர்க் கண்டோம். ஆரிய வர்க்கத்தினின்று தென்னாட்டை

ஆரிய மயமாக்கும் பொருட்டு விந்திய மலையைக் கடந்து வந்தவர்களுள் அகத்தியர் முதன்மையானவர். அவர் ஆரியப் பண்பாட்டையும் சமயத்தையும் தென்னாட்டிற்குக் கொண்டு வந்து பரப்பியதையே பலவகையாக வழங்கும் பழங்கதைகளின் மூலம் அறிகிறோம் என்பது ஆராய்ச்சி யாளரின் கருத்தாகும். இதையே, ஆதிகாலத்தில் ஆரியர்கள் பிறநாடுகளில் தங்கள் பண்பாட்டைப் பரப்புவதில் கொண்டிருந்த ஆர்வத்தைப் புலப்படுத்தும் அறிகுறியாக அகத்தியரைப் பற்றிய கதைகள் வழங்குகின்றன என வேறோர் அறிஞர் குறித்துள்ளனர்.

வேதகாலம் முதற்கொண்டு, ஒரே அகத்தியர் இவ்வரும்பணியைச் செய்திருக்க இயலாது. பலர் இப்பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும். அவர்கள் எல்லாரையுமே அகத்தியர் எனும் பெயராலேயே ஆரியர் சுட்டியிருத்தல் வேண்டும். சமஸ்கிருத நூல்களில் இச்வாகு காலம் முதல் கண்ணன் காலம் வரையில் கூறப்படும் அகத்தியர்கள், வசிட்டர்கள், விசுவாமித்திரர்கள், ஒரு தனி அகத்தியர், வசிட்டர், விசுவாமித்திரர்களைக் குறிப்பன அல்ல. அவை குடும்பப் பெயர்களேயன்றித் தனிப்பட்டவர்களுக்குரிய பெயர்கள் அல்ல[16] என்பதும் இங்குக் கருதத்தக்கது.

தென்னாட்டிற்கு வந்த அகத்தியரை நாம் ஆரியர் என்று அறுதியிட்டுக் கூறுதற்கில்லை. வேதகாலத்திய முனிவர்கள் அனைவரையும் ஆரியர் எனக் கூறுவதற்கு இயலாது. அவர்களுள் பல இந்தியப் பழங்குடி மக்களினத்தைச் சேர்ந்த தாய்மார்களுக்கும் ஆரியத் தந்தையருக்கும் பிறந்தவர் ஆவர். ஆரியர் வணங்கிய தெய்வங்களுள் ஒன்றான வருணன் ஓர் அசுர (திராவிட) குலத்தவன். வேதகாலத்து அரசர்களும், இருடிகளும் அசுரக்குருதிக கலப்புடையவரே. இதனை அவர்களுடைய நிறமே புலப்படுத்துகிறது. மித்திர - வருணன் எனும் தந்தைக்குப் பிறந்தவர்களே புகழ்மிக்க வேத கால முனிவர்களான வசிஷ்டர், அகத்தியர், விசுவாமித்திரர் போன்றவராவர் என்பது வரலாற்று அறிஞர்களின் கருத்தாகும்.

அகத்தியர் எனும் அவருடைய பெயரைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள், "மலையை அடக்கியவர்" எனும் காரணப்பெயராகக் கொண்டு, விந்திய மலையை அடக்கி யதனால் இப்பெயர் பெற்றார் என்பர். அவ்வாறானால், "இவ்வரும்பெருஞ் செயலைச் செய்வதற்கு முன்னர் அவருக்கு என்ன பெயர் வழங்கியது?" எனும் கேள்வி எழுகிறது. தென்னாட்டிற்க வருவதற்கு முன்பே வேத காலத்திலே

அகத்தியர், ‘அகத்தியர் எனும் பெயரால் சிறப்புற்று’ விளங்கியதாகத் தெரிகிறது. அகத்தியருக்கும் பல்வேறு மலைகளுக்கும் நெருக்கமான தொடர்பு இருந்திருக்கிறது. தமிழகத்தில். அவர் பொதிய மலையில் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது. மலைகளோடு முனிவர்களைத் தொடர்பு படுத்திப் போற்றுவது திராவிடப் பண்பாகும். அகத்தியருக்கும் அரசருக்கும் நெருக்கமான குடும்ப உறவு இருந்ததாகப் புராணங்களில் சொல்லப்படுகின்றன.

பண்டைய பிராமண கோத்திரங்களில் அகத்திய கோத்திரம் அப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது[20]. வேதகால ஆரியர், இந்நாட்டின் தொல்குடிமக்களின் குருமார் வகுப்பு முறையை ஏற்றுக்கொண்டு அதைப் பின்பற்றத் தொடங்கியதன் விளைவாகவே பிராமண மதகுருமார் இன வகுப்பு தோன்றலாயிற்று. அத்தகைய ஆரியருக்கு முற்பட்ட மத குருமார் வகுப்புகளுள் ஒன்றாகவே அகத்தியரின் குடும்பம் இருந்திருக்கக்கூடும் என்பர்.

இவ்வாய்வுரைகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த அகத்தியர் திராவிடப் பண்பாட்டில் தோய்ந்த வடநாட்டு முனிவர் என்பது புலனாகின்றது. அவர் இங்குத் தமிழைக் கற்று, சிறப்புமிக்க புலவராக விளங்கினார் என்பதும் ஏற்கத் தக்கதாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டை ஒட்டித் தமிழகத்தில் அவரைப் பற்றிப் பல கதைகள் தோன்றியுள்ளன. பாண்டிய மன்னர், அகத்தியரைத் தங்கள் குலகுருவாகப் போற்றுவதில் பெருமையுற்றனர். அந்நிலையில் தமிழகத்தின் துறவிகள் சிலரேனும் அகத்தியர் எனும் பெயரைப் பூண்டவர்களாக வாழ்ந்திருக்க வேண்டும். நாளடைவில் பலவேறுபட்ட அகத்தியரைப் பற்றிய செய்திகள் அனைத்தும் ஒருவருக்கு - சங்க காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் அகத்தியருக்கு- உரியனவாகக் கற்பனை வண்ணமும் சமய மெருகும் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இதன் விளைவாக, அகத்தியர் தமிழ்ப் பண்பாட்டின் முழுநிலை வடிவமாக இடைக்காலத் தமிழ் மக்களால் கருதப்பட்டார். முத்தமிழ்ப் புலவனாகவும், மருத்துவக் கலைஞனாகவும், தெய்வத்தன்மை வாய்ந்த துறவியாகவும் போற்றப்பட்ட அகத்தியர், பக்தி இயக்கத்தின் உந்துதல் ஆற்றலால் தெய்வமாகச் சிறப்பிக்கப் பட்டார். சைவ சமயத்தினர் அகத்தியரைச் சிவபெருமானுக்கு மிகவும் வேண்டிய அன்பராக - பக்தராகச் சித்தரித்தனர். பையப்பைய சிவ வழிபாட்டில் அகத்தியரின் வழிபாடும் இடம் பெறலாயிற்று. சமண சமயப் பண்பாட்டிற்கு எதிரான தமிழ்

(வைதிக)ப் பண்பாட்டின் காவலராக அவர் போற்றப் பட்டார் எனக் கருதவும் இடம் உண்டு.

இத்தகைய காலத்தில், தமிழ் நாட்டிலிருந்து தென் கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று குடியேறிய தமிழ்மக்கள், அகத்திய வழிபாட்டு நெறியையும் அந்நாடுகளில் பரப்பி யுள்ளனர். இதனால், தமிழ்ப்பண்பாட்டின் முகவரான அகத்தியர், கடல் கடந்து கடாரம் சென்றும், இந்தோனேசியாவை அடைந்தும், போர்னியோ குசத் தீவிபம் ஆகிய நாடுகளில் தங்கியும், பின்னர் சையாமிற்குச் சென்றும், அங்கிருந்து கம்போடியாவை அடைந்தார். அங்கு யகோபதி எனும் மங்கை நல்லாளை அகத்தியர் மணந்து வாழ்ந்ததாக அந்நாட்டு வரலாறு பேசுகிறது. இதனால், தென்கிழக்காசிய நாடுகளுக்குத் தமிழ்ப் பண்பாட்டின் ஒளி விளக்காக அகத்தியரைப் பற்றிய வரலாறு சென்றிருக்கிறது என்பதும், அகத்தியர் எனும் பெயரைக் கொண்ட தமிழர் சிலர் சென்று, தமிழ்ப் பண்பாட்டினை அந்நாடுகளில் பரப்பியுள்ளனர் என்பதும் புலனாகின்றது.

### திருக்கோயில்கள்

தமிழகத்தின் திருக்கோயில்கள், தமிழ்ச் சமுதாயத்தின் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட சிறப்பு நிலையங்களாக விளங்கின. ஊர்கள் ஒவ்வொன்றும் கோயிலை மையமாகக் கொண்டே வளர்ச்சியுற்றன. அதைச் சார்ந்தே, அவ்வூரின் சமுதாய வாழ்க்கை இயங்கி வந்தது.

இடைக்காலத் தமிழகத்தின் கோயில்கள் அண்டத்தை எதிரொலிக்கும் பிண்டங்களாக விளங்கின. 'அவ்வுலகை'ப்பற்றி அறிவிப்பனவாக இருந்தன. எனினும் அவை இவ்வுலகைப் புறக்கணித்துவிடவில்லை. மக்கள் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்குப்' பல வழிவகைகளை அவை அமைத்துத் தந்தன. மக்களுக்கு உதவிபுரியும் அறநிலையங்களாகவும் அறிவை வளர்க்கும் கல்வி நிலையங்களாகவும், மன அமைதியை அளிக்கும் ஆன்மீக உணர்வின் வளர்ப்புப் பண்ணையாகவும், மக்கள் உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்டும் அழகுமிகு கலைக்கூடங்களாகவும், அரிய நூல்களைத் தன்னகத்தே கொண்ட நூல் நிலையங்களாகவும், பிறவிப் பெருங்கடலை நீந்த முயல்வோருக்கு வழிகாட்டும் வான்பொருளாகவும், மண்ணக வாழ்விலே விண்ணக வாழ்க்கையின் பேறுகளைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் கலைக் கோயில்களாகவும் திருக்கோயில்கள் திகழ்ந்தன.

நிலக்கிழார்கள், வேலையாட்களை நியமித்து வேலை தருவோர், சமுதாய நலத்துக்குப் பாடுபடும் ஒப்புரவாளர் ஆகியோருடைய செயலகளையும், கடன் கொடுத்து உதவும் நிதி நிலையம், கல்வி நிலையம், அரும்பெரும் பொருட் காட்சியகம், மருத்துவ மனை ஆகியவற்றின் பணிகளையும் தன்னைச் சுற்றி வாழும் மக்கள் சமுதாயத்திற்குக் கோயில்கள் செய்துவந்தன. மக்கள் அறவுணர்வோடு நல்வாழ்வு வாழ்வதற்குரிய உதவிகள் பலவற்றையும் அருளுணர்வோடு புரிந்துவந்த தமிழகத்தின் திருக்கோயில்கள் இந்திய நாகரிகத்தின் வரலாற்றில் ஒப்புயர்வற்ற சமுதாய நிலையங்களாக விளங்குகின்றன.

## குறிப்புகள்

1. கம்பராமாயணம், அகத்தியப் படலம், பா.47.
2. பரிபாடல், 11-11.
3. மேற்படி.
4. மதுரைக்காஞ்சி, 41.
5. கம்பராமாயணம், ஆரண்ய காண்டம், பா.158.
6. கம்பராமாயணம், கிட்கிந்தா. நாடவிட்ட படலம், பா.31.



## குறிப்புகள்

1. குறள். 33.
2. எஸ். இராமநாதன், தமிழகத்து இசைக்கருவிகள், கையேடு. தொல்பொருள் துறை, சென்னை-68, பக்.191.
3. Heinrich Zimmer, The Art of Indian Asia, Vol.I, p. 219.
4. Percy Brown, Indian Architecture, Vol.I, pp. 86-87.
5. A.L. Bashen, The Wonder that was India, p. 373-376.
6. காளிதாஸ் நாகர் Rupam (1921) No.2, pp. 160-62.
7. Rabindranath Tagore, Viswa Bharathi, Vol.I, No.1, p. 4.

இயல் - 7

# ஆன்மீக நெறி

இந்து சமய வழிபாட்டு நெறியில் இருவகை முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. தீயினை வளர்த்து, அதன் மூலம் தெய்வ வழிபாட்டை நடத்தும் வேள்வி நெறி ஒருவகை வழிபாட்டு முறை. வேத காலம் முதல் சிறப்புமிக்க ஒன்றாக இது போற்றப்பட்டு வருகிறது. இதனை நாம் வேள்விநெறி எனலாம். மற்றொன்று பூவினைக் கொண்டு இறைவனுடைய பொன்னடிகளைப் போற்றி வழிபடவதாகும். இதனைப் பூசெய் ( பூசை ) நெறி என்பர். பூவினைக் கொண்டு வழிபாடு செய்யும் புனித நெறி பண்டை வைதிக சமயத்தில் இடம்பெறவே இல்லை; வேள்வி நெறியை நிகமம் எனும் வடமொழிப் பெயராலும் பூசை நெறியை ஆகமம் என்னும் சொல்லாலும் சுட்டுவர். ஆரியரும் ஆரியரல்லாதாரும் ஒன்றுபட்ட காலத்தில் அவர்களுடைய வழிபாட்டு நெறிகளும் கலப்புற்றன. ஆகமநெறியிலும் வேள்வி இடம்பெறலாயிற்று. ஆயினும் தமிழகத்தில் கோயில்களில் பேரளவிற்கு இன்றும் பூசை நெறியாகிய ஆகம வழிபாட்டு முறையே பின்பற்றப்பட்டு வருகிறது.

தமிழில் இறைவழிபாட்டைக் குறிக்கும் 'பூசை' எனும் சொல் வடமொழியில் எடுத்தாளப்பட்டபொழுது, 'பூஜா' எனத் திரிந்தது. 'பூசை' எனும் சொல் 'பூ', 'செய்' எனும் இரண்டு சொற்களின் சேர்க்கையாகும். பூவினைக் கொண்டு செய்யப்படும் வழிபாடு ( புஷ்ப கருமம் ) என்பது இச் சொல்லிற்குப் பொருள் என்று மொழியியல் அறிஞர் கூறுவர்.

பூவினைக் கொண்டு செய்யப்படும் வழிபாடு, சிறந்ததோர் அடிப்படையில் தோன்றிய வழிபாட்டு முறையாகும். இப்பேரண்டம் முழுவதும் ஒரு தெய்வீக ஆற்றல் நிறைந்திருப்பதை உணர்ந்து, அம் மாபெரும் தெய்விக ஆற்றலோடு மனிதன் தான் ஒன்றுபடவும் கலந்து இன்புறவும் விரும்பும் நோக்கத்தோடு செய்யப்படும் வழிபாடே 'பூசை' யாகும். இறைவன் இருப்பில் சிறிதும் ஐயுறாத மக்கள், எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளைத் தத்தம் வழிபாடு தெய்வ

வடிவங்களாக அமைத்து, இவற்றைத் தொழுது மலர் தூவித் துதித்து வழிபடுகின்றனர்.

பூபீலி செய்மின் - சிலப். குன்றக்.

பூமாலை புனைந்து ஏத்தி - தேவா.திருநா.245.

தொழுது மலர் தூவித்துதித்து - தேவா.திருநா.135

புண்ணியம் செய்து நல்ல புன்லொடு மலர்தூவி
எண்ணுமின் எந்தை நாமம் - திருநா. 4, 6.

எண்ணுமின் எந்தை நாமம் - திருநா. 4,6.

தொழுது மலர்கொண்டு தூபம் கையேந்தி -
நா.திவ்.பிர.2130

எனவே, பூசை எனும் வடசொல், பூ செய் எனும் தமிழ்ச் சொல்லின் திரிபாக வடமொழியில் இடம்பெற்றது என்பர்.

பூசெய் வழிபாட்டு முறை ஆகம நெறியில் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்நெறியில் தியானமும், உருவ வழிபாடும் சிறப்பிடம் பெற்றுள்ளன. உருவ வழிபாடு என்பது வேதகால சமயத்தில் இடம்பெறவில்லை: பிற்காலத்தில் ஆரியர் அல்லாத மக்களுடைய செல்வாக்கின் காரணமாகவே அது பிராமண சமயத்தில் இடம்பெற்றதாகத் தெரிகிறது.

ஆகமங்களில் சொல்லப்படும் பாடவல்லார் நெறி (சரியை), ஆடவல்லார் நெறி (கிரியை), நாடவல்லார் நெறி (யோகம்), தேடவல்லார் நெறி (ஞானம்) என்னும் நான்கு நெறிகளுள் முதல் இரண்டும் தொண்டு நெறி (கரும மார்க்கம்) நிறைந்தும், மற்றிரண்டும் மெய்யறிவு நெறி (ஞான மார்க்கம்) நிறைந்தும் உள்ளனவாகும். இறைவனை அகத்தே நாடுதலும், தேடுதலுமாகிய அறிவு நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவது மக்கள் பலருக்கும் அரிய செயலாகும். பாடலும் ஆடலுமாகிய ஒழுக்கமும் நோன்புமாகிய தொண்டு நெறி யாவரும் எளிதில் கடைப்பிடித்து ஒழுகுதற்குரிய பக்தி நெறியாகும்.

தமிழகத்தில் தோன்றிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி நெறியைப் போற்றி வளர்த்த அருளாளர்கள் ஆவர். வேதம் ஓதுவதனால் பயனில்லை; சாத்திரங்களின் உட்பொருளைப் பிறரிடம் கேட்டறிவதனால் உண்டாகும் பயன் ஒன்றுமில்லை. பல அரிய அற நூல்களை

நாளும் ஓயாது பயில்வதனாலும் பயன் விளையாது. வேதத்தில் ஆறு அங்கங்களைக் கற்று அதன் பொருளினை உணர்வதனால் அடையக்கூடியது ஒன்றும் இல்லை. ஈசனை உள்ளத்தால் நினைந்து, மனத்தினால் சிந்தித்து வாயினால் வாழ்ந்த வல்லார்க்கே வீடுபேறு கிடைக்கும் என்று திருநாவுக்கரசர் பக்தி நெறியின் அடிப்படைப் பண்பினை எடுத்தியம்பியுள்ளார். இவ்வழிபாட்டு நெறி, தமிழர்கள் உலகிற்கு அளித்த சிறந்ததொரு கடவுள் நெறியாகும். அன்புள் உருகி, அழுது அரற்றி, என்பும் உருக இராப்பகல் இறைவனைச் சலம் பூ வொடு போற்றி வழிபடுமாறு சொல்வதே பக்தி நெறி. தமிழகத்தில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அக்காலத்தில் தோன்றிய அருளாளர்கள் காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கி இறைவனைப் போற்றிப் பாடினர். மனமாகிய கல்லைப் பிசைந்து கனியாக்கும் அவர்களுடைய அருட்பாடல்களே தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் எனப்படும் பக்தி இலக்கியங்களாகச் சிறப்புற்றன.

தமிழகத்தில் தோன்றிய பக்தி இலக்கியம் வடவேங்கடத்தினைக் கடந்து, வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் சென்று பரவியது. இதனை,

> பக்தி நெறி தமிழகத்தில் தோன்றியது
> மராட்டியத்தில் மணம் பரப்பியது
> குசராத்தில் எதிரொலி வீசியது
> இராசபுதனத்தில் இருள் அகற்றியது
> வங்காளத்தில் வான்புகழ் பெற்றது

என்று வடமொழியில் உள்ள பௌஷிய புராணம் போற்றியுள்ளமை இங்கு கருதத்தக்கது.

எனவே, "பிராமண சமயத்தை இந்து சமயமாக மாற்றிய பக்தி நெறி இந்திய நாகரிகத்தின் மலர்ச்சிக்குத் தென் இந்தியா அளித்த முதன்மையான பரிசு" எனலாம்.

### தெய்வங்கள்

ஒவ்வொரு தேசிய இனத்தின் வாழ்விலும் வரலாற்றிலும் சமயம் முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்திய நாகரிகத்தின் உயிர்நாடியாக இருப்பது அதனுடைய சமயச் சிந்தனையாகும். தொல் பழங்காலம் முதற்கொண்டு இந்நாட்டில் வாழ்ந்துவரும் பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்களின் எண்ணங்களும்

சிந்தனைகளும் ஒன்றாக இணைந்ததன் விளைபாகத் தோன்றியதே இன்றைய இந்துசமயமெனில் அது மிகையாகாது.

இந்தியச் சமயத்தை, நாம் திராவிட சமயம் எனக் கொள்வதே மிகவும் பொருத்தமாகும். ஆரியப் படையெடுப் பாளர்களின் கருத்துகளினால் அச்சமயம் ஓரளவிற்கு மாற்றமும் திருத்தமும் பெற்றிருக்கலாம். இந்து சமயத்தின் மாண்புமிக்க தெய்வங்களான முருகன், சிவன், கண்ணன், கொற்றவை முதலியன திராவிட (தமிழ்) மக்களின் தெய்வங்கள் என்பதில் கருத்து வேற்றுமைக்கே இடம் இல்லை. மேலும் இந்து சமயத்தின் சிறப்புமிக்க கோட்பாடுகள் சிலவும், ஊழைப் பற்றிய கருத்துகளும், பக்தி நெறியும் வேதங்களில் இடம்பெறவில்லை. எனவே, நன்கு முதிர்ச்சி அடைந்துள்ள இந்திய சமுதாயத்தின் முதன்மையான பண்புகள் அனைத்தும் தனிப்பட்ட ஓர் இடத்திற்கு - நாட்டிற்கு உடையதே ஒழிய தனிப்பட்ட ஓர் இனத்திற்கு உரியது அன்று. அவை பாரசீக நாட்டின் சமயத்திலோ பிற ஆரிய மக்கள் வாழும் நாடுகளில் உள்ள சமயங்களிலோ காணப்பெறவில்லை எனும் கருத்து சங்ககாலத் தமிழ்மக்களின் இறையியலுக்கு ஒளியூட்டுவதாகும்.

இந்திய நாகரிகம் மலரத் தொடங்கிய காலத்திலேயே திராவிட (தமிழ்) மக்களின் சமய நம்பிக்கைகளும், வழிபாட்டு நெறிகளும், பழக்க வழக்கங்களும் ஆரியருடைய சமய வாழ்க்கையில் கலந்துவிட்டன. இக்காரணத்தால் அவற்றை எளிதில் இனங்கண்டு அறிய இயலவில்லை. வேதகால ஆரிய சமயத்தில் இந்திய ஐரோப்பியருக்கும், இந்திய ஆரியருக்கும் இடையே பொதுவாக உள்ள சமயக் கொள்கைகளை ஆராய்ந்து பார்த்த அறிஞர்கள் வேத காலத்திலேயே திராவிடர்களுடைய சமயக் கொள்கைகள் ஆரியரின் மதத்தை தன் வண்ணமாகத் திரிக்கத் தொடங்கி விட்டன என்று மொழிந்துள்ளனர்.

ஆரிய திராவிடப் பண்பாட்டின் கூறுகள் பல முறைகளில் கலந்து ஒரு புதிய கலை நாகரிகத்தை உருவாக்கியது. அதைப்போன்றே சமயத் துறையிலும் புதிய தொரு கலவைச் சமயம் உருவாக்கப்பட்டது. அச்சமயத்தை இன்று 'இந்து சமயம்' எனும் பெயரால் உலகம் போற்றுகிறது. இந்த நாகரிகக் கலப்பால் தமிழ்த் தெய்வங்களின் பண்புகளில் மாற்றங்கள் நிகழ்ந்தன.

## முருகன்

சங்ககாலத் தமிழகம் இந்து சமயத்திற்கு வழங்கியுள்ள மாண்புமிகு பரிசு முருக வழிபாடாகும். தமிழருடைய குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகன், சங்க காலத்தே முதன்மையான தெய்வமாக வீறுடன் விளங்கினான். சேயோனாகிய முருகன், அன்புத் தெய்வமாக, அழகுத் தெய்வமாக, காதல் தெய்வமாகப் போற்றப்பட்டான். இவற்றோடு அவன் போரில் சிறந்த தெய்வமாகவும் கருதப்பட்டான். வெற்றித் தெய்வமான கொற்றவையே அவனுடைய தாய்[1]. கடப்ப மலர் மாலை அணிந்து அவன் கடம்பின் கீழ் வீற்று இருப்பான்[2]; போர் வன்மை மிக்கவன்; போரையே விரும்புபவன்[3]; வெல்லும் போரில் வல்ல முருகன் எனப் போற்றப்படுகிறான்[4]. போருக்குப் புறப்படும் அரசனுடைய சீற்றத்தை முருகனின் கடுஞ்சீற்றத்திற்கு ஒப்பாகக் கூறுவது பண்டைத் தமிழகத்தின் பழக்கமாகும்.

சங்கப் பாடல்களில் 'முருகு' எனும் சொல்லாலேயே முருகன் சுட்டப்படுகிறான். 'முருகு' எனும் சொல்லிற்கு இளமை, அழகு, இளைஞன், நறுமணம், தெய்வத்தன்மை[5] எனும் பல்வேறு பொருள்கள் வழங்கி வருகின்றன. முருகனை வேலன்[17], ஆல்கெழு கடவுட் புதல்வன்[6], கொற்றவைச் சிறுவன்[7], பழையோன் குழவி[8], குறிஞ்சிக் கிழவன்[9] எனும் பல்வேறு பெயர்களால் சுட்டுவது பழைய மரபு. 'முருகு புணர்ந்து இயன்ற வள்ளி'[10] என்பதனால் முருகனின் மனைவி வள்ளி எனும் கொள்கையும் பண்டைத் தமிழருடையதாகும்.

ஆனால் சங்க காலத்தின் கடைசிப் பகுதியிலேயே, தமிழருடைய தனித் தமிழ்த் தெய்வமான முருகனை வடஆரிய தெய்வமாகிய கார்த்திகேயனோடு ஒப்புமை உடைய தெய்வமாகப் போற்றும் வழக்கம் உண்டாயிற்று. சிவனுடைய மகனாக, ஆறுமுகமும் பன்னிரு கையும் உடைய குகனாக, தேவசேனாபதியாகத் தமிழ்க் கடவுளான முருகன் கருதப்பட்ட ான். திருமுருகாற்றுப்படை எனும் பாடலில்தான் ஆரியக் கடவுளான சுப்பிரமணியனோடு தொடர்புபடுத்தி முருகன் சுட்டப்படுகிறான். வானோர் தானைத் தலைவன்[11], அந்தணர் வெறுக்கை[12], தேவசேனையின் கணவன்[13] போன்ற புதிய அடைமொழிகளோடு போற்றப்படுகிறான். அறுவர் பயந்த ஆறமர்செல்வன்[14] என்று ஆறுமுகக் கடவுளின் பிறப்புப் பற்றிய செய்தியை நக்கீரர் தெரிவிக்கிறார். சிற்சில மாற்றங்களோடு கார்த்திகேயனின் பிறப்பைப் பற்றிய வரலாற்றை, காலத்தால் மிகவும் பிற்பட்ட (சங்க காலத்தின்

கடைசிப் பகுதியைச் சேர்ந்தது ) என நம்பப்படும் பரிபாடல் கூறுகிறது[15].

திருமுருகாற்றுப்படையில் திருச்சீர் அலைவாய் எனப்படும் திருச்செந்தூரில் முருகன் ஆறுமுகனாகக் காட்சி தருகிறான். இங்குச் சிவனுடைய மகனாகவும், போர்க் கடவுளுமாகப் போற்றப்படும் ஆரியக் கற்பனையால் எழுந்த கார்த்திகேயனை நக்கீரர் போற்றிப் பாடியுள்ளார். எனவே, 'முதன்முதலாக ஆரியமயமாக்கப்பட்ட முருகனின் திருக்கோயில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருச்செந்தூரேயாகும். இங்கே சூரனை வென்ற முருக சுப்பிரமணியக் கடவுளை நாம் காணுகின்றோம்'[16] என்னும் ஆராய்ச்சி அறிஞர்களின் கருத்து இங்கு கருதத் தக்கதாகும்.

இவ்வாறு கி.பி. இரண்டாம் நூற்றாண்டு அளவில் தமிழனின் அழகுக் கடவுளாகிய முருகனுடைய பண்புகளோடு ஆரியர்களுடைய போர்க்கடவுளாகிய கார்த்திகேயனுடைய பண்புகளை இணைத்து சுப்பிரமணியன் எனும் இந்து சமய தெய்வத்தை நம் முன்னோர்கள் படைத்துள்ளனர். குறிஞ்சி நிலக் கடவுளான முருகனுடைய மனைவியாகிய வள்ளியையும், கார்த்திகேயனுடைய பட்டத்தரசியாகிய தெய்வயானையும் சுப்பிரமணியக் கடவுளின் காதல் மனைவியாகவும் இல்லத் தரசியாகவும் கொண்டுள்ளனர் என்பது வரலாற்று அறிஞரின் துணிவாகும்[17].

### சிவன்

சேயோனையே சிவனாகப் போற்றும் மரபும் அரும்பியுள்ளது. ஆலமர்ச்செல்வன், ஆலமர்க்கடவுள்[18], முக்கண் செல்வன், மாற்றரும் கணிச்சி மணிமிடற்றோன், முழுவாள் தெடியோன், தாவி உண்டிக் கடவுள், நீள் நிமிர்நடை முது முதல்வன், பிறவா யாக்கைப் பெரியோன்[19] எனப் பலவாறாகச் சிவனைப் போற்றி வழிபட்டுள்ளனர்.

இருக்கு வேதத்தில் அழித்தல் கடவுளாக விளங்கும் உருத்திரன் வேறு; அன்பின் ஊற்றாய், அழகின் உறைவிடமாய் அறிவுக்களஞ்சியமாய், அருளே வடிவமாய் விளங்கும் தமிழருடைய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் வேறாவர். ஆரியரும் திராவிடரும் காலப்போக்கில் கொண்ட நெருங்கிய தொடர்பின் விளைவாகவும், நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளினுடைய கலப்பின் காரணமாகவும் தோன்றியதே பரமசிவன் ( பரமேசுவரன் ) எனும் பெருந் தெய்வமாகும். சங்க காலத் தமிழர்கள் முதல் காலகட்டத்தில்

சிவனை ஆலமர் செல்வனாக (தட்சிணாமூர்த்தி என்று பிற் காலத்தவரால் போற்றப்பட்ட அறிவுத் தெய்வமாகவே) கருதியுள்ளனர். பிற்பகுதியில்தான் இமயத்தை வில்லாக வளைத்த இறைவனாக[20], நீலமேனி வாலிழை பாகத்து ஒருவனாக உமையவள் ஒருதிறனாக ஓங்கிய இமையவனாக[21], முப்புரங்களை எரித்த முதலோனாக கடம்பமர் காளையின் தந்தையாக[22] சிவனைப் பலவகையான தொன்மங்கள் இணைத்துப் போற்றியுள்ளனர்.

இவற்றால் கலித்தொகை சிலப்பதிகாரம் இயற்றப் பட்ட காலத்திலேயே ஆரியர்களுக்குரிய 'உருத்திரனுடைய' பண்புகளையும், தமிழருடைய சிவபெருமானின் பண்பு களையும் ஒன்றாகச் சேர்த்துத் தலைசிறந்த பண்புகளைக் கொண்ட புதியதொரு 'முழுமுதற் கடவுளை'ப் பண்டைச் சான்றோர்கள் போற்றி வழிபடத் தொடங்கியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

## திருமால்

முல்லை நிலத்தில் தொல்பழங்காலம் கொண்டு வாழ்ந்துவந்த தமிழர்கள் தங்கள் வழிபடு தெய்வத்தை 'மாயோன்' என்று போற்றி வந்தனர். மாநிறம் உடையவன் மாயன் - மாயோன் எனப்பட்டான்[23]. மாநிறம் என்பதற்குக் கரிய நிறம் என்பது பொருள். இதனால் கண்ணனைக் கரிய நிறம் உடையவன் என்னும் பொருளாலேயே 'மாயோன்' என்று சுட்டினர். திருமால் கரிய நிறமுடையவராகவே போற்றப் ஃபடுகிறார்.

> கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணோ?
> (சிலப். 17: படர் 2)

என்னும் வழக்கு இதனை உறுதிப்படுத்துகிறது. வட மொழியாளர்களும் கிருஷ்ண எனும் சொல்லைக் கருமை நிறம் எனும் பொருளிலேயே பயன்படுத்தியுள்ளனர். இருக்கு வேதத்தில் கிருஷ்ண எனும் சொல் கருமை, மேகம் எனும் பொருள்களிலேயே வழங்கப்பட்டுள்ளது. கரிய நிறமுடைய தெய்வத்தை கிருஷ்ணன் என்று சுட்டியுள்ளனர். இதிலிருந்தே கண்ணன் ஆரியருடைய தெய்வம் அன்று என்பது வெளிப்படு கிறது. பிற்காலத்தில் கருநிறமுடைய கடவுளைக் குறிப்பிடு வதற்கு அச்சொல் பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வேதங்களில் முழுமுதற் பொருளாகப் போற்றப் பட்ட நாராயணனும் பண்டைத் தமிழ்மக்களால் மாயோன் என்று போற்றி வழங்கப்பட்ட கருநிற வண்ணனும் ஒரே

தெய்வமாகக் கருதப்பட்ட காலத்தில் தோன்றியதே திருமால் எனப்படும் காத்தல் கடவுளின் வழிபாட்டு நெறியாகும்.

## குறிப்புகள்

1. திருமுருகாற்றுப்படை, 258.
2. மேற்படி, 10-11.
3. மேற்படி, 262.
4. மேற்படி.
5. மேற்படி, 290.
6. மேற்படி, 256.
7. மேற்படி, 258.
8. மேற்படி, 259.
9. மேற்படி, 267.
10. மேற்படி, 102.
11. திருமுருகு. 260.
12. மேற்படி, 262.
13. மேற்படி, 6.
14. மேற்படி, 255.
15. பரிபாடல், 5.
16. திருமுருகு. 103.
17. மேற்படி, 264.
18. புறம். 189.
19.
20. கலித்தொகை, 38-1.
21. மேற்படி, 38-2.
22. மேற்படி, 2-4.
23. தொல். அகத். நூ. 5.

# இயல் - 8

## மெய்யறிவு

மெய்ம்மையான பொருளைப் பற்றிய அறிவே மெய்யறிவு. உள்ளதான உண்மைப் பொருளையே மெய்ப் பொருள் என்பர். எப்பொருள் செம்மையான பொருளாகவும், முழு நிறைவான பொருளாகவும் உள்ளதோ, அதனையே செம்பொருள் எனப் போற்றுவது நம் நாட்டு மரபு. எனவே செம்பொருளைக் காண முயலும் அறிவே மெய்யறிவாகும். இப்பேரண்டத்தின் இயல்பையும் அதன் மூலத்தையும் ஆராய்வது மெய்யறிவு. இவ்வுலகின் இருப்பிற்கும் இயக்கத்திற்கும் காரணமான ஒரு பேராற்றல் உண்டு என்பதை உணர்ந்து, அதன் இருப்பில் நம்பிக்கை கொண்டு, வாழ்க்கையில் முடிந்த பயனாகிய வீடு பேற்றை அடைவதற் குரிய வழிவகைகளை வகுத்துக் காட்டும் அறிவாராய்ச்சியே மெய்யறிவாகும். நம் இந்திய நாட்டில் மெய்யறிவு என்பது பெரிதும் சமயத்தோடு தொடர்புடையதாக இருந்து வருகிறது. இதனால் மெய்யறி ஆராய்ச்சியில் ஈடுபட்ட அறிஞர்களைச் சமயத் தலைவர்களாகப் போற்றும் மரபு சிறப்புறலாயிற்று.

மனித உள்ளம் வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளையும், அந்த குறிக்கோளை அடைவதற்குரிய வழிமுறைகளையும் நாடுவதில் நாட்டம் கொண்டிருக்கிறது. அத்தகைய குறிக் கோளையும் அதனை அடைவதற்குரிய வழிகளையும் வகுத்து அளிப்பதே சமயம். மக்களுடைய விழைவார்வத்தையும் வேண்டுதல்களையும் நிறைவேற்றி, அவர்களைக் கடைத்தேற்ற வல்ல ஒரு முழுமுதற் பொருளை (கடவுளை)ப் பற்றுக் கோடாகக் கொண்டனவே சமயங்கள் எனலாம். சமயங்கள் எல்லாம் கடவுளைக் கருமுதலாகக் கொண்டு வளர்ந்துள்ளன. இவ்வகையில் சமயமும் மெய்யறிவு ஆராய்ச்சியின் முடிவும் வேறுபடுகின்றன. இவ்வாறு வேறுபட்டிருந்த இருவேறு துறைகளையும் ஒன்றுபடுத்தி மெய்ப்பொருள் ஆராய்ச்சியின் முடிவாகிய மூலப்பொருளும் சமயநெறியாளர் பேசும் முழு முதற் பொருளான கடவுளும் ஒன்றே என்பதை நிலைநாட்டும் பணியினைத் தமிழகத்தின் சைவ சித்தாந்திகளும், வைணவ

சித்தாந்திகளும் செய்துள்ளனர். இராமானுசரின் விசிஷ்டாத் துவைதக் கோட்பாடும் இத்தகைய முயற்சியின் பயனாகத் தோன்றியதாகக் கூறுவர். தென்னாட்டின் இருபெரும் சமயங்களும் அதன் சித்தாந்தங்களும் கற்றோரையும் மற்றோரையும் கவர்ந்துள்ளமைக்கு ஈதே காரணமாகும் என்பது அறிஞரின் முடிவாகும்.

இந்திய தத்துவ ஞானத்தை வளர்த்து வளம்பெறச் செய்த பெரியவர்களுள் பண்டைத் தமிழகத்தில் தோன்றியவர்களும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளனர். அவர்களுடைய தொண்டு மிகப் பரந்துபட்டது; அதே சமயத்தில் மிகவும் ஆழமாக வேரூன்றியதுமாகும். பிரம சூத்திரத்திற்கு மாபெரும் உரை விளக்கம் எழுதி அத்துவைதம் எனும் வேதாந்த மெய்யறிவு ஆய்வினைச் சிறப்புமிக்க நெறியாக மாற்றியவர் சங்கரர் (கி.பி. 788 - 820). அவர் பண்டைத் தமிழகத்தின் ஒரு பிரிவான சேரநாட்டில் தோன்றியவராவர். அவருக்கு முன்பு அத்துவைத விளக்கத்தில் சிறப்புற்று விளங்கிய சான்றோர் ஒருவரைத் திரமிடாசாரியர் (தமிழ்நாட்டு ஆசிரியர்) எனும் பெயரால் சங்கரரும் அவருடைய சீடரும் சுட்டுகின்றனர். அத்திரமிடாசிரியர் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிய திருமழிசை ஆழ்வாராக இருத்தல் கூடும் என அறிஞர்கள் நம்புகின்றனர்.

சுரேசுவார் என்பவர் சங்கரரின் சீடராவர். அவர் அத்துவைத வேதாந்தத்தை விளக்குகின்ற பொழுது, தம்முடைய ஞானாசிரியரான சங்கரரைச் சுட்டும் இடங்களில் எல்லாம் அவரைத் திராவிட ஞானி என்னும் சிறப்புப் பெயரால் சுட்டிச் செல்லுவதும் இங்குக் கருதத்தக்கது. இன்றைக்கு இந்தியச் சிந்தனையில் 'வேதாந்தம்' அறிவின் ஒளிவிளக்காய் விளங்குவதற்குக் காரணமாக இருந்து வருபவர் சங்கரரேயாவர்.

சென்னைக்கும் காஞ்சிபுரத்திற்கும் இடையில் இருப்பது ஸ்ரீபெரும்பூதூர். அவ்வூரில் தோன்றியவர் (கி.பி.1017) இராமானுசர். அவர் கண்ட மெய்யறிவு விளக்கத்திற்கு விசிஷ்டாத்துவைதம் என்பது பெயர். தமிழகத்தில் பக்தி நெறியைப் பரப்பிய வைணவ சமயப் பெரியார்களான ஆழ்வார்களின் அருள்மொழிகளில் பொதிந்துள்ள வைணவ சித்தாந்தக் கருத்துகளின் ஒளியினைக் கொண்டு, அத்துவிதக் கோட்பாட்டை மறுத்து, அவர் பிரம சூத்திரத்திற்குப் புதியதொரு விளக்கம் கொடுத்தார். வைணவ பஞ்சராத்திர ஆகமங்களின் அடிப்படையில், அதற்குத்

தெளிவும் வலிவும் வாய்ந்த கோட்பாடுகளை அவர் வகுத்துத் தந்தார். தமிழகத்தில் தோன்றிய பக்தி நெறிக்கு, வைணவ சமய நோக்கில் இராமானுசர் புலன் கடந்த பொருளியல் அடிப்படையை அமைத்துக் கொடுத்தார்.

இராமானுசர் உலகம், உயிர், இறைவன் ஆகிய முப்பொருளும் உண்மை என்பதை எடுத்துரைத்துள்ளார். எனினும் இறைவனே உயிர்கள் அனைத்திற்கும் உலகிற்கும் உள்நின்று இயங்கும் தலைவனாகின்றான். ஆகவே ஆன்மாக்கள் (உயிர்கள்) பலவாயினும் அவ்வான்மாக்கள், அனைத்தையும் தனக்கு உடலாகக் கொண்டு, ஆன்மாக்களுக் கெல்லாம் ஆன்மாவாக நிற்கும் பரமவான்மா ஒன்றுதான் என்பது பெறப்படுகிறது. இறைவன் உயிருக்கு உயிராய் நிற்கும் காரணத்தால் இறைவேறு; உயிர்வேறு அல்ல இரண்டும் ஒன்று தான் என்பது புலனாகின்றது. இவற்றால் இராமானுசரின் கோட்பாட்டில் உலகும் உயிர்களும் உண்டு - உண்மைப் பொருள்கள் - என்பது தெளிவாகின்றன. ஆனால் அவை இறைவனு (பிரமத்து) க்குரிய சிறப்பு அடைகள், இறைவன் அவ்வடைகளைக் கொண்டு சிறப்பிக்கப்படும் பொருளாக உள்ளான். இந்தச் சிறப்பு அடைகளும் சிறப்பிக்கப்படும் பொருளும் ஆகிய இரண்டும் சேர்ந்த சிறப்பே (வசிட்டமே) இராமானுசர் கூறும் பரம்பொருள். இதனால் இராமானுசரின் கொள்கைக்கு வசிஷ்டாத்துவைதம் எனும் பெயர் உண்டாயிற்று.

உலகமும் உயிர்களும் உண்மை என்பதை நிறுவி அதே சமயம் இறைவன் மட்டுமே உண்மை என்பதற்கு மிக நுட்பமான விளக்கம் கொடுத்தவர் இராமானுசர்; உயிரை இறைவனுடைய உடலாக்கி இறைவனை அவ்வுடலுக்குரிய உயிராக்குகிறார். இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள இந்த உடல் - உயிர்த்தொடர்பு இராமானுசரது கொள்கைகளிலே சிறப்புமிக்க ஒன்றாகும். இதனை ஆன்மாக்கள் பகுதி; இறைவன் பகுதிகளையுடைய முழு நிறைவான பொருள்; ஆன்மாக்கள் உடல்; இறைவன் அந்த உடலை இயக்கும் உயிர்; ஆன்மாக்கள் குடிமக்கள்; இறைவன் இக்குடிமக்களை ஆளும் அரசன் என்னும் உருவகங்கள் மூலம் இராமானுசர் உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினைத் தெளிவுறுத்தி யுள்ளார்.

வீடுபேற்றை அடைவதற்குக் கன்மம், ஞானம், பக்தி ஆகிய மூவகை நெறிகள் பேசப்படுகின்றன. எனினும், அவருடைய கொள்கையில் பக்திக்கே முதலிடம் தரப்படுகிறது.

ஆனால் பக்தியைவிட மேலானதாகப் பிரபத்தி எனும் ஒன்றை அவர் குறிப்பிடுகிறார். இறைவனுடைய பேராற்றலிலும் பேரருள் திறத்திலும் முழுமையான நம்பிக்கை கொண்டு தன்னை முழுமையாக அவனிடம் ஒப்படைத்தலே - அடைக்கல மாக்குதலே - பிரபத்தியாகும். இதனைச் சரணாகதி தத்துவம் என்பர். இப்பிரபத்தி நெறியை மக்கள் அனைவரும் உடனடியாக மேற்கொண்டு ஒழுகலாம் என்பது அவருடைய கருத்து. இது பக்தி நெறியின் முதிர்ந்த அனுபவத்தில் பழுத்த தீஞ்சுவைக் கனியாகும்.

தமிழகத்து வைணவ சித்தாந்திகள் பாஞ்சராத்திரம் எனும் வைணவ ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு மெய்ப்பொருள் விளக்கம் செய்துள்ளனர். வடநாட்டு வைணவ மரபினர் வைகாநகம் எனும் வடமொழி ஆகம மரபைப் போற்றிப் போற்றி பின்பற்றியவராவர். இதனால் கி.பி. 10ஆம் நூற்றாண்டு அளவில் தென்னாட்டு பாஞ்சராத்திர வைணவர்களை அருவருப்போடு வடநாட்டு வைணவ மரபினர் நோக்கலாயினர். அதன் கோட்பாடுகளை இழித்துரைக்கலாயினர்.

இந்த இடர்ப்பாட்டைப் போக்குவதற்காகவே, யமுனசாரியார் எனப்படும் ஆளவந்தார் (கி.பி. 918-1038) ஆகமப்பிரமாணியம் எனும் நூலை இயற்றினார். அந்நூலுள் மறுக்கப்படும் செய்திகளுள் முதன்மையானவை:

1. இழிநிலை அடைந்த பாகவதர் அல்லது சாத்துவிகர்களால் பின்பற்றப்படுவது பாஞ்சராத்திர ஆகமம்.

2. அதில் வைதிக சார்பற்ற கொள்கைகள் இடம் பெற்றுள்ளன. அதில் கூறப்படும் வழிபாட்டு முறைகள் வேதத்தில் காணப்படாதவை. இதனாலேயே பிரம சூத்திரத்திற்கு உரை விளக்கம் தந்த பத்ராயணர் பாஞ்சராத்திரக் கொள்கைகளை மறுத்துள்ளார்.

3. பாஞ்சராத்திர ஆகமம் உரைக்கும் வழிபாடுகளும் விழாக்களும் வேதநெறிக்கு முரணானவை.

4. பாகவதர் (வைணவர்) பிராமணர் ஆகமாட்டார் என்பனவாகும்4. இவற்றாலேயே இராமானுசர் காலத்திற்குப் பிறகும் வைதிக நெறியினரால் பாஞ்சராத்திர இலக்கியங்கள் வேதங்களைப் போன்ற சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்தனவாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனினும் பக்தி நெறியின் தாக்கத்தினால், பாஞ்சராத்திர ஆகமங்கள்

தமிழகத்தில் தோன்றின; அந்நெறிக்கு வலிவும் பொலிவும் வாய்ந்த அடிப்படையை அவை அமைத்துத் தந்தன என்னும் உண்மையை வைணவ சமய ஆராய்ச்சியாளர் உணர்ந்து போற்றி வருகின்றனர்.

இராமானுசர் இந்தப் பாஞ்சராத்திர ஆகமங்களின் நெறியிலேயே பிரம சூத்திரத்திற்குப் புது விளக்கம் கொடுத்து தம் விசிஷ்டாத்துவைதக் கொள்கைக்கு வடிவம் கொடுத்தார். அவருக்குப் பின்னர் வந்தவர் பிள்ளை லோகாசாரியர் தமிழராவார். அவர் தத்துவத்திரையம் எனும் நூலைப் படைத்து, அதன் மூலம் பாஞ்சராத்திர வைணவக் கருத்துகளை உலகிற்கு உணர்த்தியுள்ளார். இவற்றிலிருந்து பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டில் தனிப்பட்ட வகையில் வைணவ சித்தாந்தம் ஒன்று தோன்றி வளர்ந்து வந்தமை புலனாகின்றது.

இங்கு இன்னொன்றையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். வடமொழியை நாட்டின் எல்லாப் பகுதியைச் சேர்ந்த மக்களும் கருத்துப் பரிமாற்ற மொழியாகப் பயன்படுத்தினர். இதனால் ஒரு நூல் வடமொழியில் எழுதப் பட்டிருக்கின்றது என்பதாலேயே அது முழுவதும் ஆரியப் பண்பாட்டினையே விளக்கி நின்றது என்று கொள்ள வேண்டியதில்லை. தமிழன் ஒருவனால் எழுதப்படுகின்ற ஆங்கில நூல் ஓரளவுக்காவது தமிழ்நாட்டின் பண்பாட்டுக் கூறுகளைப் பெற்றே விளங்கும் என அறிதல் வேண்டும். சங்கதர் தாம் எழுதிய சௌந்தரிய லகரி என்ற நூலில் தேவாரம் அருளியவருள் ஒருவரான திருஞான சம்பந்தரின் தீவிய பண்புகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆனால் அவரோ ஒரு காலத்தில் ஒன்றாயிருந்த தமிழ் மண்டலத்தில் கேரளப் பகுதியைச் சேர்ந்தவர்.

சென்னைக்கு அருகிலுள்ள திருப்பெரும்பூதூரில் பிறந்த இராமானுசர் தாம் அருளிய வடமொழி நூல்களுள் தமிழ்ப் பெரும்புலவர்களும் வைணவ அருளாளர்களும் கண்ட பேருண்மைகளை விளக்கியுள்ளார் என்பது மரபு. மணவாள மாமுனிகளும் பிறரும் கண்ட ஸ்ரீவைணவம் என்பது தென்கலையாம் தமிழ்த் தன்மையை வற்புறுத்திப் போராடக் காண்கிறோம் என்னும் ஆய்வுரை இங்கு நினைவுகூர்தற் குரியதாகும்.

தமிழகத்திற்குத் தத்துவ உலகில் பொன்றாப் புகழைத் தேடித் தந்துள்ள சைவசித்தாந்தம் எனும் மெய்யறிவுக்

கோட்பாடாகும். இதனை முதன்முதலில் அறிவியல் முறைப் படி 12 சூத்திரங்களாக வகுத்துக் கொடுத்தனர் மெய்கண்டார் என்ற தமிழ்ச்சான்றோரேயாவர். இவ்வரிய மெய்யறிவுக் கோட்பாடு தமிழ்மக்களுடைய சிந்தனைத் தெளிவிற்கு ஓர் உரைகல்லாகும். "சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது மிக விரிந்ததும், பெருஞ்செல்வாக்கு உடையதும், ஐயத்திற்கு இடமின்றி உண்மையிலேயே பெருமதிப்பிற்குரியதும், இந்திய நாட்டிலுள்ள சமயக் கொள்கைகளில் எல்லாம் தலைசிறந்ததுமாகும். தென்னிந்திய (தமிழ்) மக்களின் மிகச்சிறந்த பேரறிவின் பெருவிளைவே சைவசித்தாந்தமாகும். இறை - உயிர் - மக்கள் இயல்பு - உலகியற்கை - அறியாமை - துன்பம் - காணப்படாத மறுமை நிலைகள் என்பனவற்றைக் குறித்த சிக்கலான பொருள்களைத் தெளிந்துகொளினும் இத்தகைய சிறந்த முயற்சி பற்றி இது வரை ஆங்கிலத்தில் முற்றிலும் எடுத்து விளக்கப்படவே யில்லை" என்னும் டாக்டர் ஜி.யு. போப்பின் கருத்து சைவ சித்தாந்தத்தின் சிறப்பியல்புகளை அறிவிப்பதாகும்.

சங்க இலக்கியங்களில் இலைமறை காய்போல் சைவ சித்தாந்த கருத்துகள் காணப்படுகின்றன. அவை திருமூலரின் திருமந்திரத்திலே விளக்கம் பெறத் தொடங்கி யுள்ளன. மூவர் தேவாரத்திலும், மாணிக்கவாசகரின் திருவாசத்திலும் அவை சுடர்விடும் விண்மீன்களாக ஒளிருகின்றன. எனவே கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்ப் பூங்காவில் மலர்ந்த திருமுறை மலர்கள் எனும் தோத்திர நூல்களில் மெய்யுணர்வாளர்களின் அனுபவ அருண் மொழியாக, மெய்ப்பொருள் கருத்துகள் இடம் பெற்றன. பதின்மூன்றாம் நூற்றாண்டில் அவை மெய்கண்டாரின் சிவஞானபோதமாக முழு நிறைவான வடிவத்தைப் பெற்றன.

இறைவனும், உயிர்களும், உலகமும் உண்மைப் பொருள்கள். அவை தாமே தோன்றியவை. உயிர்கள் இரு வினைப் பயனாகப் பிறப்பு இறப்பு என்னும் சூழலில் சிக்கியுள்ளன. இறைவனுடைய திருவருளாலே உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களிலிருந்து விடுபட்டு, இறைவனுடைய திருவடிகளை அடைவதே வீடுபேறாகும் என்பது சைவசித்தாந்தத்தில் கூறப்படும் வீடுபேறு, துன்பம் துளியும் இல்லாத எதிர்மறை நிலை மட்டும் அல்லாமல் பேரின்பமயமான உடன்பாட்டு நிலையுமாகும். இதனை முத்தி நிலை என்பர். இவ்வீடுபேற்று நிலையில் உயிர்கள் இறைவனோடு இரண்டறக் கலப்பதில்லை; தன் தனி இயல்பை

முழுமையாக இழந்துவிடுவதுமில்லை. இறைவனுடைய தாள்களை அடைக்கலமாக அடைவதன் மூலம் ஆன்மா பேரின்பப் பெருவாழ்வை அடைகிறது என்பதே சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

இனி, சைவ வைணவ சித்தாந்தங்களுக்கு இடையே அடிப்படையில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவை இரண்டும் ஒரு முழு முதற் பொருளை மையமாகக் கொண்டுள்ளன. உயிர்கள் பல என்னும் கொள்கையை இவ்விரு சாராரும் அடிப்படையாகக் கொண்டுள்ளனர். இறைவன், உயிர், உலகம் ஆகிய மூன்றும் உண்மைப் பொருள்கள் என்பதில் இவர்களுக்கு இடையே கருத்து வேற்றுமை இல்லை; உயிர்கள் இருவகை வினைகளின் பயனை அனுபவிக்கின்றன என்பதும், இறைவன் அருளால் உயிர்கள் உலகக் கட்டுகளிலிருந்து விடுபட்டு இறைவனுடைய திருவடிகளைப் புகலிடமாக அடைகின்றன என்பதும் இவ்விரு சாராரும் போற்றும் சித்தாந்தத் துணிபாகும்.

இவற்றிலிருந்து ஓர் உண்மை புலனாகின்றது. சைவ, வைணவ சித்தாந்தக் கொள்கைகள் ஒரு மூல முதலிலிருந்து தோன்றி, பின்னர் பிரிந்து வளர்ந்தன என்பதை நாம் அறிய முடிகின்றது. அந்த மூல முதல் தமிழ்நாட்டின் தனிப்பெரும் சிந்தனையாளரும் உலகப் பொருள் சிந்தனையாளர் குழுவின் முன்னணியில் இடம்பெற்றுள்ளவருமான திருவள்ளுவரின் மெய்றிவுக் கோட்பாடாக இருக்கக்கூடும் என்பதை திருக்குறளை ஆழ்ந்து கற்பவர் நன்குணர்வர்.

மனித இனத்தின் சிந்தனையிலேயே மிகவும் முழு நிறைவுடையதும் திறமையானதுமான சிந்தனைமுறை சைவ சித்தாந்தம் என்று அறிஞருலகம் வியந்து போற்றுவதும் இங்கே சுட்டத்தக்கது. இவ்வாறு தொன்மை மிக்க இலக்கிய மரபும், மாண்புமிக்க தத்துவ நெறியும் இந்தியாவில் இன்று வரை உயிர்ப்புடன் விளங்குவதற்குத் தமிழகம் ஆற்றியுள்ள தொண்டு பேரளவினதாகும்.

## அறத்தின் வழி அமைந்த ஆன்மீகம்

மனிதன் வாழ்க்கையில் அடையவேண்டிய பேறுகளை- பொன்றாப் புகழ்மிக்க வாழ்வியல் நோக்கங்களை மூவகையாகப் பகுத்துள்ளனர். அவை: அறம், பொருள், இன்பம் என்பன. அவற்றை மும்முதற் பொருள் எனப் போற்றுவர். தமிழ்மக்கள் எண்ணத்தெரிந்து, அறிவை வளர்த்து, கருத்து வகையில் உயர்ந்த நாகரிக வாழ்க்கையை

வாழக்கற்ற காலத்தில், உலகப் பொருள்கள் அனைத்தையும் அகம், புறம் என்று பாகுபாடு செய்தனர். உயிர்கள் எல்லாம் இன்பத்தை நாடுகின்றன. உள்ளத்தால், உணர்வால், அறிவால், பண்பால், தம்முள் ஒத்த உணர்வுடைய ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழ்வதனால் உண்டாகும் இன்பமே உலக இன்பங்களுள் தலைசிறந்த இன்பமாக அவர்கள் கருதினர். இவ்விரண்டுமே உள்ளத்தின்கண் தோன்றுவது; புறத்தோற்றத்திற்குப் புலனாகாத உள்ள உணர்ச்சிகளுள் தலையாயது. இதனால் இதனை 'அகம்' என்று போற்றினர். உள்ளார்ந்த உணர்வால் உள்ளத்தின்கண் எழும் எழிலும் பெற்று விளங்கும் காரணத்தால் இதனை 'அகம்' என்று கருதியதாகத் தோன்றுகிறது. அன்பு வழிப்பட்ட மனித வாழ்க்கையே அனைத்தின் கருமுதலாகும்.

ஒத்த அன்புடையர் தாமே அல்லாமல் எல்லாராலும் நுகரத்தக்கதாகவும், இவை இவ்வாறிருந்ததெனப் பிறருக்கு எடுத்துரைக்கத்தக்கதாகவும் உள்ளவற்றைப் 'புறம்' எனும் பகுதியில் பண்டைத் தமிழர் அடக்கினர். இதனுள் அறிவு வழிப்பட்ட மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளும் செயல்களும் சிறப்பிடம் பெறலாயிற்று. உயிர் வாழ்க்கைக்குத் தேவையான பொருளினை ஈட்டல், வீரவுணர்வோடு நாட்டைக் காக்கப் போரிடுதல், அருளுணர்வோடு பிறருடைய துன்பத்தைத் துடைக்க முயலுதல் ஈகை, உலக நிலையாமையை உணர்ந்து வாழ்தல், அறத்தினை மதிக்கப் போற்றி அந்நெறியில் நின்று ஒழுகுதல் என்பன புறத்தினுள் அடக்கப்பட்டன. தனிமனிதனின் அனுபவங்களுக்கு மதிப்பு அளித்தும், குற்றங் குறைகளை உணர்ந்து செய்தும், அனைத்துலகக் கவர்ச்சி வாய்ந்த ஆன்மீகப் பயன்மதிப்புகளின் மேம்பட்ட நிலைக்குத் தனிமனிதனை உயர்த்தும் பேராற்றல் வாய்ந்தது புறப்பொருள் என்று கருதினர்.

காலப்போக்கில் அகம் இன்பத்தையும் புறம் அறத்தையும் பொருளையும் உணர்த்தும் நிலை தோன்றலாயிற்று. இவ்வாறு அகம், புறம் எனும் பொருளின் வகைப் பாகுபாடு, மும்முதற்பொருளாகிய அறம், பொருள், இன்பம் என்று விரிந்து சிறந்ததைக் காணுகின்றோம். இன்பமும் பொருளும் அறத்தை அடைவதற்குரிய படிகளாகக் கருதப் பட்டன. அறம் ஒழுகலாற்றுப் பயன் மதிப்புகளையும், பொருள் பொருளாதாரப் பயன் மதிப்புகளையும் இன்பம் உளவியல் சார்ந்த பயன் மதிப்புகளையும் உணர்த்துவன வாகும். திருவள்ளுவரும் இந்த மூன்றையே தம்முடைய

பொன்றாப் புகழ் வாய்ந்த நூலில் முப்பால்களாக விளக்கியுள்ளார். வீடுபேற்றை அறத்திலேயே அடக்கிக் கூறுவது தமிழ்ப் பண்பாடு வழிவந்த மரபாகும். துறவும், வீடுபேறும் அறவொழுக்கத்திற் பாற்பட்டன என்பதே திருவள்ளுவர் போன்றோரின் துணிவாகும். எனவே, மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும் கூறுகளையும் உள்ளார்ந்த பேராற்றல்களாக நின்று இயங்குவது அறமே என்பது அவர்கள் நம்பிக்கை. இதனால் அறத்தின் வழிப்பட்ட வாழ்க்கையே உண்மையான சமய வாழ்க்கையாக - ஆன்மீக வாழ்க்கையாகத் தமிழ்ச் சான்றோர்கள் போற்றினர். 'அறத்தான் வருவதே இன்பம்'[1], அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை'[2], 'அறவாழி அந்தணன்'[3] என்று திருவள்ளுவர் அழுத்தந் திருத்தமாக அறத்தின் ஆட்சியையும், மாட்சியையும் அறிவுறுத்துவது ஆழ்நிலை சிந்தித்தற்குரியதாகும். 'சிறப்புடைய மரபின் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம் தோற்றம்'[4] என்றும், 'அறநெறி இதுவெனத் தெளிந்த'[5], என்றும், 'அறத்தாறு அன்றெனை மொழிந்த தொன்றுபடு கிளவி'[6] என்றும், 'அறநெறி முதற்றே அறவின் தோற்றம்'[7] என்றும், 'அறன் கடைப்பட்டாக வாழ்க்கை' என்றும், 'அறந்துஞ்சு செங்கோலையே' என்றும், 'அறனொடு புணர்ந்தே திறனறி செங்கோல்'[21] என்றும், 'அறனே அன்றே ஆக்கமும்'[8] என்றும் 'அறத்தினுள் அன்பு நீ என்றும் பண்டைத் தமிழ்ச்சான்றோர் அறத்தின் பண்பையும் பயனையும் போற்றியுள்ளனர். இவையாவும், தங்கள் வாழ்க்கையில் அறத்திற்கு அவர்கள் கொண்டிருந்த மதிப்பினைத் தெளிவுறுத்துகின்றன.

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
இறவாது இதுகேள்; மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்
அல்லது கண்டதில்

என்று அவர்கள் அறத்திற்குத் தந்துள்ள பொதுப்படையான விளக்கமும் பண்டைத் தமிழரின் அறவழிப்பட்ட ஆன்மீக பண்பாட்டை எடுத்தியம்புவதாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே காலந்தோறும் தமிழ்ப்பண்பாடு வளர்ந்து வந்திருக்கின்றது. இதனை, தமிழ்நாட்டில் ஒழுக்கத்தை வற்புறுத்தும் நூல்கள் இலக்கியமாகவும் சிறந்து விளங்குகின்றன. வள்ளுவர் காலத்திலிருந்து புதிய ஆத்திசூடி பாடிய பாரதி காலம், பாரதிதாசன் காலம் வரையிலும் நீதி நூல்களுக்கு ஓர் ஏற்றம் உண்டு.

திருக்குறள் தமிழரது வேதமாக விளங்குகிறது. இது ஒரு தலைசிறந்த அறநூல். நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்ற பழமொழி நாலடியாரையும், திருக்குறளையும் சுட்டிக் காட்டுகிறது. காப்பியம் எழுத வருகின்றவர்கள் எல்லாம் திருக்குறளை இலக்கணமாக வைத்துக்கொண்டு இலக்கியம் எழுதுகின்றார்கள்.

கடவுள் வேதத்தைப் பாடினான் என்று சொல்லும் போதெல்லாம், நால்வர்க்கு அறம் உரைத்தான் என்றே பாடுகிறார்கள். அருளை வற்புறுத்த வந்த அப்பர் பெருமான் கடவுளைத் தயா மூல தன்மமே என்று அறவடிவமாகவே கண்டு புகழ்கின்றார். இதனால் தமிழ்ப்பண்பாட்டின் அறத்திற்கு இருக்கும் ஏற்றம் நன்கு விளங்கும். அறத்தையே கடவுளாகக் காணுகின்ற காட்சியில் திளைத்துத்தான் திருவள்ளுவர் தம் அற நூலைச் செய்தாரோ என்று நாம் வியக்க வேண்டியிருக்கிறது.

## உலக மறுப்பின்மை

பொதுவாக இந்தியரைப் பற்றிக் கூறப்படும் குறைகளுள், 'இவ்வுலக வாழ்க்கையில் ஆர்வமும் பற்றுறுதியும் அற்றவராய், வீடுபேற்றைப் பற்றியும் மறு பிறவியைப் பற்றியும் மிகுதியாகக் கவலைப்படுகின்றனர்' என்பதாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சங்க காலம் முதற் கொண்டு இன்றுவரை, வாழ்க்கை வாழ்வதற்கே; வளமாகவும் சிறப்பாகவும் வாழ்வதற்கே என எண்ணும் தமிழருடைய சிந்தனையில் இழையோடிச் செல்கிறது. எதிலும் அதிகமாகத் தோய்ந்துவிடாமல், பற்றினைக் கொண்டு அதற்கு அடிமை ஆகிவிடாமல் நடுநிலையில் நின்று வாழ்க்கையைத் துய்ப்பதே பண்டைத் தமிழர் போற்றிய வாழ்க்கை நெறியாகும். கிரேக்கர்களைப் போன்று, தமிழ்மக்களும் வாழ்க்கையை அளவாகத் துய்த்து வாழ்வாங்கு வாழ்வதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இதனை,

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தனிதலும் அவற்றோரன்ன
காதலும் புகுவது அன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தென்றும் இலமே முனிவின்
இன்னது என்றலும் இலமே (புறம். 192)

நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தலை ஓம்புமின்; அதுதான்

எல்லோரும் உவப்பது; அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் தெறியுமா ரதுவே ( புறம்.195 )

என்னும் பாடற்பகுதிகள் தெளிவுறுத்தும்.

திருவள்ளுவர் காலத்திற்கு முன்பு இருந்தே தமிழ் மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய வழி வகைகளைக் கண்டறிய முயன்று உள்ளனர். உலகில் உள்ள தோன்றிய பொருள்கள் அனைத்தும் அழியும் இயல்புடையன என்பதனை அறிந்து அறநெறியில் நின்று வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதே அவர்கள் நடைமுறையில் பின்பற்றிய கொள்கையாகும். 'எதனிடத்தும் அளவான பற்றுடையவராய் வாழ்வது' என்பது அவர்களுக்குக் கைவந்த கலையாகும். 'இந்தியச் சிந்தனையை' உலகிற்கு உணர்த்திய ஆல்பர்ட் சுவைஞர்,

உலகத்தில் நிலைபெற்றுள்ள சமயக்கொள்கைகளை இரண்டு வகையாகப் பகுக்கலாம். பெரும்பாலும் மேற்கத்திய சமயங்கள், மனித வாழ்க்கை மாயை அன்று; உண்மையானது என்று வற்புறுத்துகின்ற இந்த நம்பிக்கைதான் மக்கள் சமுதாயம் வளர்வதற்கே துணைபுரிகிறது. பெரும்பாலும் கிழக்கிந்திய சமயங்களிலே வாழ்க்கை பொய்; உலகம் எல்லாம் மாயை என்ற கொள்கை வலியுறுத்தப்படுகிறது. இக்கொள்கையால் நம்பிக்கை கொண்டவர்கள் சமுதாய வாழ்க்கையில் அக்கறை காட்டுவதில்லை; மனித வாழ்க்கை ஒரு வகையான தெருக்கூத்து என்று அவர்கள் எண்ணு கின்றனர்... இறைவனிடத்திலே மனிதன் அன்பு செலுத்த வேண்டும் என்பது பகவத் கீதையின் குறிக்கோளாகும். ஆனால், மனிதன், மனிதனுக்குக் காட்டும் அன்பின் மூலம் இறைவனை அடையலாம் என்னும் நினைப்பே பகவத் கீதையில் இல்லை.

அன்பு, சமூக சேவையாகப் பரிணமிக்க வேண்டும் என்னும் கருத்து திருக்குறளிலேதான் வற்புறுத்தப்பட்டுள்ளது. நெடுங்காலமாகத் தமிழ்நாட்டில் வேரூன்றி வளர்ந்த கருத்துகளை அவர் குறள் வெண்பா வடிவில் எடுத்துரைத் தார். செயல் மூலமாகவும் சேவை மூலமாகவும் மற்றவர் களுக்கு நன்மை செய்ய முடிகிறதே! ஆகையினால் செயலில் ஈடுபடு! என்பது வள்ளுவர் இடும் கட்டளையாகும் என்று தெரிவித்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

மற்றும் திருக்குறளில் உலக வெறுப்பின்மை எவ்வாறு செயலின் மூலம் சிறந்து விளங்குகிறது என்பதை அவர்,

செயலில் ஈடுபடுவதன் மூலம் மனிதனுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது என்னும் கருத்து இந்திய இலக்கியத்திலேயே வேறெங்கும் காண இயலாதது. இந்தக் கருத்தை வள்ளுவர் பல இடங்களிலே வற்புறுத்தியுள்ளார் என்ற கோடிட்டுக் காட்டி யுள்ளமை நம் கருத்தைக் கவருவதாகும். இந்தக் கோட்பாடு எவ்வாறு பிற்காலத்தில் இந்தியா முழுவதும் பரவியது என்பதை,

ஆகவே, கிறித்துவ சகாப்தத்தின் தொடர்ச்சியிலேயே உலகம் உண்மையானதுதான்; மாயை அன்று என்னும் கோட்பாடும் இந்தியாவில் பரவியிருந்தது. பௌத்த நூல்களிலும் வைதிய ஏடுகளிலும் பகவத் கீதை முதலிய நூல்களிலும் இந்தக் கருத்துகள் இடம்பெறவில்லை என்றாலும் குறளாசிரியர் மூலமாக இந்தக் கொள்கைகள் மெல்ல மெல்லப் பரவிப் பின்னர் சமயத் தலைவர்கள் மூலம் (இந்திய) நாடெங்கும் ஓங்கி வளர்ந்தன என்று தம்முடைய ஆய்வின் முடிவினைச் சுவைட்சர் அழுத்தந்திருத்தமாகத் தெளிவுறுத்தி உள்ளார்.

இந்த எண்ணப்போக்கு தமிழினத்தில் பக்தி வெள்ளப் பெருக்கு எடுத்து ஓடிய காலத்தில் கற்றோரும் மற்றோரும் வாழ்வில் உணர்ந்தே போற்றத்தக்க உண்மைகளை வடித்துக் கொள்ள மண்ணகத்தில் விண்ணகத்தைக் காணமுயலும் தூய வாழ்க்கைக்குத் தேவையான வழிவகைகளை வகுத்துக் கொள்ள - சிறந்ததோர் அடிப்படையை அமைத்துத் தந்தது.

சமய மலர்ச்சிக் காலத்தில் உலகின்மீது பற்று இல்லாமல் வாழ்தல் வேண்டும் என்னும் கொள்கை வலியுறுத்தப்பெற்றது. எனினும் சைவ வைணவ அருளாளர்களுள் யாருமே உலக வாழ்வை மறுத்துப் புறக் கணிக்க வேண்டுமென்று அறிவுறுத்தவில்லை. பெரும்பாலான அடியார்களும், ஆழ்வார்களும் திருமணம் செய்துகொண்டு மனைவி மக்களோடு வாழ்ந்து இறைவழிபாட்டில் ஈடுபட்டனர். இளமையில் சமண சமயத்திற்குச் சென்று பின்னர் வைணவராக மாறிய அப்பர் அடிகள் வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்துகொள்ளாமல் சிவபெருமானின் திருத்தொண்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் உலக மறுப்புக் கொள்கையை யாண்டும் எடுத்துரைக்கவில்லை. சைவ வைணவ அடியார் அனைவருமே சமய வாழ்க்கையில் சிறந்து விளங்கினர்; பக்தி நெறியின் மாட்சியை உலகிற்கு உணர்த்தினர். தாங்கள் கண்ட கடவுள் அனுபவத்தைப் பாடல்களிலே வடித்துத் தந்தனர். அத்தெய்வத் தமிழ்ப்

பாடல்களில் மண்ணகத்தின் விண்ணகத்தைக் கொண்டதற்கு பக்திநெறியே சிறந்த வழி என்பதையும், பலவாறாக விளக்கி யுள்ளனர். 'மண்ணில் நல்ல வண்ணம்' வாழ்வதன் மூலமே வீடுபேற்றினை அடைய இயலும் என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளமை இக்கருத்தினைத் தெளிவுறுத்துவதாகும். ஆழ்வார்களும் பெரிதும் இத்தகைய எண்ணப் போக்குடைய வராகவே விளங்கினர். உலக வாழ்க்கையில் ஈடுபட்டுத் திருமாலினைப் போற்றி வளர்க்கும் பேற்றைவிட, தேவுருலகத் தலைவனாக வாழும் வாழ்க்கை எனக்கு வேண்டாம் என்று குலசேகராழ்வார் மொழிந் துள்ளமை உலக மறுப்பின்மை உணர்வின் வெளிப்பாடாக அமைந்துள்ளதைக் காணலாம். இல்லற வாழ்வை அவர்கள் வெறுத்து ஒதுக்கவும் இல்லை.

"இல்லறம் அல்லேல் துறவறம் இல் என்னம் சொல் அறம்; அல்லனவும் சொலல்லல" (நா.திவ்.47 அடி 53) என்னும் பாசுரப் பகுதி இல்லறத்தின் ஏற்றத்தை எடுத்தியம்பு வதாகும்.

பற்றற்ற மனநிலையைப் பெறுவதற்கு மனிதன் ஓயாது முயலவேண்டும் என்பதையே பலவகையாகச் சான்றோர்கள் அறிவுறுத்தியுள்ளனர். பண்டைத் தமிழரின் வாழ்வியல் கோட் பாட்டைத் தொல்காப்பியர் மிகத் தெளிவாக எடுத்துரைத் துள்ளார் (மனிதன் இல்லறத்தில் ஈடுபட்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து) பாதுகாவல் அமைந்த பிள்ளை களுடன் நெருங்கி அறத்தினை விரும்பும் சுற்றத் தாருடனே தலைவனும் தலைவியும் வீடுபேறாகிய சிறப்பினை அருளும் முழு முதற்பொருளை இடைவிடாது எண்ணிப் போற்றும் நன்னெறியில் பழகுதல் இல்வாழ்க்கையின் முடிந்த பயனாகும் என்பது தொல்காப்பியர் காட்டும் பண்டைத் தமிழரின் வாழ்க்கை நெறியாகும்.

சமய பௌத்த சமயங்களின் செல்வாக்கினால் ஒருசிலர் இல்வாழ்க்கை நெறியிலிருந்து விலகிச் சென்றிருக்கலாம். ஆனால் பொதுவாகத் தொல்காப்பியனார் காலம் முதற் கொண்டு திரு. வி. கலியாணசுந்தரனார் காலம் வரை தமிழ் மக்கள் உலக வாழ்க்கையை வெறுத்து ஒதுக்காமல் அதன் இயல்பை உணர்ந்து அறநெறியில் நின்று ஒழுகுவதன் மூலம் இனியவற்றைக் கண்டும் நுகர்ந்தும் இன்புற்றுள்ளனர் என்பது இங்கே குறிப்பிடத் தக்கதாகும். எனவே, 'உலக மறுப்பின்மை' உணர்வு தமிழ்ப்பண்பாட்டின் சிறப்பியல்பாகவே இருந்து வருகிறது.

## மனித நலம்

பண்டைத் தமிழ் மக்கள் மனிதப் பண்பினை மதித்துப் போற்றினர். தன்னுயிர் மன்னுயிர்; மன்னுயிர் தன்னுயிர், பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக உணரும் அருள் நெறியினைக் கடைப்பிடித்தனர். எல்லாரும் இன்புற்றிருக்கவே நினைத்தனர். பயன் கருதாமல் பிறருக்கு உதவியாக வாழ்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். தனக்கென வாழாமல் பிறருக்கு உரியாளனாக வாழ்வதே வாழ்க்கையின் பயன் என்றும் கருதினர்.

பதவியாளர் குறிக்கும் நீண்ட பட்டங்களைப் பெறுவதும் விரைந்த செலவினையுடைய ஊர்திகளிலே ஏறிச்செல்வதும், செல்வாக்கும் வசதியும் உள்ள வாழ்க்கையைக் குறிக்கும். ஆனால் இவை உண்மையான செல்வம் ஆகா. இத்தகைய செல்வம் முன்பு தாம் செய்த வினையின் பயனாக எய்தப்படுவதாகும். சான்றோரால் மதித்து உயர்த்திக் கூறப்படும் செல்வம் யாதெனில் தம்மை நம்பி வந்தடைந்தோர்க்கு உண்டாகிய துன்பத்தைக் கண்டு அஞ்சி, அத்துன்பத்தைப் போக்கி, அவரைக் கைவிடாமல் காக்கும் இனிய தன்மையேயாகும் என்பது பண்டைத் தமிழரின் மனிதநலக் கோட்பாட்டின் அடிப்படையாகும்.

அறிவைப் பெற்றதன் பயன் பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாக உணரும் திறனுடையவராதல் ஒருவன் துன்பமானவை என்று தன் வாழ்க்கையில் கண்டு உணர்ந்தவைகளை மற்றவரிடத்தில் செய்யாமல் தவிர்க்க வேண்டும். இன்னா ( துன்பம் ) செய்தவர்க்கும் இனியவையே செய்தல் வேண்டும். இன்னா ( துன்பம் ) செய்தவரை நாணம் அடையுமாறு அவருக்கு நன்மை செய்வதே அவருக்கு தரத்தக்க சிறந்த தண்டனையாகும். தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புற வேண்டும் எனக் கற்றறிந்தோர் கருதுவர்[12] என்பது வள்ளுவர் காட்டும் மனிதநலக் கோட்பாட்டின் தாரமாகும்.

நாம் பிறருக்குச் செய்யும் உதவிகளுக்கு எத்தகையப் பயனையும் மாற்றாக எதிர்பார்க்கக்கூடாது. இந்த உலகத்தார் தமக்கு உதவும் மழைக்கு என்ன கைம்மாறு செய்கின்றனர்? பிறரிடமிருந்து பொருள் பெற்றுக்கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் அவ்வாறு பெறுவது தீமையானது; மேலுலகம் இல்லை என்றாலும் பிறர்க்குக் கொடுப்பதே நல்லது. தவவலிமை உடையவர்கள் வலிமை பசியைப் பொறுத்துக்

கொள்ளலாகும். அதுவும் அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதாகும். வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும் அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும். நாம் இவ்வுலகில் படைத்த செல்வம் அறனும் பொருளும் இன்பமும் எனப்பட்ட மூன்றும் செய்வதற்கு உதவவேண்டும். அவ்விதம் தமது செல்வம் உதவாமற்[14] போனால் நாம் நம்மைப் பாதுகாக்காதவர்களாவர். இவ்வாறு அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் என்பதையும் அருள் தலைகாக்கும் என்பதையும் பகுத்துண்டு பல்வகை உயிர்களையும் போற்றிக்[15] காக்கும் வாழ்க்கையே சாலச் சிறந்தது என்பதையும் பண்டைத் தமிழர் வாழ்ந்து காட்டியுள்ளனர். நாகரிகம் என்னும் சொல்லுக்குக் கண்ணோட்டம் என்னும் பொருளில் கண்டவன் தமிழன். இது ஒன்றே தமிழரின் மனித கோட்பாட்டின் மாட்சியை உணர்வதற்குப் போதிய சான்றாகும்.

அறத்தைச் செய்வதால் புண்ணியம் கிடைக்கும். அதனால் மறுபிறவிக்கும் பெரும்பயன் உண்டாகும் என்னும் எண்ணத்தைப் பண்டைத் தமிழர் சிறப்பாகப் போற்றவில்லை. அவ்வாறு எண்ணிச் செயல்படுவோரை அறவிலை வாணிகர் என்று அவருக்குப் பெயர் சுட்டியுள்ளனர். பிறர் வறுமையைப் போக்குவதே தங்கள் கடமை. அதுவே சான்றோர் சென்ற அறிவெனத் தெளிந்துள்ளனர்[16]. இத்தகைய மனித நலம் கனிந்த உள்ளம் விரிந்து பரந்து வளர்ந்து பண்பட்டதன் பயனாக மான்கள் போன்ற விலங்குகளும் வண்டுகள் போன்ற பறவைகளும் தன்னால் எத்தகைய துன்பமும் அடையக் கூடாது என்னும் அருளுணர்வால் நெகிழ்ந்து உருகும் தன்மையைப் பண்டைத் தமிழர் அன்றாட வாழ்வில் பெற்றிருந்தனர். இவ்வாறு பொதுநலத்தின் நாட்டத்தில் தன்னுடைய நலத்தைக் கரைத்து வாழக் கற்றவன் தமிழன். இப்பண்பாட்டின் பயனாகத் தன் குடும்பம் தன் ஊர், தன் நாடு எனும் குறுகிய பற்றுகளிலிருந்து விடுபட்டு அனைத்தாகக் குடிமகனாகி எல்லா ஊர்களையும் தன்னுடைய ஊர்களாகவும், உலக மக்கள் அனைவரையும் தன்னுடைய சுற்றத்தினராகவும் கருதிப் போற்றும் பரந்த உள்ளத்தை - பண்பட்ட உள்ளத்தை - பாசம் தோய்ந்த உள்ளத்தைப் பெற்றவன் தமிழன். அவ்வருள் நலங்கனிந்த மனித நலக் கோட்பாட்டை,

யாதும் ஊரே யாவரும் கேளிர் ( புறம். 192 )

எனும் மணிமொழி உலகிற்கு உணர்த்துகிறது.

பிறர் நோயினைத் தன் நோய்போல் உணரும் உள்ளப் பண்பைப் பெற்றவர்கள் துன்பத்தில் துவளுவோர்க்கும், வறுமையில் வாடுவோர்க்கும், தங்களால் இயன்ற உதவிகளைச் செய்வது. இதனை.

வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து (குறள். 221)

ஆற்றுத லென்பதொன் றலர்தவர்க்கு உதவுதல்
(கலி. 133:6)

என்னும் பாடற் பகுதியினால் அறிகிறோம்.

மணிமேகலை எனும் காப்பியத்தின் ஆசிரியரான சாத்தனார் செல்வம் உடையவர்க்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவுதல் என்பது அறத்தை வணிக நோக்கோடு விற்பதாகுமே யொழிய, அது உண்மையான அறமாகா. குருடன், முடவன், செவிடன், ஆதரவற்றோர், நோயாளிகள் போன்ற எளிய மக்களுக்கு செய்யப்படுகின்ற உதவியே உண்மையான அறமாகும் என்பதைத் தெளிவுறுத்தியுள்ளார். மற்றும் உலகிலுள்ள உயிர்கள் அனைத்தையும் வாட்டி வதைக்கும் பசிப்பிணி எனும் நோய் ஒழிக்கப்பட வேண்டும் எனும் தம் பேராவலைப்,

பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக! (மணி.16:134)

என்று அவர் தெரிவித்துள்ளார். இவை யாவும் பண்டைத் தமிழ் மக்கள் மனிதநலத்தை மட்டும் அல்லாமல் உயிர்கள் அனைத்தையும் மதித்துப் போற்றும் மாண்புடையவராக விளங்கியதைத் தெரிவிக்கின்றன. இவ்வருளுரை நெறியின் வளர்ச்சியினைச் சமயக் குரவருடைய திருப்பாடல்களில் காணுகின்றோம்.

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
(திருமந். 85)

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் (திருமந்.2104)

என்று அறிவுறுத்திய திருமூலர், நடமாடும் கோயில்களான நாதன் அடியார் (உயிர்) களுக்குச் செய்யும் தொண்டே சாலச்சிறந்தது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். தொண்டு நெறியே உலகை உய்விக்க வல்லது என்பதை அப்பர் பெருமான் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் கோட்பாட்டை உலகிற்கு உணர்த்தும் வகையில் வாழ்ந்து காட்டினார்.

அவ்வருளாளர்களின் வழியில் வந்த சான்றோர் தாயுமானவர். அவர் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். அக்காலத்தில் தொன்மைச் சிறப்பு வாய்ந்த மனிதநலக் கோட்பாடு பல்வேறு காரணங்களால் தமிழ் மக்கள் இடையே நீறு பூத்த நெருப்பாக மாறியிருந்தது. அதற்கு ஒரு புது மெருகைக் கொடுத்து, புதிய ஆற்றலை ஊட்டிய பெருமை தாயுமானவருக்கு உரியதாகும்.

> கொல்லாவிதைக் குவலயமெங்கும் பூக்க
> அல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை
> ( தாயு. 42:53 )
>
> எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
> தெய்வ அருட் கருணை செய்வாய் ( தாயு. 65 )
>
> தம்முயிர்போல் எவ்வுயிரும்தான் என்று
> தண்ணருள்கூஞ்
> செம்மையருக்கேவல் என்று செய்வோம்?
> ( தாயு. 149 )
>
> அன்பர்பணி செய்யஉனை ஆளாக்கி
> விட்டுவிட்டால் இன்பநிலை தானேவந்தெனில்
> ( தாயு. 135 )
>
> எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணும் தபோதனங்கள்
> செவ்வறிவை நாடிமிகச் சிந்தை வைப்ப
> தென்னாளோ?
> ( தாயு. 11 )

என்னும் பாடற்பகுதிகள் இதனை வலியுறுத்துகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய இராமலிங்க அடிகள் சமரச சன்மார்க்கத்தைத் தோற்றுவித்த இராமலிங்க அடிகள் சமரச சன்மார்க்க வண்ணத்தில் மனித நலக் கோட்பாட்டைக் குழைத்துக் கொடுத்தார். அத்தாகிய கடவுள் யாண்டும் வீற்றிருத்தலால், எவ்வுயிருக்கும் மன மொழி, மெய்களால் தீங்கு நிகழ்த்தாது தன்னுயிரைத் தான் பகிர்ந்து ஓம்புமாறு போல் மன்னுயிரையும் ஓம்பி, அவ்வுயிர் நலன் கருதித் தொண்டு செய்வதற்கு அவர் முனைந்து நின்றார். மனித சமுதாயத்தின் வாடிய பயிராக வறுமையால் வாடும் மக்களையும், நோயினால் துன்புறும் மக்களையும் ஆண்ட அடிகளார் உள்ளம் உளைந்து உருகுகிறார். அருள் நெறியின் ஆட்சி பரவ அரும்பாடுபட்டார். எவ்வுயிரும் பொது வெனக் கண்டு இரங்கி, அவற்றின் துன்பத்தைப் போக்க

முயலுகின்றவருடைய செயல் அனைத்தும் திருவருளின் செயலெனப் போற்றுகின்றார். எத்துணையும் வேறுபாடு கருதாமல் எவ்வுயிரையும் தம்முயிரைப்போல எண்ணி, உள்ளத்தால் ஒத்தவுரிமையுடையவராகவே மகிழ்கின்றவர் உள்ளமே அறிவுருவாய இறைவன் நடம்புரியும் இடம் - திருக்கோயில் எனத் தெளிவுற்றதாக அவர் அறிவிக்கின்றார்; எல்லாவுயிர்களும் நல்லால் எனத் தொழுதல் வேண்டும் எனத் தெரிவிக்கின்றார். இவ்வாறு மனிதனுக்கும் மற்ற உயிர்களுக்கும் துன்பம்வராமல் பணிபுரிய, அவர் ஓர் இயக்கத்தையே தோற்றுவித்ததை நாடு நன்கறியும்.

மறுமலர்ச்சியுற்றிருக்கும் இன்றைய தமிழகம் சங்க காலச் சான்றோர்கள் மூலம் இராமலிங்க அடிகள் வரையில் போற்றிப் பின்பற்றிய நாட்டிலே பரப்பிய அருளுறை நெறியை மனிதம் எனும் புதிய பெயரால் மனித நலக் கோட்பாடு நெறியாகப் போற்றிப் பின்பற்றுவதைக் காணுகின்றோம்.

இம்மனித நலக் கோட்பாடு தமிழ்ப் பண்பாட்டில் இணைந்தும் உள்ளதை மேலே கண்டோம். தமிழ்ப் பண்பாட்டின் தனிப்பெரும் பண்புநிலை சிறப்புமிக்க தொன்றாகத் தமிழரின் மனித நலக் கோட்பாடு அமைந்திருக்கிறது. இதன் அடிப்படையில் தமிழருடைய அறிவியல் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

## வள்ளல்களின் கொடைத்திறன்

இந்தப் பின்னணியில் நோக்கினால் கடையெழு வள்ளல்கள் என்று சிறப்பித்துப் பேசப்படும் சங்ககால குறுநில மன்னர்கள் வரையாது வழங்கிய வள்ளல் தன்மையின் உள்ளார்ந்த உணர்வு யாது என்பது எளிதில் புலனாகும்.

தம்முடைய பரம்பு நாட்டில் இருக்கிற முந்நூறு ஊர்களைத் தம்மை நாடிவந்த பாணர்க்கும் புலவர்க்கும் மற்றக் கலைஞர்க்கும் அன்புப் பரிசாகப் பாரி அளித்து மகிழ்ந்தான். வாய்விட்டுத் தன்னுடைய துன்பத்தை எடுத்து உரைக்க இயலாத காட்டில் காற்றினால் அலைப்புண்டு வருந்திய முல்லைக் கொடியின் கொழுக்கொம்பாக, ஒலிக்கின்ற மணிகள் நிறைந்த தம்முடைய தேரினைப் பரம்புமலைக் கோமான் பாரி வழங்கிய செயல் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்[18]. மேகத்தைப் பார்த்தவுடன் களிப்புற்று மயில் ஆடுவதைக் கண்டு கானமயில் குளிரால் நடுங்கித் துன்புறுகிறது என்று எண்ணி அருளுணர்வோடு தான் போர்த்துக் கொண்டிருந்த சிறப்புமிகு போர்வையை அம்மயிலுக்குப்

போர்த்தி மகிழ்ந்தான். அவனுடைய அருள் உள்ளம் எத்துணை அருளுணர்வோடு எத்துணையாயினும் ஈதல் நன்றென, மறுமைப் பயனை நோக்காது பிறர் வறுமையைப் போக்குவதே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு இருந்ததைக் காணுகின்றோம்[19].

நீலநாகம் பயந்து அளித்த கலிக்காமனும் மென்துகிலை ஆய் என்னும் வள்ளல் ஆலமர் செல்வனாகிய இறைவனுக்கு அளித்து இன்புற்றான்[17]. இவன் தன்னுடைய பொருள் அனைத்தையும் புலவர்களுக்கும் பாணர் பாணியர்களுக்கும் உவந்து அளித்தான். இறுதியில் எஞ்சி நின்றது ஆயினுடைய மனைவியின் கழுத்தில் பொலிவுற்று 'ஈகை அறியா இழையணி'[20] யாகிய மங்கல நாணேயாகும்.

மலைநாட்டு மன்னனாகிய மலையமான் திருமுடிக்காரி பொன்னையும் பொருளையும் இரவலர்க்கு வரையாது வழங்கியதோடு[21] தேரினை அழகிய மணமகளைப்போல் அலங்கரித்துப் புலவர்களுக்குப் பரிசாகக் கொடுத்து மகிழ்ந்தான். புலவர்கள் தம்மைப் புகழ்வதை விரும்பாத, வல்வில் ஓரி, 'புகழ் வேண்டாப் புரவலனாகவே' வாழ்வதைப் பெரிதும் விரும்பினான்[22]. தான் யார் என்பதையும் தன்னுடைய நாடு யாது என்பதையும் பிறருக்கு அறிவில்லாமல் வரையாது வழங்கிய வள்ளல் நள்ளி, பெயர் அறியாப் புரவலனாக வாழ்ந்து மறைவதையே நோக்கமாகக் கொண்டிருந்தான்[23]. நள்ளி உண்டவரை நரை, திரை, மூப்பு இன்றி நெடுநாள் வாழச்செய்யும் கருநெல்லிக்கனியைத் தான் உண்டு மகிழாமல் நாளும் இனிய பாடல் புனைந்து நற்றமிழை வளர்த்த ஔவைப் பெருமாட்டிக்கு அளித்துப் பெருமையுற்றான் அதியமான் நெடுமான் அஞ்சி[24].

தம்மை நாடிவந்த இரவலர்க்குக் காளைமாட்டினை நன்கு அணிவித்து அதன்மீது பல்வேறு பொருட்களை மூட்டை மூட்டையாக ஏற்றி முசுண்டை என்னும் வள்ளல் வழியனுப்பு வைத்தான். வயிற்றுப் பசிக்கு உணவு தருமாறு கேட்ட புலவருக்கு நாஞ்சில் வள்ளுவன் பேரளவிற்கு உணவு அளிக்க வேண்டிய யானையைப் பரிசாகக் கொடுத்தான். இதைத் 'தேற்றா ஈகை' என்பர்[25]. ஆடு மாடுகளையும், ஏறிச் செல்வதற்கு ஊர்திகளையும் தாமான் தோன்றிக்கோ பரிசாகக் கொடுத்துள்ளான்[26]. புலவர்க்கு வண்டி நிறைய செல்வத்தை வண்டி பெட்டியோடு நல்லியக்கோடன் பரிசளித்தான்[27].

தன்னை நாடிவந்த நற்றமிழ்ப் புலவர்க்குக் கொடுத்து உதவுவதற்குத் தம்மிடம் பொருள் யாதும் இல்லாமையான் தோயன் மாறன் பெருவருத்தமுற்றான்; உடனே கொல்லனிடம் சென்று வேலினை வடித்துத் தருமாறு வேண்டினான். பகைவரைத் தாக்கி வெற்றிபெற்றால் கிடைக்கும் திறைப்பொருளைக் கொண்டுவந்து புலவருக்குக் கொடுத்து உதவலாமே என்று அவன் அருள் உள்ளம் துடித்ததாம்.

அரசைத் துறந்து காட்டிலே வாழ்ந்த குமணன், தன்னைத் தேடிவந்த புலவருக்குக் கொடுத்து உதவ வேறு பொருள் இன்மையால் வருந்தினான். தன் தலையைக் கொண்டு வருபவருக்குப் பரிசு அளிப்பதாகத் தன் தம்பி அறிவித்து இருப்பதை நினைவுகூர்ந்து, புலவரிடம் வாளைக் கொடுத்துத் தன்னுடைய தலையைக் கொய்து சென்று தம்பியிடம் கொடுத்துப் பரிசைப் பெறுமாறு வேண்டினான் குமணன்[28]. தன் உயிரைவிட வருந்தி வந்த புலவர் பரிசில் பெறாமல் வெறுமனே திரும்பிச் செல்லுவது கொடுமையாகும் என்று எண்ணிய குமணனுடைய அருள் உள்ளம் சங்க காலத்தை தமிழரின் கொடைத் திறத்திற்குச் சூட்டப்பட்ட மணிமுடியாகும்.

இத்தகைய கொடைத்திறன் வாய்ந்த குறுநில மன்னர் பலர் அக்காலத்தில் சிறப்புற்று விளங்கினர். அவர்கள் வாழ்ந்த காலம் தமிழருடைய வீரயுகமாக மட்டும் வீறுபெறவில்லை; வரையாது வழங்கும் வள்ளல்கள் பலர் வாழ்ந்து மறைந்த 'கொடை யுகமாகவும்' வான்புகழ் பெற்றுள்ளதை யாரும் எளிதில் மறக்க இயலாது.

இந்த வள்ளல் தன்மையின் வழிப்பட்ட அருளுணர்வு தமிழகத்தின் வரலாற்றுக் காலம்நெடுகப் பல்வேறு வழிகளில் வெளிப்பட்டுள்ளதைக் காணலாம்.

உலக அறிஞர்கள் பலர் தமிழ்ப் பண்பாட்டின் மனித நல நோக்கங்களைப் புரிந்துகொண்டுள்ளனர். அதனால், அம் மனிதநல நோக்கு பொதுப்படையானதாகவே தோன்றாமல் அன்றாட நடைமுறை மெய்ம்மையாக - உள்பொருளை - இருப்பதை அவர்கள் உலகிற்கு உணர்த்த முயன்றுள்ளனர்.

இந்திய மெய்ப்பொருளியலில் பருப்பொருள் சார்ந்த ஆழ்ந்த விழிப்புணர்வையும் உயிர்க்களை வாய்ந்த படைப்பாற்றல் மிகு கற்பனையையும் மனிதப் பண்பாற்றல் மேன்மை நயத்தையும் தமிழரின் அறிவியல் கண்கொண்டு

சேர்த்திருக்கிறது என்பது அறிஞரின் துணிவாகும். தமிழ்ப் பண்பாட்டினை வெப்பமண்டலக் கிரேக்கப் பண்பாடு எனவும், தமிழகத்தை இந்தியாவின் தோற்ற காலத்திற்கு முற்பட்ட இந்தியா எனவும் கிரேக்கத்திற்கு முற்பட்ட கிரேக்கம் எனவும் ரெனே குரோசெம் எனும் வரலாற்று ஆசிரியர் போற்றுகின்றார். உலகப் பண்பாடுகளுக்குத் தமிழர் வழங்கியுள்ள மாபெருங் கொடைகளுள் இந்த அடிப்படை மனிதநலக் கோட்பாடு ஒன்றாக இருத்தல் கூடும் என்பது அவருடைய கருத்தாகும்.

## வாழ்வியல் நோக்கம்

சங்க காலத் தமிழருடைய வாழ்க்கையைக் கூர்ந்து நோக்குகின்ற பொழுது அதில் மூவகை இயல்புகள் முளையான உள்ளமை புலனாகின்றன. கண்களால் கண்டறியும் உலக வாழ்க்கையே நிலையானது எனும் எண்ணப்போக்கு முதல் காலகட்டத்தில் தமிழரிடம் மேலோங்கி நிற்பதைக் காண முடிகின்றது. போரும் காதலுமே வாழ்வின் சிறப்புமிகு நோக்கங்களாகக் கருதப்பட்டன. எனவே இலக்கியத்தின் பாடு பொருள்களாக அகமும் (காதல் வாழ்வும்), புறமும் (போர் வாழ்வும்) பெரிதும் போற்றப்பட்டன. இவ்விரு இயல்புகளும் ஒருவகைப் பூலன் நுகர்வு இன்ப நாட்டத்தையும், புகழ் வெறியையும் வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோளாகப் பண்டைத் தமிழர் கொண்டிருந்தனர் என்பதையே பறை சாற்றுகின்றன. ஆரிய நாகரிகத்தின் தாக்கமோ ஊடுருவலோ உண்டாகாத காலத்திலேயே இக்குறிக்கோள்கள் தமிழருடைய எண்ணப்போக்காக உருவாக்கி தனிச் சிறப்பு வாய்ந்ததொரு பண்பாட்டை வளர்க்கத் தூண்டும் சக்திகளாக அமைந்திருந்தன.

சங்கப் புலவர்களுள் காலத்தால் முற்பட்டோர் மன்னனின் வாழ்விலேயே தோய்ந்தவர்களாக இருந்தனர். பொருளை ஈட்டுவது எதற்காக? என்பதைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த கருத்துகள் யாவும் இந்த உணர்வையே வெளிப்படுத்துகின்றன.

> தன்நயந்து உறைவோர்க்குத் தாங்கி தரளயந்து
> இன்மைக் கோள்தொடு ஏமுறக் கெழக்கு
> நடுகல் ஆற்றார் நல்கூர்ந்தோர் (அகநா. 15)

> அறந்தலைப் பிரியாது ஒழுகலும் சிறந்த
> கேளிர் கேடுபல ஊன்றலும் நலம்
> வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கே (அகநா.1736)

நட்டோர் இன்மையும் கேளிர் துன்பமும்
ஒட்டாது உறையுள் பெருக்கமும் ஆணஉ
ஒருபகுதி வாழ்ந்த லாற்றும் ( அகநா. 279 )

அறனும் பொருளும் வீழாமை நாடித்
தண்தக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னா கும்மே முன்னியது முடித்தல் ( அகநா. 256 )

உலகிற் பிறந்த எல்லா மக்களும் இன்புற்று வாழ வேண்டும் என்பது பண்டைத் தமிழருடைய கருத்தாகும். செய்யுள்கள் அறம், பொருள், இன்பம் பற்றியே அமைய வேண்டும்[29] என்பது தொல்காப்பியருடைய கட்டளையாகும். இம்முப்பொருள்களையே அகம் புறம் எனும் பொருள் பாகுபாட்டினுள் அடக்கியுள்ளனர். சங்கப் பாடல்களிலே அறம், பொருள், இன்பம் பற்றிய பாடல்கள் தாம் மிகுதியாக உள்ளன.

காதல் வாழ்க்கையில் பல்வேறு நிலைகள் தாய், தந்தை, அரசன், கொல்லன், இளைஞன் ஆகியோருடைய கடமைகளைப் பற்றிய கருத்துகள் வரும் பதினாறையும், அறவோனையும் வரவேற்று உதவுவதே இல்வாழ்வாரின் கடமை எனும் கருத்து. இவற்றைக் காத்துப் போற்றி வளர்ப்பதற்கே அரசு செல்லும் கொள்கை முதலியன யாவும் இவ்வுலகில் எல்லாரும் இன்புற்று வாழ வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளதைக் காணுகின்றோம்.

பண்டைத் தமிழர்கள் 'புத்' எனும் நரகத்தில் இருந்து தம்மைக் காப்பான் என்பதற்காக மகனைப் பெற்று எடுக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. இன்ப மயக்கத்தை இவ்வுலக வாழ்க்கையில் அளிப்பவர்கள் மக்கள் எனவே மக்களைப் பெறாதவர்க்கு இவ்வுலக வாழ்க்கையில் பெறத் தக்க சிறப்புமிகு இன்பம் கிடைக்காமல் போகுமே என்றுதான் அவர்கள் வருந்தினர்.

தங்கள் முயற்சிக்கு உதவும் பொருட்டும் இவ்வுலக வாழ்க்கை இனிது அமைய வேண்டும் என்பதற்காகவும், சங்க காலத் தமிழர்கள் தெய்வங்களை வேண்டி வழிபட்டனர். நடு கல் வழிபாடும் போற்ற வெற்றியைத் தரும் என்று அவர்கள் நம்பினர். இந்த நடுகல் வழிபாடுகள் காலத்தால் மிகவும் பழமையானது. ஆரியருடைய வருகைக்கு அல்லது ஆரியரோடு கலப்பதற்கு நெடுங்காலத்திற்கு முன்பு இருந்தே தமிழரிடம் இருந்து வந்த வழிபாட்டு நெறியாகும். வேலன் வெறியாடல் முதல் பல்வேறு சமயச் சடங்குகளையும் விழாக்களையும்

இவ்வுலகில் இன்புற்று வாழ்வதற்காகவே பண்டைத் தமிழர்கள் நடத்தினர். இறந்த பிறகு இன்பம், துறக்கம் அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் கடவுளரைத் தமிழ் மக்கள் வழிபட்டனர் என்பதற்குரிய சான்றுகள் மிகமிகக் குறைவாகவே உள்ளன. வடவருடைய ஊடுருவலுக்குப் பிறகு இயற்றப்பட்ட பாடல்களிலேயே அவை உள்ளன. சமயக் கொள்கைகளும் தத்துவங்களும் வளர்ந்த சங்க காலத்தின் கடைப்பகுதியில்தான் மறுமை இன்பத்திற்காகக் கடவுள் வழிபாடு செய்யும் பழக்கம் உண்டாயிற்று.

வாழ்க்கை வாழ்வதற்கே! என்பதுதான் தொடக்க காலத் தமிழ் மக்களின் கொள்கை. இதன் பொருட்டு அவர்கள் பல செயல்களைப் புரிந்துள்ளனர். கட்டுப்பாட்டுடன் வாழ்வதற்கும் நல்லொழுக்கத்துடன் வாழ்வதற்கும் இவ்வுலக வாழ்வில் அனுபவிக்க வேண்டிய இன்பங்களை நெறியோடும் முறையோடும் அனுபவிப்பதற்கும் தெய்வங்களின் துணையை உதவியை அவர்கள் வேண்டி நின்றனர்.

அரசர்களுக்கு அறிவுரைகளாகக் கூறப்பட்டுள்ள அறிவுரைகள் இக்கருத்தையே வலியுறுத்துகின்றன.

யவனர்தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனை கலத்து ஏந்துயாம்
ஒண்தொடி மகளிர்க்கொப்பமகிழ் சிறந்து
அங்கு இனிது ஒழுகுமதி (புறநா. 56)

வாரின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த
இரவல் மாக்கள் ஈகைநுவல
ஒண்தொடி மணிநீர் பொலங்கரத்து ஏந்திய
தண்கமழ் தேறல மருப்ப மகிழ் கறந்து
அரங்கினிது ஒழுகுமதி பெரும! அரங்குஅது
வல்லுனர் வாழ்ந்தோர் என்ப (புறநா. 34)

பொறப்பு விளங்கு புகழ்அலை நிஙபுகழ் ஏத்த
இலங்கு இழை மகளிர் எயிலங்காத்து
மணம்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்து இனிது உறைமதி பெரும!
வரைந்து பெற்ற நல் உளதியையே (மதுரை. 782)

எனும் பாடற் பகுதிகள் யாவும் ஒரே வகையான அறிவுரையினைக் கூறுவதைக் காணலாம். இவை யாவும் உலக இயல்பினை எடுத்துரைத்து நன்னெறியை அறிவுறுத்தி மனைவி மக்களோடு நல்வாழ்வு வாழுமாறு வாழ்த்துகின்றன.

மூன்றாவதாகக் கண்ட பாடற்பகுதி தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு மாங்குடி மருதனார் அறிவுரை கூறும் மதுரைக்காஞ்சி எனும் பாடலின் இறுதிப் பகுதியாகும். இங்கு நிலையாமையை மட்டும் அறிவுறுத்தி, துறவுக்கோலம் பூணுமாறு வலியுறுத்தும் ஆன்மீகச் சிந்தனை சிறப்பிக்கப்படவில்லை. உலக இயல்பை உள்ளவாறு உணர்ந்து உள்ளம் செம்மையுற்று இன்பமாக வாழ்நாளைக் கழித்து மகிழுமாறு வாழ்த்தும் வாழ்த்து முறையே மதுரைக்காஞ்சி யுணர்த்தும் பண்டைத் தமிழரின் வாழ்வியல் கோட்பாடாகும்.

நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது! அன்றியும்
நல்லறப்புப் படூஉம் நெறியுமா ரதுவே (புறநா. 195)

எனும் கருத்தும் இதனையே வலியுறுத்துகிறது. நல்லது செய்ய முயலுக! இயலாவிடில் தீமையாகிலும் செய்யாமல் இருப்பாராக! இது எல்லாருக்கும் இன்பத்தைத் தரும். மற்றும் இது நல்ல நெறியில் வாழவும் தூண்டும்! எனும் கருத்து நடைமுறையை வாழ்க்கையின் சிக்கலையும், துன்பத்தையும் உண்டாக்காமல் தாமும் இன்பமாக வாழ்வதோடு மற்றவர்களையும் மகிழ்ச்சியாக வாழவிட வேண்டும் எனும் புத்துலகச் சிந்தனையைப்போல் ஒலிக்கிறது.

இவ்வாறு கலையுணர்வு மிக்க வாழ்க்கையை அறநெறிப்பட்ட அன்பு மயமான இன்ப வாழ்க்கையைத் தாம் வாழ்வதையே "வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்" என்று பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் போற்றினர். இவற்றை எல்லாம் கருத்திற் கொண்டு சங்ககாலத் தமிழருடைய வாழ்க்கை பெரிதும் 'உலகியல் சார்புடையதாக இருந்தது' எனலாம். அவர்கள் வாழ்க்கையைத் துன்பமயமானதாகக் கருதவில்லை; எல்லாம் இன்பமயம் எனும் மகிழ்வு நல நோக்கோடு வாழ்க்கையினை ஒவ்வொரு துளியாகச் சுவைத்து மகிழ்ந்தனர் எனக் கூறினால் அது தவறாகாது.

இத்தகைய வாழ்க்கைப் பாகுபாடு சங்ககாலத் தமிழருடைய வாழ்வில் ஆரியச் சிந்தனைகளின் ஊடுருவல் உண்டானதற்கு முன்பு சிறப்புற்று விளங்கியது என்பது இதுவரையில் நாம் கண்ட சங்க கால நாகரிகமும் பண்பாடும் எனும் ஆய்வுரையால் எளிதிற் புலனாகின்றன. இத்தகைய வாழ்க்கை முறையும் பண்பாடும் நாகரிகத்தின் தொடக்க

நிலையைக் காட்டுகின்றன என்று ஓர் அறிஞர் கூறுவது பொருத்தமற்ற கருத்தாகும். மேலும் நடுவுநிலைமையில் நின்று ஆராய்ச்சி செய்ய விரும்பாதவரின் தவறான சிந்தனைப் போக்கைப் பிரதிபலிப்பதாகும்.

முதலில் பாசுரங்களிலும் அரச அவைகளிலும் மேட்டுக் குடி மக்கள் இடத்தும் ஆரியருடைய செல்வாக்குப் பெருகலாயிற்று. சமயத் துறையில்தான் எளிதில் அவர்கள் செல்வாக்குப் பெற்றுள்ளனர். இதற்குக் காரணம் வைதிக சமயத்தின் தூதுவர்களாக அவர்கள் சிறுசிறு கூட்டமாகத் தமிழகத்திற்குள் நுழைந்தமையாகும். முதலில் அரசனையும் நகரத்துச் செல்வமும் செல்வாக்கும் மிக்க மக்களையும் தங்கள் புதுமை நாகரிகத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதற்கு ஆரியர்கள் அரும்பாடு பட்டுள்ளதைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. பையப்பைய அவர்களுடைய பண்பாட்டு ஊடுருவல் வெற்றி பெற்றதன் விளைவாகக் கலித்தொகை, பரிபாடல் மற்றும் பதிற்றுப்பத்து போன்ற நூல்களில் தெளிவாகக் காணலாம். பிற சங்க நூல்களில் அருகிய வாழ்க்கை ஒருசில பாடல்கள் இதற்குச் சான்று பகருகின்றன.

சங்ககாலத் தமிழன் வாழ்க்கை ஆரிய மயமாக இருந்தது. வேத வேள்விகள் பழக்க வழக்கங்கள் சிறப்புமிக்கனவாகப் போற்றப்பட்டன. அவற்றை யாரும் எதிர்க்கவில்லை. ஒருவகைக் கலவை நாகரிகமாகவே சங்ககால நாகரிகம் காட்சி தருகிறது எனும் கருத்து இங்கு ஆராயத் தக்கதாகும். நாம் மேலே கண்ட ஆரியருக்குப் முற்பட்ட தமிழருடைய வாழ்க்கை முறை இந்த வரலாற்று அறிஞர் கருத்து உண்மை அன்று என்பதை மெய்ப்பிக்கப் போதிய சான்றாகும்.

சங்ககாலத்தின் கடைப்பகுதியில் வடவருடைய செல்வாக்குப் பெருகியது. ஆனால் அது அரசியல் அலை வாழ்வு. அரசியல் துறைகளையே பெரிதும் தாக்கியது. சங்கப் பாடல்களில் வைதிக சமய எதிர்ப்புக்குரிய சான்றுகள் காணப்படவில்லை. எனவே சங்ககாலத் தமிழர்கள் வைதிக சமயத்தையும் வடமொழியின் வழிப்பட்ட பண்பாட்டையும் தயக்கம் இல்லாமல் விருப்பத்தோடு ஏற்றுக்கொண்டனர் எனும் கூற்று முற்றிலும் பொருந்தாது. முதலாவதாகச் சங்க இலக்கியம் நிலப்பிரபுத்துவ சமுதாய வாழ்க்கையைப் பிரதிபலிப்பது! அரசன் எவ்வழி குடிமக்கள் அவ்வழி எனும் பழமொழிக்கேற்ப சமுதாயத்தின் மேல்தட்டில் இருந்தவர்களுடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் நம்பிக்கைகளையும் எதிரொலிக்கும் வகையிலேயே அச்சமுதாய

இலக்கியம் அமைவது இயற்கை. எனவே சமுதாயத்தின் உறுப்புகளாக இருந்த எல்லா வகையான மக்களுடைய ஒருமித்த உள்ள உணர்வுகளையே கலித்தொகையும், பரிபாடலும் பிற நூல்களும் பிரதிபலிக்கின்றன எனக் கூற இயலாது.

அக்காலத்திய சிறப்புமிகு சிந்தனையாளர்கள் சிலர் புதுமைப் போக்குடைய எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் தங்களுக்கேயுரிய பெருந்தன்மை யுடன் எதிர்த்துள்ளதைச் சங்கப் பாடல்கள் சிலவற்றுள் நாம் காணமுடிகிறது. எனவே வைதிய எதிர்ப்பு திட்டமிட்ட ஓர் இயக்கமாக நடத்தப்படவில்லை எனக் கூறுவதே பொருந்தும்.

உலகம் நிலையில்லாதது; இளமை நிலையில்லாதது; யாக்கை நிலைய்யில்லாதது; செல்வம் நிலையில்லாதது என்பதைச் சங்க காலத்து மக்கள் அறிந்து இருந்தனர். ஆனால் அதற்காகப் பயந்து அவர்கள் முற்றும் துறந்த முனிவர் களாகவோ, துறவிகளாகவோ ஆகிவிடவில்லை, காட்டிற்கு ஓடிவிடவில்லை.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்
அல்லால் பொன்றாது நிற்பது ஒன்று ( திருக். 233 )

புகழெனின் உயிரும் கொடுக்குவர் ( புறநா. 182 )

மன்னா உலகத்து மண்ணுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே ( புறநா. 165 )

எனும் பாடற் பகுதிகளில் நிலையில்லா உலகில் புகழை நிலை நிறுத்திச் சொல்லுமாறு சான்றோர்கள் அறிவுறுத்துவதைக் காணலாம். இங்கு, வாழ்வாவது மாயம் எனும் கொள்கைக்கு எதிராக வளமாக வாழ்க, நலமாக வாழ்க, இவ்வுலகில் உங்கள் வாழ்க்கையின் பயனாகிய புகழை நிலைநிறுத்திச் செல்லுக எனும் எண்ணம் மேலோங்கி நிற்கிறது. இது தமிழருடைய சிந்தனைப் போக்கின் தனித்தன்மையைக் காட்டுகிறது. அறம் செய்தால் இப்பிறவியில் புண்ணியம் செய்தால் அடுத்த பிறவியில் உயர்ந்த சுவர்க்க வாழ்வு கிடைக்கும் என்பது அவருடைய கொள்கையாகும். இதனைத் தமிழ்ச் சான்றோர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவிலை வாணிகன் ஆய் அவன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென ஆங்குப்
பட்டன்று அவன் கைவண்மையே ( புறநா. 134 )

எனும் பாடலின் கருத்து இங்கு ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும். ஒன்றைக் கொடுத்து மற்றொன்று வாங்குவது வணிக நோக்கு. இந்தப் பிறவியில் அறம் செய்தால் மறுபிறவியில் பயன்படும் எனும் எண்ணத்தோடு அறம் செய்வோர் அறத்தை விலைகூறி விற்கும் வணிகரேயாவர். இதைவிட வேறு என்ன இருக்க இயலும். இதையே மற்றொரு சான்றோர்,

எத்துணை யாயினும் ஈதல் நன்றுஎன
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர் வறுமை நோக்கின் அவன்
கைவண்மையே (புறநா. 41)

என்று அறிவிக்கின்றார்.

வறுமையால் வாடுவோருடைய துன்பத்தைப் போக்க உதவுக; அறம் செய்க; கொடுத்து உதவுவதே சிறந்த நெறி. நம்முடைய பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் பன்னெடுங் காலமாக போற்றிவரும் சிறப்புமிக்க நன்னெறி அதை நாம் போற்றுவோமாக. வாணிக நோக்குடன் அறம் செய்யும் இந்த அயலவர் வழக்கம் நமக்கு வேண்டா எனும் கருத்துகள் மேற்கண்ட புறநானூற்றுப் பாடல்களில் பொதிந்து கிடக்கின்றன. இதையே வெளிப்படையாக,

நல்லாறு எனினும் கொளல்
மேலுலகம் இல் எனினும் ஈதல்
நன்று (குறள். 222)

என்று வள்ளுவர் அறிவிக்கின்றார். மேல் உலகம் ( சுவர்க்கம் ) கிடைக்கும் என்பதற்காக தருமம் செய்யச் சொல்லுகிறார்கள். நீ அதற்காக அறம் செய்யாதே என்று அவர் அறிவுறுத்து கிறார். இங்கு வடவருடைய நம்பிக்கை தகர்க்கப்படுகிறது அல்லவா. இதற்கு திருவள்ளுவர் இக்குறட்பாவில் கடுமையான தாக்குதல் ஒன்றைச் செய்துள்ளார். வைதிக பிராமணர் களுடைய கடமைகள் ஒன்று பொருளைப் பிறரிடம் யாசித்துப் பெறுவதாகாது. இப்படிப் பொருளைப் பிறரிடம் கைரியங்குப் பெறுவது நல்லவழி என்றே மதிப்பிற்குரிய செயல் என்றே தரும சாத்திரங்கள் கூறுகின்றன. திருவள்ளுவர் இதனை உடன்படவில்லை. யாசிப்பது நல்லவழி என்று சிலர் சொல்லலாம். ஆனால் அதுவும் குணம் பயக்கும். எனவே கொடுத்து உதவுவதே சிறந்தது, போற்றத்தக்கது எனும் கருத்தையே நல்லாறு எனினும் கொளல் தீது என்று அவர் நையாண்டி செய்கிறார். மனிதனுடைய பிறப்பு அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பித்தது சங்ககாலத் தமிழர் அறியாதது.

அதாவது வருணாசிரமம் என்ற அடிப்படையில் பூணூல் அணிவதற்குரிய தகுதியும் உரிமையும் வாய்ந்தவர்கள் சத்திரியர், பார்ப்பனர், வைசியர், தேவர். மற்றவர்கள் எல்லாம் சூத்திரர் எனும் தாழ்ந்த சாதியினராவர் எனும் வைதிக சமயத்தினரின் சாதிப்பாகுபாட்டு முறையினைத் தமிழ் சமுதாயத்தில் வடமொழிப் பண்பாட்டினர் சங்க காலத்தின் பிற்பகுதியில் புகுத்த முயன்றனர். இதனைத் திருவள்ளுவர் போன்ற தமிழ்நாட்டு அறவோர்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான் ( குறள். 972 )

மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் ( குறள். 134 )

அரசர்களிடம் செல்வாக்குப் பெற்று யாகங்கள் செய்து அவர்களுக்குப் புண்ணியம் தேடித் தருவதற்கு வைதிய சமயத்தினர் முயன்றுள்ளனர். அதே சமயத்தில் தங்கள் வருணாசிரம தருமத்தையும் புகுத்துவதற்கு ஆவன செய்துள்ளனர். பிறப்பு அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வருணாசிரம தருமத்தை இழித்துரைத்த வள்ளுவரே உயிர்க்கொலையும் புலைப்பசியும் வாய்ந்த வேள்விகளைச் சாடியுள்ளார்.

அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின்
உயிர் செகுத்கு உண்ணாமை நன்று ( குறள். 289 )

இவை யாவும் சங்க காலத்தின் இரண்டாவது காண்டத்தில் வைதிக சமயத்தினர் தங்கள் வருணாசிரம சாதி முறையையும் வேத வேள்விகளையும் அடுத்த பிறவியில் ஆதாயம் கிடைக்கும் அதற்காக இந்த பிறவியில் தருமம் செய்க எனும் வாணிக முறை அறச்செயலையும் தமிழம்மக்கள் இடையே புகுத்திய பொழுது எழுந்த எதிர்ப்பினை வெளிப்படுத்துகின்றன. எனவே ஆரிய நாகரிகத்தைச் சங்க காலத் தமிழர் மனமுவந்து ஏற்றுக்கொண்டனர் எனும் கூற்று மேற்போக்கான முடிவு என்பதனை வெளிப்படுத்துகிறது. அடுத்து சங்ககாலத் தமிழ்ப் பண்பாடு ஆரிய மயமாக விளங்குகிறது எனும் கருத்தும் பொருத்தமற்றதாகும். சங்க நூல்களில் வேதத்தை மறைவேள்வி வாய்மொழி முதுமொழி எழுதாக் கற்பு அந்தணர் அருமறை நான்மறை எனும் தொடர்களால் சுட்டியுள்ளார். வேத வேள்விகளைப் பற்றியும வேள்வித் தூண் பற்றியும் மதகு வளர்த்தல் பற்றியும் குறிப்புகள் காணப்படு

கின்றன. அரசர்கள் இராச சூயம் போன்ற வேள்விகளைச் செய்துள்ளனர். வேற்றுமை தெரிந்த நாள்பால் என்று நால் வகைச் சாதி முறையும் குறிப்பிடப்படுகிறது. பார்ப்பனர் போற்றப்படுகின்றனர். மறுபிறப்பு துறக்கம் நரகம் பற்றிய பல செய்திகள் பேசப்படுகின்றன. ஆரிய தெய்வங்களைத் தமிழருடைய தெய்வங்களோடு இணைத்தும் ஒன்றுபடுத்தியும் புது வடிவம் கொடுத்து உள்ளனர். உண்மை இதனை மறுப்பார் இல்லை. ஆனால் இவை யாவும் சங்க காலத்தின் பிற்பகுதியில் உண்டானவை என்பதை மூடி மறைத்துவிட முயலுவது அறமாகாது. இரண்டாவதாக இவை நகரத்து மக்களுடைய வாழ்க்கையில் புகுத்தப்பட்ட புதுமைப் பாங்குகள். இவற்றைப் பின்பற்றுவது மதிப்பைத் தரும் என்று மேட்டுக்குடிமககள் நினைத்து இருக்கலாம். அதனால் இவற்றைப் பின்பற்ற முயன்று இருக்கலாம். சமயப் பழக்க வழக்கங்களையும் நகர வாழ்க்கை முறைகளையும் பாடிய புலவர்கள் அந்தப் புதுமை இயல்புகளைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். ஆனால் இக்கூறுகள் அன்றைய தமிழ் நாகரிகத்தின் இயல்புகள் எத்தனை விழுக்காடாக இருந்திருக்க இயலும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழரின் சிறப்பு இயல்புகளோடுகூட வாரியப் பண்பாட்டுக் கூறுகளை ஒப்பிடுவோமானால் பத்து விழுக்காடுகூட ஆரிய நாகரிகக் கலப்பு உண்டாக்கி இருந்ததாகக் கூற இயலாது. பிற்காலத்தில் மிகுதிப்பட்டது. எனவே சங்க காலத் தமிழர் நாகரிகம் ஆரிய மயமான நாகரிகம் எனக் கூறுவது அறிவுடைமையாகாது. நடுவுநிலை பிறழாது ஆராய வல்லார் இந்தக் கூற்று பச்சைப்பொய் என்பதனை எளிதில் உணர்வர்.

பண்டைத் தமிழருடைய வாழ்வியல் நோக்கில் சமண பௌத்த சமயத்தின் தாக்கத்தால் துன்பியல் நோக்கு மெல்ல மெல்ல நுழையலாயிற்று. இது மூன்றாவது காலகட்டமாகும். வினையின் வந்தது வினைக்கு வினையாக என்ற போக்கில் சுவர்க்க வலை கையாளமுங்கல் தவறா உள்ளம் தன்பால் உடையது மக்கள் வாழ்க்கை இதுவென உணர்க எனும் எண்ணப்போக்கு சிலப்பதிகாரம் மணிமேகலை காலத்தில் தோன்றியதாகும். துறவு நெறியே சிறந்தது எனும் உணர்வினை ஊட்டுவதற்கு அவர்கள் முயன்றுள்ளனர். ஆனால் இதற்கு வெளிப்படையாக எதிர்ப்பு இயக்கம் தோன்றியதைச் சமய மறுமலர்ச்சிக் காலத்தில் ( கி.பி. ஏழாம் நூற்றாண்டு ) நாம் காணுகின்றோம். இம்மூவகைக் கால கட்டங்களிலும் தமிழர் நாகரிகமும் பண்பாடும் வளர்ந்து சிறந்துள்ளன. இவற்றின் அடிப்படைப் பண்புகளை பிறப்பால்

உயர்வு தாழ்வு அற்ற நிலையை வாழ்க்கையின் மாட்சி விருந்தோம்பலின் சிறப்புக் கலையுணர்வு மிக்க வாழ்க்கை. முருக வழிபாட்டு நெறி இவ்வுலக வாழ்க்கைப் பற்று கொடைத்திறன் கடலக ஊராட்சி முறை அனைத்துலக நோக்கு மனிதநல நாட்டம் எனும் விழுமிய பண்புகள் யாவும் மேம்பாடு உடையனவாகவே போற்றப்பட்டன. இன்றும் போற்றப்பட்டு வருகின்றன.

## சங்க காலச் சான்றோர் கண்ட வருங்கால உலகம்

பகற்கனவு காண்பதிலே காலத்தைக் கழிக்காத துடிப்பு மிக உள்ளவராகவும், செயல்திறனும் வாய்ந்த மக்களைக் கொண்டதாகச் சங்ககாலச் சமுதாயம் காட்சி தருகிறது. ஒளிமிகு வாழ்வும் வீரவுணர்வும் சான்றாண்மையும் நிறைந்த வாழ்க்கையை நாடும் மக்களாக அன்றைய தமிழர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்கள் வாழ்க்கையின் விழுமிய குறிக்கோள்களாகப் போற்றிய இலட்சியங்கள் பல அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்ந்த பெரியோர்கள் பலர் அவர்கள் இடையே வாழ்ந்தும் வந்தனர். அவர்களை அன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் என்று போற்றினர் அச்சான்றோர்கள். பண்டைத் தமிழ்ச் சமுதாய்த்திற்குத் தேவையான வாழ்க்கைத் தத்துவம் ஒன்றை நன்கு வகுத்துத் தந்துள்ளனர். வாழ்க்கைத் தத்துவம் மறு உலகை துறக்கத்தை அடைவர் அடைவதற்குரிய வழிவகைகளைக் கூறுவதாக அமையவில்லை. வாழ்க்கை துன்பியல் நோக்குடன் அணுக வில்லை ஆனால் முற்றிலும் நடைமுறைக்கு உகந்த வாழ்க்கை நெறியைக் காட்டுவதாக வகுக்கப்பட்டுள்ளதைக் காணு கின்றோம். அவர்களுடைய வாழ்க்கைக் கோட்பாடு குறுகிய நோக்குடையது அன்று. தனி மனிதர் சிலரின் செழிப்பிற்கும் சிறப்பிற்கும் வழிகாட்டுவதும் அன்று. அது அனைத்துலக எண்ணப்போக்கும் நடைமுறையில் உண்டாகும் சிக்கல்களைத் தீர்க்கும் திறனும் வாய்ந்தது. படைப்பு ஆற்றலின் உயர்ந்த கொடுமுடியை எட்டிப்பிடித்த சங்ககாலத் தமிழரின் வாழ்க்கை அறவழியில் சிறப்புறவும் அச்சான்றோர்கள் சிறப்பு மிகு வாழ்க்கைத் தத்துவத்தை வகுத்து அளித்துள்ளனர். அல்லற்பட்டு ஆற்றாது அழுது புலம்பும் மனித குலத்திற்கு அவர்களுடைய நற்செய்தி இன்றும் பிணி தீர்க்கும் மருந்தாகப் பயன்படுகிறது என்றும் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி சிறப்புத் தூய்மை உந்துதல் சக்தியாக விளங்கும் பேராற்றல் வாய்ந்ததாகவும் விளங்குகிறது. வாழ்க்கையில் எதையும் அளவாக மிதமாகச் சுவைக்க வேண்டும் எனும் நடுவழிக்

கோட்பாட்டை உலகக் குடிமகனுக்குப் பயன்படத்தக்க வகையில் அவர்கள் நன்கு வரையறுத்துள்ளனர்.

வாழ்க்கை இன்பமும் துன்பமும் நிறைந்ததாகும். அதனைத் துய்க்கும்பொழுது துன்பத்தால் சோர்வு அடைதலோ வேண்டா. துனபம் நிறைந்ததே வாழ்க்கை எனும் சோர்வினால் மனம் தளர்ந்துவிடக்கூடாது. அதில் இடம் பெற்றுள்ள இனிமையைக் கண்டறிந்து வாழ்க்கையில் நம்பிக்கையும் புத்துணர்ச்சியும் பெறவேண்டும் என்பதை இன்னாது அம்ம இவ்வுலகம் இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தானே (புறநா. 194) என்று அவர்கள் அறிவித்துள்ளனர். வாழ்க்கை வாழ்வதற்கே, துன்பத்தைக் கண்டு துவளவேண்டா, வாழ்க்கையில் இன்பத்திற்கம் இடம் உண்டு. துன்பத்திடையே இன்பம் காணும் மனப் பண்பாட்டைப் பெற்றால் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளி உண்டாகும் எனும் மகிழ்வுநலக் கோட்பாட்டைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் போற்றியுள்ளமை இதனால் புலனாகின்றது.

மக்கள் இடையே பிறப்பாலோ செய்தொழிலாலோ வேற்றுமை பாராட்டக் கூடாது எனும் நோக்கம் உடையவர்களாக அவர்கள் வாழ்ந்தனர். நாடாளும் வேந்தனுக்கும் காட்டிலே வேட்டையாடி வயற்றுப் பிழைப்பை நடத்தும் வேட்டுவனுக்கும் இடையே பிறப்பினாலோ செய்தொழிலாலோ உயர்வு தாழ்வு கற்பிப்பது அறிவுடைமையாகாது. அவர்கள் உண்பதற்குத் தேவைப்படுவது, நாழி அரிசிச் சோறு. உடுப்பதற்குத் தேவைப்படுவன இரண்டு துண்டுகளே. இவற்றைப் போலவே வாழ்க்கையின் மற்றத் தேவைகளும் ஒத்த இயல்புடையனவாகும். எனவே செல்வத்தை ஒருசிலர் சேமித்து வைத்துக்கொண்டு தாங்களே வளமாக வாழ வேண்டும் என்று நினைப்பது தவறு. செல்வத்தைப் பெற்றதன் பயன் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலாகும்[30] எனும் கருத்து புத்துலகச் சிந்தனையைப்போல் ஒலிக்கின்றது.

இங்கே மனிதகுல சமத்துவத்தையும் சகோதரத் துவத்தையும் எக்கால மக்களுக்கும் ஏற்ற வகையில் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் எடுத்து உரைத்துள்ளமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. மனிதநல நாட்டம் சங்க காலத் தமிழருக்கு உயிர்மூச்சாக இருந்ததை இப்பாடல் அறிவிக்கிறது. உலகில் ஒற்றுமை நிலவ வேண்டும். மக்களிடையே இன்று காணப்படும் வெறுப்பும் பிரிவுகளும் ஒழிக்கப்பட வேண்டும். இதற்குரிய ஒரே வழி எல்லா மக்களும் அன்புடன் ஒன்றுபட்டு

வாழவேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இன்றைய அரசுகள் செயல்படத் துடிக்கின்றனர். இதற்குரிய வழியாக எனக்கு எல்லா ஊரும் சொந்த ஊர்தான்; எல்லா மக்களும் உறவினர்தாம். தீமையும் நன்மையும் பிறரால் வருவன அல்ல. துன்பம் உண்டாவதும் துன்பம் தீர்வதும்கூட இவை போன்றவையே. சாவதும் புதுவது அன்றே பிறந்தவர் இறந்துதான் ஆகவேண்டும். வாழ்வது என்றும் நிலையானது. இன்பமானது என மகிழ்ச்சி அடையத் தேவையில்லை. யாதாகினும் வெறுப்பு உண்டாகிறபொழுது மட்டும் இவ்வுலக வாழ்வு துன்பம் உடையது எனச் சலிப்படைய மாட்டோம். மின்னுகின்ற மேகம் குளிர்ந்த மழையால் பெய்வதால் அப்போதும் எப்போதும் துள்ளலே மோதி ஒலித்துக்கொண்டு ஓடுகின்ற நீர்வளம் பொருந்திய பேராற்றிலே நீர் ஓடத்தின் போக்கிலே அதில் விடப்பட்ட தெப்பம் மிதவை ஓடிக் கொண்டே இருக்கும். அதைப்போல் நமது அரிய உயிரும் நாம் செய்த வினைக்கத் தக்கவாறு இன்பமோ துன்பமோ அடையும். இவ்வுண்மையை அறிஞர்களின் நூல்களால் தெளிவாக அறிந்தோம். ஆதலால் நன்மை செய்யும் பெரியோரைக் கண்டு வியப்பு அடையவும் மாட்டோம், சிறியோரைப் பழிக்கவும் மாட்டோம்[73] எனும் மனநிலை பெற முயலுவது மக்களுடைய இலட்சியமாக அமைய வேண்டும். அப்பொழுதுதான் உலகில் அமைதி நிலவும். ஒற்றுமை தழைக்கும் என்பது சங்ககாலச் சான்றோரான கனியன் பூங்குன்றனாரின் உயிருக்குயிரான நம்பிக்கையாகும். இத்தகைய ஓர் உலகம் பற்றிய எண்ணம் சங்ககாலத் தமிழரிடம் அரும்பியதோடு அமையவில்லை. இன்றைய உலகப் பேரறிஞர்களின் எண்ணத்தில் எழுச்சியும் இதயத்தில் மலர்ச்சியும் உண்டாக்கும் விழுமிய இலட்சியமாக அதி வீறுடன் விளங்கி வருவதையும் காணுகின்றோம்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" (புறநா. 192)

## குறிப்புகள்

1. குறள். 39.
2. குறள். 49.
3. குறள். 8.
4. மதுரைக்காஞ்சி, 191.
5. தொல். களவு. நூ. 3.

6. புறம். 55-10.

7. அகம். 355-1.

8. பொருந. 230.

9. குறள். 613.

10. தேவாரம் 3-19-1.

11. திவ்யப்ரபந்தம், குலசேகர ஆழ்வார் பாடல் 4-2.

12. குறள். 314.

13. குறள். 226.

14. குறள். 231.

15. குறள். 241.

16. புறம். 134.

17. மணிமேகலை 16:134.

18. புறம். 18.

19. புறம். 45.

20. புறம். 127.

21. புறம். 123.

22. புறம். 152.

23. புறம். 150.

24. புறம். 91.

25. புறம். 140.

26. புறம். 399.

27. புறம். 176.

28. புறம். 165.

29. தொல். களவியல் நூ.1.

30. குறள். 322.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுடைப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| தமிழில் தத்துவ நூல்கள் | 40.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 95.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 550.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |

---

**A412 தமிழ்ப் பண்பாடு** **40.00**